Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com


# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 | வெள்ளி - 19 | 01 - 07 - யூலை - 2005

## யுத்த நிறுத்தத்தை பாதுகாக்க



## பொதுக்கட்டமைப்பால் முடியுமா?



## மலை.. மலை... திருகோணமலை



# இங்கிலாந்தும் ஆங்கில மொழியும்

"பிரித்தானியப் பேரரசில் சூரியன் என்றும் மறைவதில்லை" என்று பிரித்தானியர்கள் தம்மைத் தாமே மமதையுடன் ஒரு காலத்தில் ஏன் புழுகிக்கொண்டார்கள் என்பதை நாமறிய வேண்டுமானால் சரித்திரப் பாதையிலே சற்றுப் பின் நோக்கிச் செல்ல வேண்டும்.

பிரித்தானியா அல்லது ஒன்று படுத்தப்பட்ட அரசு (United Kingdom) என அழைக்கப்படுகின்ற நாடு சில நூற்றாண்டுகளுக்கு முன்பு பூகோளத்தைச்சுற்றிப் பல நாடுகளைக் கைப்பற்றித் தனது ஆட்சியைச் செலுத்தி வந்தமையால் பிரித்தானியா ஒரு பேரரசாகவும் வல்லரசாகவும் விளங்கியது. கிட்டத்தட்ட இருபதுக்கு மேற்பட்ட நாடுகள் பிரித்தானியாவுக்கு அடிமைப்பட்டிருந்தன. அத்துடன் சூரியனும் வஞ்சமின்றி எந்நேரமும் பிரித்தானியப் பேரரசுக்கு அடிமைப்பட்டிருந்த ஏதாவது ஒரு நாட்டில் தனது ஒளியை வீசிக் கொண்டிருந்ததன் நிமித்தமே மேலே கூறப்பட்ட அந்தச் சொற்பதம் பிரித்தானியர்களால் கூறப்பட்டது.

அடிமைப்பட்டிருந்த நாடுகளிலே தமது அறிவினாலும் ஆற்றலினாலும் ஆங்கில மொழியைக் கற்றுத் தேர்ந்த சிலர் செல்வாக்கான பதவிகளிலே அமர்ந்திருந்தது மாத்திரமின்றி, அந்தச் சொற்பதத்தைப் பெருமையாகவும் தாங்கள் தான் பிரித்தானியர்கள் என்பது போல் கூறிக் கொண்டது மாத்திரமன்றி நடந்தும் கொண்டார்கள் என்பது மனிதர்களுக்குத் தாம் மற்றையவர்களை விட ஏதாவது ஒரு வகையில் உயர்ந்தவர்கள் எனக் காட்டிக்கொள்ள வேண்டும் என்கின்ற பலவீனம் பலருக்குண்டு என்பதைச் சுட்டி நிற்கின்றது. எந்தையரும் எம் பாட்டானார்களும் அந்த அடிமைப் புத்திக்கு விதிவிலக்காக இருக்கவில்லை என்பதும் கசப்பான உண்மைதான்.

அடிமைப்பட்டிருந்த நாடுகளிலே தமிழர் தாயகமும் சிங்கள தேசமும் அடங்கியிருந்தன. ஈழத் தமிழருடைய தாயகம், தேசியம் முழுவதும் சிங்களத் தேசியத்திற்குள் கரைந்து சுதந்திரம் பறிபோவதற்கும் இன்றைய இன்னல்களுக்கும் காரணம் பிரித்தானியா என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல.

இன்று, பிரித்தானியர்களின் ஆங்கில மொழி கிட்டத்தட்ட நாநூற்றி ஐம்பது மில்லியன் அதாவது கிட்டத்தட்ட நாற்பத்தி ஐந்து கோடிக்கு மேற்பட்ட மக்களால் உலகெங்கும் பேசப்படுகிறதாகத் தெரிகிறது. இதில் வேடிக்கையென்னவென்றால் வட சீனப் பகுதிகளில் உபயோகப் படுத்தப்படும் "மன்டறீன்" (Mandarin) எனப்படும் மொழியொன்றே இதற்கும் அதிகமான மக்கள் தொகையினரால் பேசப்படுகின்றது. அப்படியாயின் சீனாவின் மக்கள் தொகை எத்தகையதானது என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

இன்று ஆங்கிலம் முந்நூறுக்கு மேற்பட்ட மில்லியன் மக்களால் பிறப்புரிமை மொழியாக அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா, அயர்லாநது, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, அமெரிக்கா நாடுகளில் பேசப்படுகின்றது. இதற்குக் காரணம் பிரித்தானியர்கள் இந்த நாடுகளுக்கெல்லாம் குடியேறியதும் குடியேற்றப்பட்டதுமாகும். மேலும் சுமார் நூறுக்கும் மேற்பட்ட மில்லியன் மக்களால் குறிப்பாக இந்தியா, பங்களாதேசம், பாக்கிஸ்தான், இலங்கை, மலேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் தமது தேசிய மொழிகளுடன் ஆங்கிலமும் பேசப்படுவதுடன் அறிந்திருப்பதாகவும் தரவுகள் அறியத்தருகின்றன. இத்துடன் இன்று ஆங்கிலம் சர்வதேச விஞ்ஞான மொழியாகவும் தொழில்நுட்ப மொழியாகவும் நாடுகளுக்கிடையேயான வர்த்தக மொழியாகவும் அரச மொழியாகவும் பயன்பாட்டிலுள்ளது. இதற்குக் காரணம் பிரித்தானியா பல நாடுளைக் கைப்பற்றித் தம் வசம் வைத்திருந்தமையாகவும். அந்த நாடுகளின் வளங்களையும் சுரண்டித் தங்கள் வளங்களையும் பெருக்கிக் கொண்டார்கள்.

இதைப் படிக்கும் வாசகனுக்கு மேலே கூறப்பட்டவை மலைப்பாகவும் செய்தியாகவும் இருக்கக் கூடும்.

ஆனால் இப்படியாக உலகப் பிரசித்தி பெற்ற ஒரு மொழியைப் பற்றியும் அதன் நாட்டைப்பற்றியும் நமது இளைய சமுதாயம் மேலும் தெரிந்துகொள்ளும் பொழுது எமது தமிழ் மொழி பற்றியும் எமது தேசம் பற்றியும் தமிழினம் பற்றியும் மேலும் அதிகமாகப் பெருமைப்பட்டுக்கொள்ள ஏதுவாகும்.

இன்று பெரிய பிரித்தானியா என்பது நான்கு நாடுகளின் இணைப்பாகும். அவையாவன: இங்கிலாந்து, வட அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ். இதன் உத்தியோக பூர்வப் பெயரானது "பெரிய பிரித்தானியாவினதும் வட அயர்லாந்தினதும் இணைக்கப்பட்ட அரசு" (United Kingdom of Great Britain and Northern Ireland).

பெரும் பான்மையான ஆங்கிலேயர்கள் (English People) கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிரித்தானியத் தீவுகளுக்கு ஐரோப்பியக் கண்டத்திலிருந்து படையெடுத்தவர்களின் வழித்தோன்றல்களாவர். இவர்களில் முதல் படையெடுத்தவர்கள் கி.மு. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் படையெடுத்த செல்ற்ஸ் இனத்தவர்கள்.

இவர்கள் செல்ற்ஸ் எனும் மொழியையே பேசினார்கள். இம் மொழிகள் பிறெரொன் (Breton) ஐறிஸ் (Irish) வெல்ஸ்(Welsh) ஸ்கொட்டிஸ் கேலிக் (Scotish Gaelic) என்பவற்றை உள்ளடக்கியனவாகவும் இந்தோ ஐரோப்பிய மொழிகளின் ஒரு பிரிவாகவும் இருந்தன.

செல்ற்ஸ் இனத்தவர்கள் குறிப்பாக கி.மு. ஐந்நூறுளவில் வட ஐரோப்பியப் பிராந்தியத்திலிருந்து பிரான்ஸ், போர்த்துக்கல், ஸ்பெயின் மற்றும் பிரித்தானியத் தீவுகளுக்கும் பரவியிருந்தார்கள்.

செல்ற்ஸ் இனத்தவர்களுக்குப் பின் பிரித்தானியாவுக்குப் படையெடுத்த ரோமானியர்கள் பல மொழிகளையும் பல்வகைப்பட்ட பழக்க வழக்கங்களையும் கொண்டிருந்தாலும் லத்தீன் மொழியே இவர்களுடைய மொழிகளுக்கு அடித்தளமாகவிருந்ததுடன் பிரான்ஸ் இத்தாலி, ஸ்பெயின் போன்றவர்களின மொழிகளுக்கும் அடித்தளமாக விருந்தது. ரோமானியர்களின் படையெடுப்புகள் ஜூலியஸ் சீசர் என்கின்ற அதி சிறந்த ரோமானியத் தளபதிகளில் ஒருவனின் காலத்தில் கி.மு. 55-54ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றன. அது மட்டுமல்ல கி.பிந்திய ஆரம்ப காலங்களிலும் ரோமானியப் படையெடுப்புகள் இருந்தன.

பல ஐரோப்பிய நாடுகளின் மொழிகளுக்கெல்லாம் அடித்தளமாக, அத்திவாரமாக அமைந்திருக்கும் லத்தீன் மொழியின் பின்னணியைப் பற்றி நாம் சற்று அறிந்துதான் பார்ப்போமே: கி.மு 1000ஆம் ஆண்டுகளின் பொழுது புராதன ரோமில் சில மலைப் பிரதேசங்களில் வந்தேறு குடிகளாக

**அசுபதியான்**

அமர்ந்தவர்கள் லற்றின்ஸ் எனச் சரித்திர ஆசிரியர்கள் நம்புவதாகக் குறிப்பிடப்படுகின்றது. ரோமைச் சுற்றியுள்ள பகுதிகளான லற்றியம் (Latium) எனும் பிரதேசங்களில் இவர்களில் பலர் குடியேறியதாகவும் நம்பப்படுகின்றது. எனவே லத்தீன் மொழி எங்கிருந்து வந்திருக்கக் கூடும் அம்மொழி ஏன் எப்படி ஐரோப்பிய மொழிகளில் ஆதிக்கம் செலுத்தியிருக்கக்கூடும் என்பதற்கான சில சங்கதிகளையும் நாம் காணக் கூடியதாக உள்ளது.

ரோமானியர்களின் பின் பிரித்தானியாவுக்குப் படையெடுத்தவர்கள் ஆங்கில்ஸ் (Angles) சக்சன்ஸ் (Saxons) ஜூட்ஸ் (Jutes) டேன்ஸ் (Danes) மற்றும் நோமன்ஸ் (Normans) ஆவர். நோமன்ஸ் என்பவர்ச இன்றைய ஸ்கன்டிநேவியா என்ற[illegible]க்கப்படும் சுவீடன், நோர்வே நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

ஆங்கில்ஸ், சக்சன்ஸ், ஜூட்ஸ்: ஜேர்மானியர்களின் மூன்று இனக் குழுக்களில் ஒன்றான ஆங்கில்ஸ் குழு கி.பி. 400 - 500 களில் பிரித்தானியாவுக்குப் படையெடுத்தது. ஜூட்ஸ் சக்சன்ஸ் என்பன ஏனைய இரண்டு குழுக்களாகும். ஆங்கில்ஸ் குழுவும் இவையும் மிக நெருக்கமான தொடர்புடையவை. இவை ஆங்லோ சக்சன்ஸ் எனவும் அறியப்பட்ட ஜேர்மனியக் குழுக்களாகும். இவர்களில் ஜீட்ஸ் இன்றைய டென்மார்க்கின் வட பகுதிகளிலிருந்தும் ஆங்கில்ஸ் தென் பகுதிகளிலிருந்தும் சக்சன்ஸ் இன்றைய டென்மார்க் ஜேர்மனியின் எல்லைப் பிரதேசங்களிலிருந்தும் சென்றவர்கள். வட கடல் டோவர் நீரிணை வழியாக இவர்கள் பிரித்தானியாவை வந்தடைந்தார்கள். இவர்கள் வைக்கிங்ஸ் (Vikings) எனவும் அழைக்கப்பட்டார்கள். குறிப்பாக வைக்கிங்ஸ் என அறியப்பட்டவர்கள் கடல் நிலக் கொள்ளைக் காரர்களாகவும் ஈவு இரக்கமற்ற பிறவிகளாகக் காணப்பட்டார்கள். ஏன் என்றால் பிரித்தானியாவின் வாரிசுகளில் பெரும் பங்காக இவர்கள் இருந்தது தான். நாடு நாடாகச் சென்று சூறையாடினார்கள். அதனால்தானோ என்னவோ பிற்காலத்தில் இவர்களுடைய வம்சாவழியினரான பிரித்தானியர்களும் நாடு நாடாகச் சென்று கைப்பற்றி அவர்களுடைய வளங்களை மிகவும் நாகாகமான முறையில் கொள்ளையடித்தார்கள்.

இதிலே வேடிக்கை என்னவென்றால் கி.பி. 449ஆம் ஆண்டளவில் இவர்களை இங்கிலாந்துக்கு வரும்படி அழைப்பு விடுத்தது அன்றைய பிரித்தானிய அரசனான வோர்ட்டிஜேன் (Vortigern) என்பவனாகும். அன்று வட பகுதியிலிருந்து பிரித்தானியாவுக்குப் படையெடுத்த பிக்ட்ஸ் (Picts) இன்றைய பிரித்தானியாவின் வட மேற்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இஸ்கொட்ஸ் (Scots) இன்றைய ஸ்கொட்லாந்து வாசிகளாவர். பிரித்தானியப் படைகளிடையே ஏற்பட்ட சச்சரவுகளினால் அவர்களிடையே விரிசல்கள் ஏற்பட, அந்த அருமையான சந்தர்ப்பத்தை நழுவவிடாது கடல் தாண்டி வோர்ட்டிஜேன் மன்னனுக்கு உதவ வந்த அந்நியர்கள் மண்ணின் மைந்தர்களான பிரித்தானியர்களையே அவர்களுடைய மண்ணிலிருந்து விரட்டினர்.

இது எதை எமக்கு நினைவூட்டுகின்றதென்றால் தமிழர்களுடைய முந்தைய மன்னர்களான சேர, சோழ, பாண்டியர்கள் தமக்குள்ளே போராடியது மாத்திரமன்றி ஒருவரை ஒருவர் வீழ்த்துவதற்காக அந்நியர்களை நாட, தகுந்த தருணத்திற்காகக் காத்திருந்த அந்நியர்கள் தமிழ் மண்ணில் காலடி வைத்தது மாத்திரமன்றி எம்மவரையே வீழ்த்தி எம் மொழியிலிருந்து பல எழுத்துக்கள், சொற்கள் என்பனவற்றைத் திருடிச் சென்று பின்பு காலப் போக்கில் அவையெல்லாம் தம்முடையவை என்பன போன்று மீழவும் எம்மவர்க்கே கற்பித்தார்கள். கலைகளையும் விட்டு வைக்கவில்லை. அவற்றையும் எம்மவர்க்குத் தம்முடைய சொற்களையும் பதங்களையும் புகுத்திக் கற்பித்தார்கள். எண்ணிக்கையில் அளவிடமுடியாத சொற்களிருந்தாலும் சிலவற்றைக் குறிப்பிடலாம். உதாரணமாகச்: சிறீ, சிறீமான், சிறீமதி, குரு, சிஷ்யா, சிஷ்யன், அனுபவம், தபால், சந்தோஷம் என்பனவற்றை எமது மொழி ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மீண்டும் ஆங்கிலச் சரித்திரத்தைப் பார்ப்போம்.

உதவிக்குப் போனவர்கள் இருந்தவர்களை உதைத்து வெளியேற்றி விட்டு 500 களின் இறுதிப் பகுதிகளில் கிட்டத்தட்ட இங்கிலாந்தின் எல்லைப் பகுதிகளான வேல்ஸ் ஸ்கொட்லாந்து வரை பரவி அமர்ந்தும் விட்டார்கள். இங்கிலாந்து (England) எனும் சொல் பழைய ஆங்கிலச் சொற்களான எங்கிலா அன்ட் லான்ட் (Engla and Land) எனும் சொற்களிலிருந்து உருவானதாகவும் அதன் அர்த்தம் ஆங்கில்ஸின் மண் என்றும் சரித்திர நூல்கள் கூறுகின்றன.

பிற்காலத்தில் ஆங்லோ-சக்சன்ஸ் (Anglo Saxons) என மருவிய அந்நியர்கள் ஏழு பெரிய இராச்சியங்களை அமைத்தார்கள். இவையாவன: நோதம்பிரியா இது இன்றைய (Northumberland)


ஈஸ்ற் அங்கிலியா (East Anglia) அங்கிலியா என்பது ஆங்கில்ஸ் என்பதிலிருந்து மருவியது எஸ்ஸெக்ஸ் (Essex) சசெக்ஸ் (Sussex) வெசெக்ஸ் (Wessex) இன்றைய லெஸ்ரர் (Leicester) மேர்சியாவின் பெரிய நகரமாகவிருந்தது. இந் நகரில் கிபி 100ஆம் ஆண்டுகளில் ரோமானியர்கள் கட்டிய குளிக்கும் தொட்டிகள் இன்றும் காணப்படுகின்றன. கி.முந்தைய நூற்றாண்டுகளில் ரோமானியர்கள் பிரித்தானிய நாட்டைக் கைப்பற்றிச் சில நூற்றாண்டுகள் ஆண்டபின் அவர்களிடமிருந்து ஆங்கிலோசக்ஸன்ஸ் கைப்பற்றியிருந்தார்கள் என்பதை இக் கட்டுரையின் ஆரம்பப் பகுதியில் நாம் பார்த்திருந்தோம். இந்த மூன்று இராச்சியங்களும் சக்சன்ஸ் என்பதிலிருற்து மருவிய பெயர்களாகும். மேர்சியா (Mercia) கென்ற் (Kent) என்பன மற்றைய இரு இராச்சியங்களாகும். இந்த ஏழு இராச்சியங்களும் கெப்ராக்கி (Heptarchy) என அறியப்பட்டன. கெப்ராக்கி என்பது கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டது. இதன் அர்த்தம் ஏழின் அரசு அல்லது ஆட்சி, ஆதிக்கம் (Rule of Seven) என்று கொள்ளலாம். ஏழு இராச்சியங்களை அமைத்தபொழுதும் இவர்களிடையே படையெடுப்புக்கள், போர்கள் என்பன தொடரவே செய்தன. காட்டிக் கொடுப்புகள், துரோகங்கள் அற்ப சொற்ப சுகத்திற்காக விலை போதல் என்பனவும் நடந்தேறின. வந்தேறு குடிகளில் டேன்ஸ் என்பவர்களும் அடங்கியிருந்ததாக நாம் ஆரம்பத்தில் பார்த்தோம். ஆனால் இப்பொழுது இவர்கள் டேன்ஸ் என அறியப்பட்டவர்களல்லர். இவர்கள் ஆங்லோ-சக்சன்ஸ் எனஅறியப்பட்டவர்களாகிவிட்டனர்.

(மிகுதி அடுத்தவாரம்)

# யுத்த நிறுத்தத்தை பாதுகாக்க பொதுக்கட்டமைப்பால் முடியுமா?

நிலாந்தன்

ஒரு சிறுபான்மை அரசாங்கம் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதோ அல்லது உருவாக்கினாலும் அதை அமுல்படுத்துவதோ என்பது ஏதாவது அற்புதங்கள் நிகழ்ந்தால் தவிர சாத்தியப்படப்போவதில்லை என்று கடந்த கிழமை இப்பத்தியில் கூறப்பட்டிருந்தது. ஆனால் இப்பத்தி பிரசுரிக்கப்பட்டு சில மணித்தியாலங்களுக்குள்ளேயே பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டுவிட்டது.



ஆயின், நாட்டில் அதிசயங்கள், அற்புதங்கள் நிகழத்தொடங்கிவிட்டனவா என்ற ஒரு கேள்வி வாசகரிடத்தில் தோன்றலாம்.

இல்லை. நிச்சயமாக இல்லை. அப்படியொரு முடிவுக்கு வருவதற்கு முன்பு சற்று நிதானமாக நிலைமைகளை மதிப்பிடவேண்டும். கடந்த சுமார் பத்து ஆண்டுகால சந்திரிகாவின் ஆட்சி தொடர்பாக தமிழர்களின் மனதில் பதிந்திருக்கும் படம் எதுவோ அதன் அடிப்படையில்தான் முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.

நாட்டில் நடப்பது அதிசயமா, அற்புதமா அல்லது வழமையான ஒரு தந்திரமா, அல்லது நாடகமா அல்லது மேற்கு நாடுகளைத் திசைதிருப்பும் ஆகப்பிந்திய ஒரு உத்தியா? இதில் எது சரி என்று மிக நிதானமாக முடிவெடுக்கவேண்டும்.

ஏற்கனவே 2004இல் ஜே.வி.பியுடன் செய்துகொண்ட ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை முறித்துக்கொண்டுதான் சந்திரிகா பொதுக்கட்டமைப்புக் குறித்த உடன்படிக்கைக்கு வந்திருக்கிறார் என்பதை இங்கே சுட்டிக்காட்டவேண்டும். இதை இன்னும் சிறிது விரிவாகப் பார்க்கலாம்.

அதாவது, ரணிலின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு அன்றைக்கு ஜே.வி.பியுடன் கூட்டுச்சேரவேண்டிய தேவை சந்திரிகாவுக்கு இருந்தது. அந்தக் கூட்டு ரணிலைக் கவிழ்ப்பதற்காக சமாதானத்துக்கு எதிரான கோசத்தை தனது பிரதான உத்தியாகக் கையாண்டது. இன்றோ சமாதானத்தின் பெயரால் அந்தக்கூட்டு உடைந்து போய்விட்டது. அதேசமயம் மேற்கு நாடுகளுடன் ஒப்பீட்டளவில் ஒரு புதிய புரிந்துணர்வு உருவாகத்தொடங்கியிருக்கிறது. 2004இல் சமாதானத்திற்கு எதிராக கூட்டுச்சேர்ந்த சந்திரிகா 2005இல் சமாதானத்திற்காக கூட்டை உடைத்திருக்கிறார். ஏனிந்தத் தலைகீழ் மாற்றம்? அவருக்கு ஒன்றில் அறளைபேர்ந்துவிட்டதா? அல்லது ஞானம் கிடைத்துவிட்டதா?


இல்லை. இரண்டுமே இல்லை. அவருடைய தலைகீழ் மாற்றத்தைப் புரிந்துகொள்வதற்கு பெரிய கோட்பாட்டு விளக்கங்கள் எதற்கும் போகத் தேவையில்லை. அவருடைய குழப்பமான மிகச்சிக்கலான கதம்பமான தனித்தினுசான ஆளுமையை புரிந்து கொண்டாலே போதும். அவருடைய அரசியல்வாழ்வு முழுவதிலும் அவர் இப்படித்தான் அந்தந்தக்கால கட்டத்தின் அவசரத் தேவைகள் நிர்ப்பந்தங்களிற்கேற்ப சுயமுரண்பாடுள்ள தலைகீழ் முடிவுகளை எடுத்து வந்துள்ளார். தமிழ் நாட்டின் ஜெயலலிதாவைப்போலவே இலங்கைத்தீவில் சந்திரிகாவும். இருவருடைய அரசியல் வாழ்விலும் ஏறக்குறைய ஒரே தினுசான அம்சங்கள் நிறைய உண்டு.

எனவே பொதுக்கட்டமைப்பு விசயத்திலும் ஏதும் அதிசயங்கள் அற்புதங்கள் நிகழ்ந்திருப்பதாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஏற்கனவே ஜே.வி.பியுடன் செய்துகொண்ட ஒரு உடன்படிக்கையை முறிப்பதிலிருந்து இப்புதிய உடன்படிக்கை தொடங்குகிறது. இது இன்னொரு புதிய உடன்படிக்கைக்காகவோ அல்லது வேறேதும் விசேச நோக்கங்களுக்காகவோ முறிக்கப்படமாட்டாது என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமும் கிடையாது.

மேற்கு நாடுகள் மூப்புக்கு நிற்கின்றன என்ற ஒரு சிறு பாதுகாப்பு ஏற்பாட்டைத்தவிர இலங்கைத்தீவில் கிழிக்கப்பட்ட மற்றும் அமுல்செய்யப்படாத உடன்படிக்கைகளின் கசப்பான வரலாற்று அனுபவத்திற்கூடாகப் பார்த்தால் உண்மை மிகத்தெளிவாகத்தெரியும். அதாவது இப்பத்தியில் கடந்த கிழமைக்கு முதற்கிழமை கூறப்பட்டதுபோல உடன்படிக்கைகள் செய்வதல்லப் பிரச்சினை அதைவிடப் பெரிய பிரச்சினை உடன்படிக்கைகளை அமுல்படுத்துவதே.

ஏற்கனவே இரண்டு தலைவர்கள் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை இடையில் இறுகிப்போய் நிற்கிறது. தமது அரசாங்கத்தின் தலைவர் ஒருவர் கையெழுத்திட்ட உடன்படிக்கையையே அமுல்படுத்த அவர்கள் தயாரில்லை. இந்நிலையில் அரசியல் அந்தஸ்து அற்றவரும் மக்களின் ஆணையைப் பெறாதவரும் வெறும் நிர்வாக அதிகாரியுமான புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரால் கையொப்பமிடப்பட்ட ஒரு உடன்படிக்கை எவ்வளவு தூரத்திற்கு மதித்து நிறைவேற்றப்படும்?

மேலும் இலங்கைத்தீவின் இன விவகாரம் சம்பந்தப்பட்டு இதுவரையிலும் செய்யப்பட்ட எல்லா உடன்படிக்கைகளையும் எடுத்துப்பார்த்தால் ஒரு பொது உண்மை தெரியவரும். அதன்படி சிங்களவர் தரப்பில் உடன்படிக்கை செய்வோரும் அதை எதிர்ப்போரும் ஒரே ஆட்களே. அரசாங்கத்தில் இருப்பதால் ஆளுங்கட்சி சர்வதேச நிர்ப்பந்தங்களை மதித்து சில விட்டுக்கொடுப்புக்களைச்செய்து உடன்படிக்கைகளுக்குச் சம்மதிக்கும். ஆனால் அதை அவர்கள் இதய சுத்தியுடன் விசுவாசமாகச் செய்வதில்லை. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பினுள் சிக்கி அந்த உடன்படிக்கை சிதையத்தக்க விதத்தில் ஒரு அரசியற் சூழலை அரசாங்கமே மறைமுகமாக ஊக்குவிக்கும்.



இதில் உடன்படிக்கையின் எதிரிகள் அரச தரப்பைவிடவும் வெளிப்படையானவர்கள் என்றே கூறவேண்டும். அவர்கள் சமாதானத்தின் எதிரிகளாக துலக்கமாக வெளித்தெரிவார்கள். ஆனால் அரசாங்கமோ உள்ளூர மெய்யான சமாதானத்தை எதிர்த்தபடி வெளிப்படையாக உடன்படிக்கைகளைச் செய்வதுபோல ஒருவித இரண்டக நிலையுடன் காணப்படும். இத்தகைய, அரசாங்கங்களின் சமாதானத்திற்கு விசுவாசமற்ற ஒரு நிலைப்பாட்டின் பின்னணியில்தான் உடன்படிக்கைகள் ஒன்றில் கிழிக்கப்படுகின்றன. அல்லது தோற்றுப்போகின்றன. இது பொதுக்கட்டமைப்புக்கும் நடக்கமுடியும்.

இதில் யூ.என்.பியின் நிலைப்பாடு சற்று வித்தியாசமானதாகத் தோன்றக்கூடும். தனது மேற்குநாடுகளின் எஜமானர்களுக்கு விசுவாசமாக அவர்களின் சொற்கேட்டு யூ.என்.பி பொதுக் கட்டமைப்பை எதிர்க்காதிருக்கிறது. அதோடு பொதுக்கட்டமைப்பில் சிக்கி சந்திரிகா ஒருநாள் தோற்றுப்போவார் என்றும் யூ.என்.பி கணக்குப்போடுகிறது. பொதுக்கட்டமைப்புடன் போய் சந்திரிகா எங்காவது முட்டுப்பட்டு விழட்டும் என்று ரணில் காத்திருக்கிறார். எனவே யூ.என்.பியின் எதிர்ப்பு இல்லையென்பதும் பொதுக்கட்டமைப்புக்குள்ள சாதகமான அம்சங்களில் ஒன்று.

இலங்கைத்தீவின் இதுவரையிலுமான உடன்படிக்கைகள் எல்லாவற்றிலிருந்தும் பொதுக்கட்டமைப்பு துலக்கமாக வேறுபடும் இடம் இது. அதாவது பிரதான எதிர்க்கட்சி அதை எதிர்க்காதிருப்பது.

ஆனால், சந்திரிகா விசுவாசமாக இருக்கிறாரா என்பதே இங்கே தொங்கிக்கொண்டிருக்கும் மிகப் பெரிய கேள்வி. இந்தக் கேள்விக்கான விடைதான் ஒரு யுத்தத்தைத் தடுத்து நிறுத்த பொதுக்கட்டமைப்பால் முடியுமா? என்ற கேள்விக்கான விடையாகவும் அமையமுடியும்.

ஏனெனில் பொதுக்கட்டமைப்பின் வெற்றியும் யுத்தநிறுத்தத்தைப் பாதுகாப்பது என்பதும் முழுக்க முழுக்க சமாதானத்துக்கான அரசாங்கத்தின் விசுவாசத்திலேயே தங்கியிருக்கின்றன.

பொதுக்கட்டமைப்புக்கும் யுத்த நிறுத்தத்திற்கும் நேரடியாகச் சம்பந்தம் இல்லையென்று கூறமுடியாது. யுத்த நிறுத்தம் என்ற ஒன்று இல்லாமல் அதாவது புரிந்துணர்வு உடன்படிக்கை என்ற ஒன்று இல்லாமல் பொதுக்கட்டமைப்பு என்ற ஒன்று வந்திருக்கவேமுடியாது.

இதில் இருதரப்பாரும் ஒத்துக் கொள்வதுபோல பொதுக்கட்டமைப்பானது, இருதரப்பும் அடிக்கடி சந்திக்கவும் பரஸ்பரம் கலந்துபேசவும், பழகவும், சேர்ந்து இயங்கவும் வேண்டிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தருவதன்மூலம் பரஸ்பரம் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்ப உதவக்கூடும் தான். ஆனால் இந்த நம்பிக்கைகளால் தற்சமயம் நிகழ்ந்துவரும் அரைமென்தீவிர யுத்தத்தை தடுத்துநிறுத்த முடியுமா?

பொதுக்கட்டமைப்பு சுனாமியால் வந்தது. ஆனால் நிலவும் அரைமென்தீவிர யுத்தமோ சுனாமிக்கு முந்தியது. அது கருணாவிடமிருந்து தொடங்குகிறது. அரசாங்கம் கருணாவுக்கு பின்தளம் அமைத்துக்கொடுக்கிறது என்ற குற்றச்சாட்டுக்களினடியாகத் தோன்றிய நம்பிக்கையீனங்களிலிருந்து தொடங்கியது இந்த மென்தீவிர யுத்தம்.

கிழக்கில் தினம் ஒரு தலை உருளும் அளவிற்கு ஒரு பாரதூரமான நிலையை அது எப்பொழுதோ அடைந்துவிட்டது. இந்நிலையில் அந்த மென்தீவிர யுத்தத்தை அப்படியே வைத்துக்கொண்டு அதற்குச் சமாந்தரமாக பொதுக்கட்டமைப்பை வளர்த்துச்செல்லமுடியுமா?

எந்தவொரு நம்பிக்கையையும் நொருங்கச்செய்யும் அரைமென்தீவிர யுத்தமொன்றைத் தன்னுள் வைத்திருக்கும் இந்த கோறையான யுத்தநிறுத்தத்தின் மீது ஒரு பொதுக் கட்டமைப்பை எப்படிக்கட்டியெழுப்ப முடியும்?

எனவே, சந்திரிகா பொதுக்கட்டமைப்பில் தனக்கிருக்கும் விசுவாசத்தை நிரூபித்துக்காட்டவேண்டிய இடம் எதுவெனில்-நிகழும் அரைமென்தீவிர யுத்தத்தில் அரசாங்கம் கருணாவிற்குப் பின்பலமாக இல்லை என்று புலிகளை நம்பச்செய்வது தான். அந்த ஒரு நம்பிக்கைதான் யுத்தநிறுத்தத்திற்கு புதிய ரத்தத்தைப் பாய்ச்சும். அதோடு பொதுக் கட்டமைப்புக்கும் ஒரு புனிதமான இடத்தைக்கொடுக்கும். இங்கிருந்து தொடங்கியே பொதுக்கட்டமைப்புக்கான அடிப்படைகளை மட்டுமல்ல சமாதானத்துக்கான அடிப்படைகளையும் பலப்படுத்தமுடியும்.

மாறாக, பொதுக்கட்டமைப்பின் மூலம் கட்டியெழுப்பப்படும் நம்பிக்கைகள் இந்த அரைமென் தீவிர யுத்தத்தைத் தடுத்துநிறுத்த போதுமானவைகளாக இருக்கப்போவதில்லை.

பொதுக்கட்டமைப்புக் கைச்சாத்தாகி சில நாட்களுக்குள் வெலிகந்தையில் வைத்து புலிகளின் வாகன அணிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் இதைத்தான் முன்னுணர்த்துகிறது.

பொதுக்கட்டமைப்பை அமுல்படுத்துவதென்றால் அதற்கு முதலில் யுத்த நிறுத்தத்தை பலப்படுத்தவேண்டும். யுத்தநிறுத்தத்தைப் பலப்படுத்துவதென்றால் அரசாங்கம் சமாதானத்துக்கான தனது கடப்பாட்டையும் விசுவாசத்தையும் புலிகள் நம்பும் விதத்தில் நிரூபித்துக்காட்டவேண்டும். இல்லையென்றால் பொதுக்கட்டமைப்பால் உருவாக்கப்படக்கூடிய நம்பிக்கைகளையும் இந்த அரைமென் தீவிர யுத்தம் அடித்துக்கொண்டு போய்விடும்.

எனவே பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது என்பது இந்த அரைமென் தீவிர யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதிலிருந்தே தொடங்கப்படவேண்டும். மாறாக பொதுக்கட்டமைப்பை உருவாக்கி அதன்மூலம் பரஸ்பரம் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பி அதன்மூலம் யுத்தநிறுத்தத்தைப் பாதுகாக்கலாமா என்று முயற்சிப்பது என்பது புண்ணுக்கு உள்மருந்து கொடுக்காமல் வெளி மருந்தைப் பூசிச் சுற்றிக்கட்டுவதற்கு ஒப்பானதே.

# காணிக்கை...



ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பின் பணியாளரான கன்னமுத்து அரசகுமார் அவர்கள் பத்திரிகை விநியோகத்திற்காகச் சென்று கொண்டிருந்தவேளை புதன் கிழமை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.


மட்டக்களப்பில் தினமும் மனித தலைகளை குறி வைக்கும் புல்லுருவிகளின் முதன்மையான இலக்காக ஊடகவியலாளர்கள் இருந்து வருகின்றமை தெரிந்ததே.

மட்டக்களப்பில் பணியாற்றும் ஊடகவியலாளர்களைஅந்த மண்ணிலிருந்து அகற்றுவதே அவர்களின் நோக்காக உள்ளது.

இதன்மூலம் மக்கள் மத்தியில் உண்மையும், தெளிவும் சென்றடைவதை தடுத்து நிறுத்திவிட முடியுமென கருதுகின்றனர். முதலில் கருத்துக்களை உருவாக்குபவர்களை குறிவைத்த துப்பாக்கிகள் திரு.அரசகுமாரனை சுட்டுக்கொன்றதன்மூலம் கருத்து கூறுபவர்கள் எவ்வளவு முக்கியமோ அதேபோன்று மக்களிடம் கருத்தை விநியோகிப்பவர்களும் முக்கியமானவர்கள் என்பதை சுட்டிக்காட்டியுள்ளனர்.இந்த வகையில் கடந்த புதன் கிழமை எதிரிகளின் துப்பாக்கிக்கு இரையான அரசகுமார் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதோடு அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தின் துயரத்தில் நாமும் பங்கெடுக்கிறோம்.

# சந்தர்ப்பத்துக்காக காத்திருக்கிறார்கள்

**பு.சத்தியமூர்த்தி**



ஆயிற்று. ஒருவாறாகப் பொதுக்கட்டமைப்பு என்ற ஒரு நிர்வாக அமைப்பு கைச்சாத்தாகி விட்டது. ஆனால் அதைவைத்து நடக்கும் அரசியற் பிழைப்பு நாடகங்களின் காட்சிகள் இன்னமும் தொடர்ந்தபடியே இருக்கின்றன. சிங்கள இனவாதிகள், பௌத்தபிக்குகள், ஜே.வி.பியினர் என்ற இந்தப் பட்டியலில் ஒரு தொகுதி முஸ்லிம் அரசியல்வாதிகளும் இணைந்து கொண்டுள்ளனர்.

யார் இந்த 'ஒருதொகுதி' முஸ்லிம் அரசியல்வாதிகள்? ஏனைய முஸ்லிம் அரசியல்வாதிகள் பொதுக் கட்டமைப்புவிடயத்தில் என்ன நிலைப்பாட்டில் உள்ளனர்? இந்த இரு சாராரையும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் எவ்வாறு கையாள முனைகிறார்கள்? இவை இலங்கைத் தீவின் இன்றைய அரசியற் களத்தினைப் புரிந்துகொள்வதற்கு மிகவும் முக்கியமான கேள்விகளாகும்.

தாம் சார்ந்த கட்சிகளின் தலைவர்கள் வகிக்கும் அமைச்சுப் பொறுப்புக்களிலிருந்து விலகவேண்டுமென காலக்கெடுவை விதித்திருக்கின்றார்கள் இரு பிரபல முஸ்லிம் அரசியல்வாதிகள். பொதுக் கட்டமைப்பில் தனித்தரப்பாகக் கையெழுத்திடுவதற்கு முஸ்லிம் தரப்புக்கு இடமளிக்கப்படவில்லையெனக் கண்டனம் தெரிவித்துள்ள இவர்கள்; இதற்குப் பிறகும் தம்மை மதிக்காத; கண்டுகொள்ளாத அரசாங்கத்தில் அங்கம் வகிக்கக்கூடாதென தமது கட்சிகளின் தலைமைகளிற்கு அழுத்தங்களைப் பிரயோகித்துவருகிறார்கள்.

இவர்களின் முதலாமவர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தேசிய ஐக்கிய முன்னணியின் (நுஆ) துணைத்தலைவர். துறைமுகங்கள், விமானசேவைகள் நிறுவனத்தின் தலைவராக பதவி வகித்த ஹிஸ்புல்லா திடீரெனத் தனது பதவியைத் துறப்பதாக காத்தான்குடியிலுள்ள தனது அலுவலகத்தில் பத்திரிகையாளர்களைக் கூட்டி அறிவித்தார். அத்தோடு நின்றுவிடாத அவர்; தன்னைப்போன்று தனது கட்சித் தலைவியான பேரியல் அஷ்ரப்பும் அவரது அமைச்சர் பதவியிலிருந்து விலகவேண்டுமெனவும் நிபந்தனை விதித்தார். இதற்கு 48 மணிநேரத்தை அவகாசமாக வழங்கியதுடன் தவறினால், தான் (நுஆ) அக்கட்சியிலிருந்து விலகப்போவதாகவும் அறிவித்தார். (இப்போது இதனை 7நாட்களாக நீடித்துள்ளது வேறுகதை)

அடுத்த அறிவிப்பு தேசிய முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் எச்.எம்.ஹரீஸ் மற்றும் துணைத்தலைவர் அசீஸ் ஆகியோரிடமிருந்து வெளியானது. தமது கட்சியின் தலைவர் அதாவுல்லா மற்றும் தவிசாளர் அன்வர் இஸ்மாயில் ஆகியோர் வகிக்கும் அமைச்சர் பிரதி அமைச்சர் பதவிகளை துறக்கவேண்டுமென வலியுறுத்திய இவர்கள்; ஏழு நாட்களுக்குள் இது நடைபெறாவிட்டால் அவர்கள் இருவரையும் கட்சியைவிட்டு வெளியேற்றப் போவதாகவும் எச்சரித்திருந்தனர்.

இவற்றுக்கு முன்பாக தற்போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பாக ஒப்பமிட அனுமதியளிக்காத அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் பதவிவிலக வேண்டுமென வலியுறுத்தியிருந்தார்.

இந்த அறிவித்தல்கள் அனைத்தையும் ஒன்றுசேர்த்துப் பார்க்கையில், வெளித்தெரிவது என்ன? இவ்வாறு அறிவித்துக்கொண்டும் காலக்கெடுகளை விதித்துக்கொண்டும் இருப்பவர்கள் அனைவருமே அமைச்சுப் பதவிகளில் இல்லாதவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இல்லாதவர்களுமே என்பது கவனிக்க வேண்டியதாகும். தாங்கள் பதவிகளில் இல்லாமல் இருக்கும்போது வசதியாக அடுத்தவர்களைப் பதவி துறக்கும்படி வலியுறுத்துகிறார்கள் என்பதே இதன் உள்ளர்த்தமாகும்.

இதனூடாக இவர்கள் அடைய முற்படுவது என்ன? துண்டு துண்டாகச் சிதறிக்கிடக்கும் முன்னாள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் கூறுகளில் இரண்டு (நுஆ, தேசிய முஸ்லிம் காங்கிரஸ்) மற்றும் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரசிலிருந்து போட்டியிட்டு வெற்றிபெற்று கட்சி மாறிநிற்கும் 'அதிருப்தியாளர் குழு' ஆகியவை சந்திரிகா அம்மையாரின் முன்னாள் ஐ.ம.சு முன்னணியினதும், தற்போதைய பொ.ஐ. முன்னணியினதும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றன. இந்த மூன்று தரப்புகளிலிருந்தும் பலர் அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகளைப்பெற்று அதிகாரச் சுகத்தை அனுபவிக்க ஏனைய முஸ்லிம் அரசியல்வாதிகள் வெறுமனே அறிக்கைகளை விடுத்துத் தமது இருப்பை நினைவூட்டிக் கொண்டிருந்தனர். பதவிகளைப் பெற்றுக் கொண்டவர்களோ தமது கட்சிகளைக்கூட மறந்துவிட்டு, குறைந்த பட்சம் கட்சிக் கூட்டங்களைக்கூட நடத்தாது கொழும்பே தஞ்சமெனக் கிடக்கின்றனர். இதனால் கட்சிகளின் சார்பில் அரசாங்கத்திடமிருந்து கிடைப்பன யாவுமே அவர்களை மட்டுமே சென்றடைந்துவிடுகின்றன. இதனால் ஆட்சியிலிருக்கும் முஸ்லிம் கட்சிகளின் பதவியிலிருக்காத தலைவர்கள் 'காய்ந்து வறண்டு' சந்தர்ப்பத்துக்காகக் காத்துக்கிடந்தனர்.

முஸ்லிம் காங்கிரசின் கதையோ அதையும்விடப் பரிதாபமானது. அரசாங்கத்தோடு ஒட்டிக்கொண்டிருந்து பழகிவிட்ட அதற்கு தற்போது எதிரணியில் இருப்பது மிகுந்த பிரச்சினையாகவுள்ளது. அதனாலேயே அதன் பட்டியலில் தெரிவான எம்.பிக்கள் நால்வர் அதிருப்திக்குழு என்ற பெயரில் கட்சி மாறி அமைச்சர்கள் ஆகிவிட்டனர்.(இவர்களில் ஒருவரான அமைச்சர் அமீர்அலியும் பதவி துறப்புப் பற்றிக் கதைத்திருக்கிறார்) சவடாலுக்குப் பேர்போன கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு கட்சி மாறியவர்களையும், தனது முன்னாள் சகபாடிகளையும் ஒரு பிடி பிடிப்பதற்கு இது நல்லதொரு வாய்ப்பைக் கொடுத்து விட்டிருக்கிறது.

ஆக, பொதுக்கட்டமைப்பு என்றதொரு வெறும் நிர்வாக அமைப்பொன்றுக்கான ஆவணத்தின் மீது தமது அரசியல் இருப்புக்கான போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் முஸ்லிம் அரசியல்வாதிகள். இதன்மூலம் அதிகம் உணர்வூட்டப்படக்கூடிய முஸ்லிம் சமூகத்தை மீளவும் ஒருதடவை வெறியூட்டப்போகிறார்கள் இவர்கள்.' "முஸ்லிம் சமூகம் கைவிடப்பட்டு விட்டதாகவும் இந்தப் பயங்கரமான



நிலையிலிருந்து அதனை காக்க தம்மால் மட்டுமே முடியுமென்றும் எனவே அடுத்த தேர்தலில் தம்மையே தெரிவு செய்யும் படியும்" இவர்கள் அனைவருமே உச்சஸ்தாயியில் கத்தப் போகிறார்கள். இதற்கு வலுவூட்டும் முகமாகப் பல்வேறு திரைமறைவு வேலைகளையும் ஒப்பந்தங்களையும் செய்யப்போகிறார்கள்.

இவ்வாறு அரங்கேறும், அரங்கேறவுள்ள காட்சிகளின் பின்னேயுள்ள செய்தி என்ன? சிறிலங்காவில் மீண்டுமொரு தேர்தல் விரைவில் வரப்போகிறது என்பதே அது. அந்தத் தேர்தலில் முஸ்லிம் மக்களின் முன்பு செல்வதற்காக அவர்களது வாக்குகளைச் சுருட்டுவதற்காக ஒரு முகாந்திரத்தைத் தேடுவதற்கு ஒவ்வொரு முஸ்லிம் அரசியல்வாதியும் அந்தரப்படுவதன் வெளிப்பாடே தற்போது அரங்கேறும் காட்சிகளாகும். அதை ஒவ்வொரு அரசியல்வாதியும் தத்தமது பிரதேசத்தினதும் கட்சியினதும் கள நிலவரத்துக்கேற்ப நிகழ்த்திக் காட்டுகிறார்கள்.

இவ்வாறு விடுக்கப்பட்ட அறிக்கைகள் அனைத்துமே தன்னிச்சையாக எடுக்கப்பட்ட முடிவுகளும், அறிவிக்கப்பட்ட அறிவித்தல்களுமாகும். இதனுடைய ஒரே பின்புலம் பதவியாகும்.

ஆனால் இது யாருக்கு இலாபமாக அமையப்போகிறது? தங்களது பல்லைக்குத்தி தங்களது மூக்கிலேயே பிடிக்கின்ற இவர்களைக் கண்டு சிங்களப் பேரினவாதிகள் அகமகிழ்ந்துபோயிருக்கிறார்கள். "கைவிடப்பட்ட முஸ்லிம் மக்கள்" குறித்து பௌத்த பிக்குகளும், சிவப்புச் சட்டைகளும், தினேஸ் குணவர்த்தன உட்பட்ட ஏனைய கடும் போக்காளர்களும் உருகி வழிகிறார்கள். ஐ.தே.கட்சியும் தன்பங்குக்கு 'முஸ்லிம்களின் நலன்களில்' அக்கறையை வெளிப்படுத்துகிறது.

ஆக முஸ்லிம் மக்களின் தலையிலே முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது பதவிமோக மிளகாயை அரைக்கத்தொடங்கிவிட்டார்கள். பொதுக்கட்டமைப்புக்குளவி நன்றாகவே அரைக்கிறது. பேரினவாதிகளும் சிங்களக்கட்சிகளும் தாளம் போடுகின்றன. ஆனால் அரைபடும் மிளகாய் முஸ்லிம் மக்களின் முகத்திலேதான் வழியப் போகிறது. அது எரிச்சலை ஏற்படுத்தப்போவதென்னவோ அப்பாவி மக்களுக்குத்தான்!

# மலை... மலை... திருகோணமலை

எல்லா நெடுஞ்சாலைகளும் ரோமாபுரிக்குச் செல்கின்றன என்பது மிகப் பிரபலமான ஐரோப்பியப் பழமொழி. ரோமாபுரியை அகற்றிவிட்டுத் திருகோணமலை என்று சொல்லிப் பாருங்கள் இன்னுமோர் பழமொழி பிறக்கும். திருகோணமலை பற்றிய கரிசனை இன்று நேற்றுப் பிறந்ததல்ல என்று ஆசிய மனிதன் குறிப்பாகத் தமிழன் கடலில் இறங்கினானோ அன்றே அதன் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. கடலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சோழராட்சி விரிவடைந்து இலங்கையையும் உள்ளடக்கியபோது சோழர்களின் முக்கிய துறைமுகமாக திருகோணமலை இடம்பெற்றது. முதலாம் பரந்தகன் ஆட்சிக் காலத்தில் கி.பி 944அளவில் வட இலங்கை முழுவதும் சோழர் வசமாகியது. முழுத்தீவும் முதலாம் இராஜேந்திர சோழன் ஆட்சியின்போது கி.பி 1012 அளவில் சோழமண்டலத்தின் ஒரு பகுதியானது. சோழர் ஆட்சி இலங்கையில் 126 வருடம் தொடர்ந்தது. சோழ சாம்ராச்சியத்தின் அங்கமான இலங்கைத் தீவு 'மும்முடிச் சோழ மண்டலம்' என்று அழைக்கப்பட்டது. சோழர் ஆட்சித் தலைநகரான பொல்லநறுவை ஜனநாதபுரம் அல்லது ஜனநாதமங்கலம் என்று பெயரிடப்பட்டது.

சோழர் ஆட்சிக் காலத்தில் மூன்று பிரதான துறைமுகங்கள் அவர்கள் பாவனையில் இருந்தன. செம்பியன்பற்று வடக்கிலும், மேற்கில் மாதோட்டமும் கிழக்கில் திருகோணமலையும் போக்குவரவுக்கும், வர்த்தகத்திற்கும் உதவின. செம்பியன் பற்றிலிருந்து பொல்லநறுவை வரை நிலப்பாதை எப்போது இருந்தது. செம்பியன் என்பது சோழ மன்னர் பெயராகும். சோழர் ஆட்சியை நினைவுறுத்தும் எச்சமாகச் செம்பியன்பற்று இன்று நிலவுகிறது. முதலாம் இராஜேந்திரனுக்குப்பின் (1012-1044) ஆட்சிக்கு வந்த சோழமன்னர்கள் பர்மா நாட்டின் தென் பகுதிகளையும் மலாயத் தீபகற்பத்தையும் சோழ சாம்ராச்சியத்தில் இணைத்தனர். முதலாம் ராஜ ராஜ சோழனின் கீர்த்தி மொழியில் '12,000 பழம் பெரும் ஆழ்கடற் தீவுகளைக்' கைப்பற்றியதாகவும் கூறப்படுகிறது. தமது இலங்கை ஆட்சிக் காலத்தில் சோழர்கள் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டிருப்பினும் திருகோணமலைதான் அவர்களுடைய உண்மையான தலைமைத் தானமாக இடம்பெற்றது. சோழரது கடற்படைத் தேவைகள், தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனான ஆட்சித் தொடர்புகள், படையெடுப்புக்கள் போன்றவற்றிற்கு திருகோணமலை மிகவும் பொருத்தமாக அமைந்தது.

பன்னிரண்டாம் நூற்றாண்டுடன் சோழராட்சி முடிவுற்ற பின் திருகோணமலையின் முக்கியத்துவம் சரிந்தது. ஆனால் கிழக்கு நாடுகள் மீது ஐரோப்பியர்களின் பார்வை விழத் தொடங்கியபின் திருகோணமலையின் சிறப்பு மீண்டும் தலைதூக்கியது. ஒரு முப்பது வருட காலத்திற்குள் (1490-1520) ஐரோப்பியர்கள் கடல் மார்க்கமாக உலகின் பல பகுதிகளைச் சென்றடைந்தனர். இதன் காரணமாக ஐரோப்பாவின் உலக மேலாதிக்கம் தோன்றியது. தென் கிழக்கு ஆசியா, தெற்கு ஆசியா ஆகிய நாடுகளுக்கு முதன் முதலாக வந்த ஐரோப்பியர்கள் போத்துக் கேயர்களே. இந்தியாவின் மேற்குக் கரையில் 1500 இல் போத்துக்கேயர்கள் தமது முதலாவது வர்த்தக நிலையத்தை அமைத்தனர். இதன் பின் போத்துக் கேயக் கப்பல்கள் இந்தியாவுக்கு மிகவும் கிரமமாக வரத்தொடங்கின. 1510 அளவில் தமது ஆயுத பலத்தின் மூலம் இந்தியாவின் மேற்குக் கரையைப் போத்துக் கேயர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். அடுத்த வருடம் 1511 இல் ஏலம், கறுவா, கராம்பு, மிளகு போன்றவற்றின் வர்த்தக மையமான மலாயத் தீபகற்பத்தின் கேந்திர இடத்திலுள்ள மலாக்காவை போத்துக்கேயர்கள் கைப்பற்றினர். ஏறத்தாழச் சோழர்களின் இடத்தை போத்துக்கேயர்கள் பிடித்து விட்டார்கள் என்று துணிந்துகூறலாம்.

போத்துக்கேயர்களின் தெற்காசியச் சாம்ராச்சியத்திற்கு திருகோணமலைத் துறைமுகம் செய்யக்கூடிய அதியுச்ச பயன்பாட்டை முதன் முதலாக உணர்ந்த ஐரோப்பியர் போத்துக்கேயக் கடற்படைத் தளபதி அல்பொன்சோ அல்புகுவெர்குவே (ALFONSO ALBUQUERQVE) ஆவர். இந்துமா கடலையும் இன்றைய தீமோர் வரை நீண்டிருந்த போத்துக்கேய, ஆசிய சாம்ராச்சியத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு திருகோணமலை பேருதவி புரியும் என்பதை அவர் உணர்ந்தார். இத்தூர நோக்குடன் அவர் தென் சீனக் கடலையும் தூர கிழக்கையும் கண்காணிப்பதற்காக மலாக்கா படைத்தளத்தை நிறுவினார். சுயஸ்கால்வாய் வெட்டப்படாத காலமாகையால் ஆபிரிக்கத் தென் முனையைச் சுற்றி வந்து இந்து மா கடலுக்குள் நுழையும் கலங்களை கண்ணோட்டமிடுவதாக இந்திய மேற்குக்கரையோரக் கோவாவில் தளம் அமைத்தார். அரேபியக் கடலில் சொக்கொத்திராத் தீவிலும் அதே நோக்கில் அவர் காலூன்றினார். இறுதியாக இந்துமா கடலின் மையத் தீவான இலங்கையின் திருகோணமலையிலும், கொழும்பிலும் அவர் போத்துக்கேயப் பாசறைகளை நிறுவினார்.

போத்துக்கேயர் ஆட்சி மிகக் குறைந்த காலம் நிலவியது. அவர்களுக்கு பின் வந்த ஒல்லாந்தர் ஆட்சி 140 வருடம் நீடித்தது. 1780இல் ஒல்லாந்தர்களுக்கும் பிரித்தானியர்களுக்கும் இடையில் ஐரோப்பாவில் போர் தொடங்கியது. திருகோணமலை மீது கண்



வைத்திருந்த பிரிட்டிசார் அதை உடனடியாகக் கைப்பற்றினர். இலங்கைத்தீவில் பிரிட்டிசார் கைப்பற்றிய முதலாவது பகுதி திருகோணமலை தான் என்பது வரலாறு. 1948 இல் சிங்களவர்களுக்குச் சுதந்திரம் வழங்கியபின்பும் 1956 ஆம் ஆண்டுவரை அவர்கள் தம்வசம் வைத்திருந்த பகுதியும் அதுவேதான். 1947 இல் இலங்கையுடன் பிரித்தானியா செய்து கொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம் திருகோணமலைத் துறைமுகம், கட்டுநாயக்கா விமானத்தளம் 'தேவைப்பட்டால் வேறு முகாம் அல்லது தளம்' ஆகியவற்றைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் உரிமையை பிரித்தானியா பெற்றுக்கொண்டது. 1956இல்

**-அன்பரசு-**


எஸ். டபிள்யூ பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்ததும் இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்தார். பிரிட்டிசாரும் மறுப்பின்றி வெளியேறினர். சாம்ராச்சியம் [illegible]ந்த நிலையில் திருகோணமலையா[illegible] என்ன பயன் என்பது பிரிட்டிசாரின் நிலைப்பாடு.

19ஆம் நூற்றாண்டிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பிரிட்டிசார் தமது இந்து மாகடல் ஆதிக்கத்தை வலுப்படுத்தினர். அதன் கிழக்கு, வடக்கு, மேற்கு திசைகளிலுள்ள நாடுகளைப் படிப்படியாகத் தமதாக்கினர். இந்து மாகடல் ஒரு 'பிரிட்டிஷ் ஏரி' (ABRITISH LAKE) என்று அழைக்கப்படலாயிற்று. சோழர்களின் கடலாதிக்கக் காலத்தில் அது தமிழர்களின் ஏரி என்று அறியப்பட்டது நினைவிருக்கலாம். பிரிட்டிசார் காலத்தில் கப்பல்கள் நிலக்கரியில் இயங்கின. திருகோணமலையில் நிலக்கரி சேமிப்பதற்கான வசதிகளை பிரிட்டிசார் செய்தனர். 1869 இல் சுயஸ் கால்வாய் திறக்கப்பட்டதும் திருகோணமலையின் முக்கியத்துவம் பன் மடங்காக உயர்ந்தது. 2 ஆம் உலகப் போர் காலத்தில் திருகோணமலை மென்மேலும் பலப்படுத்தப்பட்டது. எண்ணெயில் கப்பல்கள் இயங்கத்தொடங்கியதும் எண்ணெய் சேமிக்கும் பாரியளவு மையமாக திருகோணமலை தரமுயர்த்தப்பட்டது. போர்க்காலத் தேவைக்காக ஒவ்வொன்றும் 15,000 தொன் எடை எண்ணெய் கொள்திறனுள்ள 101 எண்ணெய்த் தாங்கிகளைப் பிரிட்டிசார் கட்டிப் பயன்படுத்தினர். கிழக்குப் பிராந்திய பிரிட்டிஷ் படைத் தலைமையகமாகவும் திருகோணமலை அன்று செயற்பட்டது.

17 ஆம் நூற்றாண்டு தொடக்கம் போத்துக்கேயர் , ஒல்லாந்தர், பிரெஞ்சுக்காரர், டென்மார்க்காரர் போன்றோரும் இறுதியாக பிரிட்டிசாரும் திருகோணமலையே குறியாக நகர்ந்ததின் காரணம் என்ன? இதற்கு மூன்று காரணங்கள் தரப்படுகின்றன. இந்துமா கடலின் நடுப்பகுதியில், கிழக்கு மேற்கு கடற்பாதையில் இருப்பதால் அதற்கு தனியொரு சிறப்பு இருப்பதோடு தங்கு தடையின்றி இங்கிருந்து தூர இடங்களுக்குத் தொலைத் தொடர்புகொள்ளும் புவியியல் அமைவும் காணப்படுகிறது. அதற்கும் மேலாக நெப்போலியனை கடற்போரில் வென்ற நெல்சன் திருகோணமலையை ''உலகின் தலைசிறந்த துறைமுகம்'' என்று கூறியுள்ளதுதான் பேருண்மை. பிரிட்டிசார் பண்டாரநாயக்காவின் கோரிக்கைக்கு இணங்கி கையளிக்க முன்பே இந்தியாவும் திருகோணமலை மீது கண் வைக்கத் தொடங்கியுள்ளது. ஆர்.ஆர். இராமச்சந்திர ராவ் என்ற இந்திய இராணுவ ஆலோசகர் "வெளிநாட்டு விமானத் தளங்களும், திருகோண மலையில் வெளியார் பிரசன்னமும் இந்தியா வின் தெற்கிற்கும் பரந்து கிடக்கும் கரையோரத் திற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும்'' என்றார். அவர் கூறிய வருடம் 1954-1987 இல் இலங்கை-இந்திய ஒப்பந்தம், தமிழர் பிரச்சினை யைச் சாட்டாக வைத்து செய்யப்பட்டதின் ஒரே ஒரு நோக்கம் திருகோணமலை இந்தியா தவிர்ந்த பிறிதொரு நாட்டின் பாவனைக்குச் செல்லக்கூடாது என்பதற்காகவே. இந்தியாவின் அரசியல் நகர்வுகள் யாவும் திருகோணமலையைக் குறியாகக் கொண்டுள்ளன என்பது வெளிப்படை.

திருகோணமலைத் துறைமுகத்தின் தனிச் சிறப்பையும் உலகின் பிறிதோர் துறைமுகத்தில் காணமுடியாத இயற்கை அமைவையும் நோக்குவோம். ஆழ்கடலை எதிர்கொள்ளும் துறைமுக வாயில் 4 மைல் அகலம் கொண்டது. கிழக்கு மேற்காக அதன் குறுக்களவு 5 மைல் நீளமானது. துறைமுக உட்புறத்தில் வடக்குப்புறமாகவுள்ள பகுதி 12 சதுர மைல் பரப்பு கொண்டது. இப்பகுதி அசாதாரணமான ஆழமுடன் இயற்கையாக அமைந்த பாதுகாப்பு ஒழுங்குகளையும் உள்ளடக்கியுள்ளது. இப்பன்னிரண்டு சதுர மைல் உட்புறக்கடற்பரப்பு மாபெரும் பாறைகளாலும் குறுந்தீவுகளாலும் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. பாய்க் கப்பல் காலத்தில் பெரும் புயல் வீசும் மார்ச்சில் தொடங்கி ஒக்ரோபரில் முடியும் மாதங்களில் ஒரு முழுக் கடற்படை அணியையே மிகவும் பாதுகாப்பாக துறைமுக உட்புறத்தில் நிறுத்தி வைக்க முடியும். நிலக்கரி மற்றும் எண்ணெயில் இயங்கும் கப்பல்கள் காலத்திலும் இந்த அனுகூலம் கிடைக்கப்பெற்றது, இன்றும் கிடைக்கின்றது.

இரண்டாம் உலகப்போரின் போது பிரிட்டிசாரின் ஏழாவது கடற்படை அணிக்கு மேற்கூறிய 12 சதுர மைல் உட்புறம் பாதுகாப்பு வழங்கியது. 1942 இல் சிங்கப்பூர் துறைமுகம் ஜப்பானியப் படைகள் வசம் வீழ்ந்தபின் பிரிட்டிசாரிடம் திருகோணமலைத் துறைமுகம் மாத்திரம் எஞ்சியிருந்தது. இன்று படுவேகமாகச் செல்லும் அணுசக்தியில் இயங்கும் கப்பல்களும் நீர்மூழ்கிகளும் உருவாகியுள்ளன. இச் சூழலில் திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம் மென்மேலும் உயர்ந்துள்ளது. அணு ஆயுதங்கள் பொருத்தப்பட்ட அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிகள் மறைவாகத் தரித்து நிற்கும் வசதியை துறைமுக உட்புறத்தின் மறைவிடங்கள் வழங்குகின்றன. ராடர் மற்றும் சோளர் கருவிகளின் வீச்சுக்கு அப்பால் இத்தகைய மறைவிடங்கள் இருப்பதாக கடலடி ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எவன்



திருகோணமலையைத் தனது பிடியில் வைத்திருக்கிறானோ அவனால் இந்து மாகடலைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் என்ற அனுபூதி வாக்கியம் பொய்யல்ல.

பிரிட்டிசாரின் நேரடி வாரிசாகத் தன்னை நிலை நிறுத்த விரும்பும் இந்தியாவால் திருகோணமலைத் துறைமுகத்தை தனது முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவர இயலாது. புலிகளுடைய கடற்படை இருப்பை அனுமதிக்கக் கூடாது என்ற இந்திய அதிகாரிகளின் அண்மைக்காலக் கருத்துக்கள் வெறும் வாய்ச்சொல்லாகவே இருக்கின்றன. திருகோணமலை நகரில் குழப்பங்களைத் தூண்டுவதுமூலம் தனது இலக்கை அடையலாம் என்று இந்தியா எண்ணுமாயின் மீண்டுமொரு தோல்வியை தழுவ இந்தியா தயாராகிறது என்றுதான் பொருள்.

<>

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 01. 07 . 2005

மின் அஞ்சல :- weekly @ eezhanatham.com

## எந்தளவுக்கு சாத்தியம்...

அரசும், புலிகளும் பொதுக்கட்டமைப்பு ஆவணத்தில் கையெழுத்திட்டதைத் தொடர்ந்து இந்நடவடிக்கையை ஆதரித்தும், வரவேற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் கொபி அனான் முதல் சர்வதேச நாடுகளும், அமைப்புகளும் வரவேற்று தத்தமது கருத்துக்களை வெளிப்படுத்திவருகின்றனர்.

இதில், இந்த பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திட்டதையிட்டு கருத்துத் தெரிவிக்கும் எல்லாத் தரப்பும் ஒருவிடயத்தை சுட்டிக்காட்டத் தவறவில்லை.

அதாவது, இந்த பொதுக்கட்டமைப்பினூடாக பின்தள்ளப்பட்டிருக்கும் சமாதான முயற்சியினை முன்னோக்கி நகர்த்தவேண்டும் என்பதுவேயாகும்.

ஏனெனில், இடைநின்று போயிருந்த சமாதான முயற்சியானது ஆழிப்பேரலை அனர்த்தத்தையடுத்து இரண்டாம் நிலைக்குத்தள்ளப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

இதனை மிகத்தெளிவாகவே தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் இறுதியாக தன்னைச் சந்தித்த நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் மற்றும் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஹில்ட் ப்ராப்ஜோட் ஜோன்சன் ஆகியோரிடம் தெரிவித்திருந்தார்.

இதனை தேசியத் தலைவர் அவர்கள் ஆழிப் பேரலையினால் ஏற்பட்டது இரண்டாவது சுனாமி அழிவு எனவும் ஏற்கெனவே முதலாவதாக ஆமியினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சுனாமி பேரழிவு எமது தேசத்திலிருக்கிறது எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தநிலையில், தேசியத் தலைவருடனான நோர்வே உயர்மட்டக் குழுவின் சந்திப்பு நடைபெற்று பல மாதங்கள் கடந்த நிலையில் இப்பொழுதுதான் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான பொதுக்கட்டமைப்பு ஆவணத்தில் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

ஆனால் இன்னமும் அது செயற்படத்தொடங்காத நிலையில் இனி இது எப்போது செயற்படத் தொடங்குவது...? ஆமியினால் அழிவுகளைச் சந்தித்த மக்களுக்கு எப்போது உதவிகள் வழங்குவது...? என்ற கேள்விகள் எல்லாம் எழுகிறது.

மேற்கூறிய கேள்விகள் ஒருபுறம் இருக்க, இந்த பொதுக்கட்டமைப்பானது சமாதானத்தை நோக்கிய பயணத்தை முன்னெடுத்துச் செல்லும் என்ற நம்பிக்கையை சர்வதேச சமூகம் வெளிப்படுத்திவருகின்ற சூழலில் இந்த பொதுக்கட்டமைப்பே முன்னோக்கிச் செல்லுமா என்ற ஐயம் இப்பொழுது எழுகிறது.

ஏனெனில் பொதுக்கட்டமைப்பு ஆவணத்தில் கையெழுத்திடும் முன்னர் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய போன்ற இனவாத கட்சிகளின் எதிர்ப்பே கடுமையாக இருந்தது. ஆனால் இப்பொழுது பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சிறிலங்காவின் படைத்தரப்பு மத்தியிலும் எதிர்ப்புகள் கிளம்பியிருப்பதாகக் கூறப்படுகிறது.

அத்தோடு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி பொதுக்கட்டமைப்புக்கு வெளியில் தனது ஆதரவினை வழங்கியுள்ளபோதும் உள்ளூர அது பொதுக்கட்டமைப்புக்கு எதிராக போராட்டங்களையும், கருத்துக்களையும் தெரிவிக்கும் சக்திகளை ஊக்கப்படுத்தும்வகையிலேயே தனது கருத்துகளை தெரிவித்துவருகிறது.

மேலும், இப்பொழுது பொதுக்கட்டமைப்புக்கு எதிராக இரண்டு வழக்குகளும் நீதிமன்றத்திற்கு செல்கின்றன.

இந்தநிலையில்தான் இந்தப் பொதுக்கட்டமைப்பானது எந்தளவு தூரத்துக்கு சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் என்பது தெரியவில்லை.

பொதுக்கட்டமைப்பே முன்செல்வது கடினமாக இருக்கும் இந்தச் சூழ்நிலையில் பொதுக்கட்டமைப்பானது சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் என்பது கண்களுக்குத் தெரியும் கானல் நீரைப்போன்றதாகக்கூட இருக்கலாம்.

# விடுதலை விரும்பிகளும் விலைபோகிறவர்களும் ஒருமித்த குரல் எழுப்ப முடியுமா?

தமிழ் மக்களின் குரல் என்றால் எது? விடுதலைப்புலிகளின் குரல் என்றால் எது? தமிழ் மக்களின் குரல் வேறு விடுதலைப்புலிகளின் குரல் வேறு என்று கூறமுடியுமா? அல்லது இரண்டும் ஒன்றுதானா? என்று சிலர் சந்தேகம் கொள்கின்றனர். அல்லது சந்தேகம் கொள்ள வைக்கின்றனர்.

உலக நாடுகள் தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளன.அதனாற்றான் சிறிலங்கா அரசைப் புலிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வருமாறு வலியுறுத்துகின்றன. மக்கள் அளித்த தீர்ப்பினை உலகநாடுகள் ஏற்றுள்ளன. அதனாற்றான் இடைக்காலத் தன்னாட்சி அலகு என்றால் என்ன, சுனாமிக்கான பொதுக்கட்டமைப்பு என்றால் என்ன புலிகளுடன் பேசி இணக்கப்பாட்டுக்கு வருமாறு கூறுகின்றன. இவ்வாறு உலக நாடுகள் ஏற்றுக்கொண்டிருந்தாலும் சிலர் புலிகளின் குரல் வேறு, தமிழ் மக்களின் குரல் வேறு என்று கூற முனைகின்றனர். இந்தக் கருத்தை முன்வைப்பவர்கள் யாரென்று பார்த்தால் அவர்கள் அயலகத்தாரின் கருத்துக்களுக்கு மதிப்புக்கொடுப்பவர்களாகவே தென்படுகின்றனர். விடுதலைப் புலிகள் தங்கள் குரலும் தமிழ் மக்களின் குரலும் ஒன்று என்று காட்டுவதற்காக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கூறுகின்றனர்.

இவ்வாறு கூறுவதன் மூலம் தமிழ் மக்களிடையே உள்ள குழுக்களை அரசியல் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தி அவர்களையும் இணைத்து ஒரே குரலில் தமிழ் மக்களின் கருத்துக்களை முன்வைக்க வேண்டும் என்பதே அவர்களது கருத்தாக உள்ளது. மேலெழுந்த பார்வையில் இது நல்ல, சிறந்த கருத்தாகவே உள்ளது. ஆனால் இது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் . இப்போ தமிழ் மக்களை விடுதலைப் புலிகள் பிரதி நிதிப்படுத்தவில்லையா, அப்படியானால் மக்கள் அளித்த தீர்ப்பு என்னவாயிற்று என்ற வினாக்களும் எழத்தான் செய்யும். அதேநேரம் தமிழினத்தின் ஒற்றுமை என்ற பெயரில் கடந்த காலங்களில் நடந்தவைகள் என்ன? ஒற்றுமை ஏற்பட்டதா? என்று வரலாற்றைத் திரும்பிப் பார்ப்பது நன்றாக இருக்கும்.

தமிழ் மக்களிடையே ஒற்றுமை ஏற்படவேண்டும் என்ற குரல் முதன்முதலில் 1956இல் எழுப்பப்பட்டது. வெள்ளையர் ஆட்சியைச் சிங்களவரிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறிய பின்பு தமிழினத்தின் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்ட பொழுது காங்கிரஸ் கட்சி சிங்கள ஆட்சியில் பங்காளியாக இருந்ததால் இலங்கைத் தமிழரசுக்கட்சி 1949இல் தொடங்கியது. 1952இல் நடந்த தேர்தலில் இல.தமிழரசுக்கட்சி தோல்வியடைந்தது. ஆனால் தந்தைசெல்வா தோல்வியால் துவண்டுவிடாமல் தமிழ் மக்களுக்கு ஏற்படப்போகும் ஆபத்தை மக்களுக்கு விளக்கிவந்தார். அதனால் 1956இல் தமிழரசுக்கட்சி பெரிய வளர்ச்சி கண்டது. இப்பொழுதுதான் முதன் முதலில் தமிழ் மக்கள் ஒற்றுமைப் படவேண்டும் என்ற குரல் எழுந்தது. அதுவும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கிய வேளையிலேயே இக்குரல் எழுந்தது. இலங்கைத் தீவிற்கு ஓர் இணைப்பாட்சி தேவை என்ற தமிழரசுக்கட்சிக்கும், ஒற்றையாட்சி அமைப்பே நல்லது என்ற காங்கிரஸ் கட்சிக்கும் சுந்தரலிங்கம் போன்ற வேறுசிலருக்குமிடையே ஒற்றுமை ஏற்படவேண்டும் என்ற குரல் எழுந்தது. இது கொள்கைகளின் அடிப்படையிலோ, தமிழ் மக்களின் உரிமைகளின் அடிப்படையிலோ அழைக்கப்பட்டதல்ல. தேர்தல் தொகுதிகளைப் பங்கீடு செய்வதில் மாத்திரமே நாட்டங்கொண்ட ஒற்றுமைக்குரலாகவே இது இருந்தது. எனவே அக்கூட்டணி கருவிலேயே சிதைந்துபோயிற்று. ஆனால் தமிழ் மக்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியை பெரு வெற்றியீட்டச்செய்து தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கச்செய்தனர். தந்தை செல்வா தமிழ் மக்களின் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். அதனாற்றான் பண்டாரநாயக்கா தந்தை செல்வாவுடன் 1957இல் ஒப்பந்தம் மேற்கொண்டார். தலைவர்களின் ஒற்றுமையிலும் பார்க்க தமிழ் மக்களின் ஒற்றுமையே வலுவானதும் உறுதியானதும் என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. 1960இல் சிறிமாவோ தந்தைசெல்வாவுடன் உடன்பாடு கண்டதும் 1965 இல் டட்லி தந்தைசெல்வாவுடன் ஒப்பந்தம் எழுதியதும் தமிழ் மக்கள் ஓரணியில் நின்றதனாலேயாகும்.

1961இல் நடந்த சட்டமறுப்புப் போராட்டத்தில் மக்கள் கட்சி வேறுபாடுகளைக் கடந்து பங்குபற்றினர். சில தலைவர்கள் தவிர இதரக்கட்சித் தலைவர்களும் கட்சி வேறுபாடுகளைக் கடந்து அப்போராட்டத்தில் கலந்துகொண்டனர். ஆனால் அடுத்துவந்த தேர்தலில் தாங்கள் பங்குபற்றிய போராட்டத்தையே கேலி பேசி அரசியல் விபச்சாரம் நடத்தியதையும் நாடறியும்.

இதன்பின்பு 1970இல் சிறிமாவோ பெருவெற்றியீட்டி புதிய அரசியல் யாப்பினை தயாரிக்கத் தொடங்கியபொழுதும் தமிழ் மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு தமிழ் கூட்டணி உருவாகி அது தமிழர் விடுதலைக்கூட்டணியாகியது. இவ்வொற்றுமைக் கூட்டணியில் தமிழரசுக்கட்சி, காங்கிரசுக் கட்சி, சுயாட்சிக்கழகம் என்பன முக்கிய இடத்தைப் பெற்றன. ஆனால் இக்

**சிலம்பு**

கூட்டணியில் தமிழ்க் காங்கிரசுக் கட்சியில் வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்ற ஆனந்தசங்கரி, அருளம்பலம், தியாகராசா ஆகியோர் கலந்துகொள்ள மறுத்ததும் ஆளும் சிறிமாவோவின் கட்சியில் இணைந்து தமிழ் மக்களின் குறைந்த பட்சக கோரிக்கைகளை எதிர்த்ததும் வரலாறாகும்.

ஆயுதப்போராட்டம் வளர்ச்சியடைந்துவந்த வேளையில் பல்வேறு குழுக்கள் ஆயுதங்களை ஏந்தின. ஆனால் எதற்காக ஆயுதம் எடுக்க நினைத்தார்களோ அவற்றை மறந்துவிட்டு வேறுவழிகளில் சென்றனர். ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் அதன் தலைவர் எந்த இலட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு ஆயுதம் எடுத்தார்களோ அதையே இலட்சிய மூச்சாகக்கொண்டு செல்கின்றனர்.

அதனாற்றான் தமிழீழ மக்களின் விடுதலைக்குரலாக தமிழீழ விடுதலைப்புலிகளும் அதன் தலைவர் தமிழீழத் தேசியத் தலைவராகவும் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

உலக நாடுகள் இதனை ஏற்றுக்கொண்டிருக்கும் நிலையில் அயலகத்தால் இதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. தமிழ் மக்கள் ஒற்றுமைப் படவேண்டும். புலிகளின் குரல் தமிழ் மக்களின் குரலாக மாறவேண்டும் என்று சிலர் கூறுவதே இதற்காகத் தான்.

அயலகத்தார் தங்களுக்கு விரும்பியவர்களை வேண்டப்பட்டவர்களை தமிழ் மக்களின் தலைவர்களாகக்காட்ட நியமிக்க ஆசை கொண்டனர். ஆனால் தமிழ் மக்கள் அவர்களை நிராகரித்துவிட்டனர். அவர்களில் ஒருவராகிய பெருமாளை இன்றும் பாதுகாப்பாகத் தமது நாட்டில் வைத்திருக்கின்றனர். இன்னொரு வகையில் ஆயுதக்குழு ஒன்றை உண்டாக்கி ஈ.என்.டி.எல்.எப் என்ற பெயரில் தமது விருப்பத்தை நிறைவேற்ற வைத்திருக்கின்றனர். இவற்றைவிட அரசு தெரிவது என்னவெனில் நாடாளுமன்ற உறுப்பினர்களது ஒற்றுமை என்பது வெறும் கண்துடைப்பு மட்டுமே. மக்களது ஒற்றுமையே அவசியம் என்பதாகும்.

இவ்வாறு ஆனந்த சங்கரி போன்றோர் ஒற்றுமையைக் குழப்பியடித்தாலும் தமிழர் விடுதலைக் கூட்டணி மக்களிடையே ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் 1977 இல் நாடாளுமன்றத் தேர்தல் வந்ததும் கூட்டணியின் ஒற்றுமை எவ்வளவு உறுதியானது என்பதைக் காட்டியது. தொகுதிப் பங்கீட்டில் போட்டிகள் ஏற்பட்டது. காங்கிரசு என்ற பெயரில் போட்டியிட முடியாத சட்டச்சிக்கலால் குமார் பொன்னம்பலம் சுயேட்சையாகப் போட்டியிட்டார். தமிழர் சுயாட்சிக்கழகமும் தனித்துப் போட்டியிட்டது. இது வெவ்வேறு கட்சித் தலைவர்களின் ஒற்றுமையின்மையை வெளிக்காட்டியது. ஆனால் மக்கள் ஓரணியில் நின்று தமது ஒற்றுமையைக் காட்டினர். நாளடைவில் சட்டச்சிக்கல் தீர்ந்ததும் தமிழ்க் காங்கிரசு என்பது தனியாக இயங்கத் தொடங்கியது.

இவை எதனைக்காட்டுகிறதென்றால் கட்சிகள் ஒன்றிணைவதோ, கட்சித் தலைமைகள் ஒன்றிணைவதோ உண்மையான ஒற்றுமையாக இருக்க முடியாது என்பதைத்தான். ஆட்சியைப் பிடிக்கக் கட்சிகள் கூட்டணி அமைப்பது போன்றதல்ல ஒரு விடுதலைக்குப் போராடும் இனத்தின் நிலை மக்களின் மனங்களிலே இலட்சியம் உறுதிப்படவேண்டும் அந்த விடுதலையை இலட்சியமாகக் கொண்ட மக்கள் ஒன்றிணைய வேண்டும் அது தான் உண்மையானதும் உறுதியானதுமான ஒற்றுமையாகும்.

அறப்போராட்ட காலத்தில் தந்தை செல்வா இ.தமிழர்களின் தலைவராக, தமிழ் மக்களின் குரலாக உலகம் ஏற்றுக்கொண்டது.

ஆயுதப்போராட்டம் வளர்ச்சியடைந்து வந்த வேளையில் பல்வேறு குழுக்கள் ஆயுதங்களை ஏந்தின. ஆனால் எதற்காக ஆயுதம் எடுக்க நினைத்தார்களோ அவற்றை மறந்து விட்டு வேறு வழிகளில் சென்றனர். ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் தேசியத்தலைவர் எந்த இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு ஆயுதம் எடுத்தார்களோ

(21ஆம் பக்கம் பார்க்க)

நேர்நோக்கு

# 10 ஆயிரம் கூட்டங்கள்...

பொதுக்கட்டமைப்புக்கெதிராக 10 ஆயிரம் கூட்டங்களை நடத்தப் போவதாக ஜே.வி.பி அறிவித்துள்ளது. "வெற்றி நாட்டிற்கு- எதிர் காலம் உங்களுக்கு" என்ற தொனிப் பொருளில் இக் கூட்டங்களை நடத்தப் போவதாகவும் இன்று முதல் இந்தக் கூட்டங்கள் நடத்தப் படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"வெற்றி நாட்டுக்கு- எதிர்காலம் உங்களுக்கு" என்று ஜே.வி.பி கூறிக் கொண்டாலும் ஜே.வி.பி இதனைத் தனது தேர்தல் வெற்றிக்காக பயன்படுத்திக் கொண்டு மக்களின் எதிர்காலத்தை இருள் சூழ்ந்ததாக்கப் போகிறது எனக் கூறலாம்.

அதாவது இருந்தக் கோஷத்திற்கு தென் பகுதி மக்கள் மயங்குவார்களாயின் வெற்றியை ஜே.வி.பி பெறக்கூடும். ஆனால் ஜே.வி.பி தற்போது நாட்டுக்கு என்ன நடக்கும் என எச்சரிக்கிறதோ அதாவது எது நடக்கக் கூடாது என்று கூறுகிறதோ அது நடந்தே தீரும்.

கடந்த காலத்தில் தமிழ் மக்கள் தமது உரிமைக்காக நடத்திய போராட்டங்களை அடக்க முயன்ற ஆட்சியாளர்கள்-அப்பொழுது ஆட்சி நடத்திய கட்சிகள் இப்பொழுது பேச்சு வார்த்தை என்பதற்கு பின்னால் தமது சூழ்ச்சிகரமான நகர்வுகளை மேற்கொள்ள முயல்கின்றன.

சிறிலங்காவின் நிதியமைச்சர் கூறுகிறார். "இராணுவத்தினர் தப்பி ஓடுவது தான் இன்று நடக்கிறது" என்று.

தமிழ்மக்களின் உரிமைகளை வழங்க அவர்கள் மனப்பூர்வமாக விரும்புகிறார்களோ இல்லையோ யுத்தம் ஒன்று ஏற்படுமாயின் சிறிலங்காவிற்கு அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என நம்புகின்றனர்.

அதனால் தான் தற்போதைய எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகிக்கையில் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தினார். ஆனால் மறுபுறத்தில் புலிகளுக்கு எதிராக சர்வதேச வலைப் பின்னலொன்றையும் ஏற்படுத்த முயன்றார்.

இப்பொழுதும் கூட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விருப்பத்துடன் பொதுக் கட்டமைப்பை உருவாக்கிவிடவில்லை. அத்துடன் அதன் செயலாக்கம் எவ்வாறு அமையும் என்பதை உணர்ந்துகொள்ள ஜே.வி.பி வேறெங்கும் போகத் தேவையில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்க சனாதிபதி சந்திரிகாவின் கட்சி ஜே.வி.பி யுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் எவ்வாறு அமுலாக்கம் செய்யப்பட்டது என்பதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் இதுவெல்லாம் ஜே.வி.பிக்குத் தெரியாததுமல்ல. எனினும் இந்த விடயத்தில் அது விடாப்பிடியாக நிற்பதற்கும் அது தெளிவான திட்டத்தை வைத்திருப்பதே காரணமாகும். அதாவது இவ்வளவு காலமும் மற்றைய இருகட்சிகளும் தமிழ் மக்களின்



பிரச்சினைக்கு யுத்தத்தை தீர்வாக வைத்திருந்தது போல ஜே.வி.பியும் அதனை இப்பொழுது வைத்திருக்கிறது.

ஐ.தே.கட்சியும், சு.க.வும் தமது அனுபவ அடிப்படையில் நேரடியாக யுத்தமொன்றை உடனடியாக ஆரம்பித்து விட விரும்பவில்லை. ஆனால் ஜே.வி.பி அவ்வாறில்லை.

அதே போலத்தான் ஜாதிக ஹெல உறுமயவும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு யுத்தத்தையே தீர்வாக வைத்திருப்பதையே வெளிப்படையாகக் கூறி வருகிறது. ஜாதிக ஹெல உறுமயவின் மூலக் கட்சியான சிஹல உறுமய அமைப்பு சனாதிபதி சந்திரிகா நடத்திய தீவிர யுத்தத்தின் மூல உபாயம் தவறு என்றும் தம்மிடம் சிறந்த திட்டம் உண்டு எனவும் எனவே ஆட்சிப் பொறுப்பை தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென கூறிவந்தது.

இப்பொழுது ஜே.வி.பியும் நாட்டிற்கு தலைமையேற்க தயாராகவுள்ளதாக ஏற்கனவே அறிவித்துவிட்டது. அந்த அறிவிப்பைச் செய்து சில நாட்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து வெளியேறி தனித்துச் செயற்படவும் முயன்றுள்ளது.

ஒருவேளை தென் பகுதி மக்கள் ஜே.வி.பியை தலைமையேற்க அழைப்பார்களேயானால் ஜே.வி.பி தமிழ் மக்களுக்கு எதனை வழங்கும் என்பது வெளிப்படை.

ஜே.வி.பியைப் பொறுத்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை இணக்கப்பாடு என்பதற்கு இடமேயில்லை என்பதால் அதனை முடிவு செய்வதும் பெரிய விடயமில்லை.

ஆனால் அவ்வாறு முடிவு செய்வதற்கு அது கூறும் காரணம் தான் முக்கியமானதாகும். அதாவது நாட்டின் ஒருமைப்பாடு, இறைமை என்பவற்றை காரணமாகக் கூறுவது தான் கேலிக்குரிய விடயமாகும். ஏனெனில் தமிழ்மக்கள் தமது தாயகத்தை மீட்பதற்கான போராட்டத்தில் உறுதியான வெற்றியைப் பெற்றிருக்கும் வேளையில் தான் சிறிலங்காவுடன் கருத்தொருமித்து வாழமுடியுமா? அதற்கு இடமுண்டா? என அறிந்து கொள்ள இச் சமாதான காலத்தில் விரும்பினர்.

ஆனால் அனுபவித்து உணர்ந்தும் தமது நிலையிலிருந்து இறங்கிவராத மனமாற்றமடையாத ஆட்சியாளர்களின் நடத்தையால் தமிழ் மக்கள் சலிப்படைந்துள்ளார்கள். இப்பொழுது ஜே.வி.பி நேரடியாக விடுக்கும் அறை கூவலானது தமிழ் மக்களுக்கு மேலும் அந்த நம்பிக்கையைச் சிதறடித்துள்ளது.

இந்நிலையில் தமிழ்மக்கள் தமது உரிமைக்காகப் போராடி வெற்றி பெறுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கே வருவர். எனவே அதன் பிறகு இலங்கையின் இறைமை ஒருமைப் பாடு பற்றி ஜே.வி.பி கூறுவது வெறும் பிதற்றலாகவே இருக்கும்.

உண்மையில் ஒருமித்த இலங்கையில் தமிழ் மக்களுடன் ஒன்றிணைத்து வாழ்வதை ஜே.வி.பி யினர் விரும்பினால் அதற்கு இத்தகைய கூச்சல்கள் வழியல்ல.

**வேலவன்**

---

# படையினரின் விசப் பரீட்சை

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடனும் இராணுவப் பாதுகாப்புடனும் மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகளின் பஸ் மீது வெலிகந்தவில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் இருந்து சுமார் 50 வரையான போராளிகள் மயிரிழையில் உயிர் தப்பிக்கொண்டனர்.

இராணுவப் பாதுகாப்புடன் சென்ற போராளிகள் மீதுமேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது இராணுவப் பாதுகாப்புக்கு மத்தியிலும் இராணுவப் பாதுகாப்புப் பிரதேசத்திற்குள் வைத்து மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் இராணுவத்தினர் வழங்கிய பாதுகாப்புத் தொடர்பாக சந்தேகம் எழுவதுடன் போராளிகளின் பாதுகாப்பான பயணம் பற்றி சிந்திக்க வேண்டிய தேவையும் எழுகிறது.

ஏற்கனவே வெலிகந்தப் பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் வைத்து பல அரசியல் போராளிகள் இலக்கு வைத்துக் கொல்லப்பட்டிருப்பதுடன் இந்தப் பிரதேசத்திலேயே இராணுவத்தினரின் துணைக் குழுக்களின் முகாம்கள் இயங்கிவருவதும் ஏற்கனவே வெளிவந்தசெய்திகள்.

இந்த நிலையில் வெலிகந்த பிரதேசத்தில் வைத்துமேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது இராணுவத்தினர் சற்று எதிர்பாராத தாக்குதலாக இருக்கமுடியாது. பதிலாக இது ஒரு இராணுவத்தின் திட்டமிட்ட நாடகமாகக் கூட இருப்பதற்கே வாய்ப்புகள் அதிகம்

ஏனெனில் கிழக்கு மாகாணத்திலிருந்து அண்மையில் கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்த கிழக்குத் தளபதிகளின் பயணத்திற்கு பயண ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு படைத்தரப்பு பல்வேறு இழுத்தடிப்புகளையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தியதோடு போராளிகளின் பயணங்களுக்குக் கூட பல்வேறு கெடுபிடிகளை ஏற்படுத்திவருகின்ற சூழலில்தான் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கிழக்கில் ஒரு அசாதாராண சூழ்நிலையை தனது ஆதரவுடன் இயங்கும் துணைக்குழுக்களை கொண்டு குழப்பத்தை ஏற்படுத்திக்கொண்டு இன்னொருபுறம் புலிகளின் கிழக்குப் பிராந்திய போராளிகளுக்கும் புலிகளின் தலைமைப் பீடத்திற்கும் இடையிலான தொடர்புகளை குழப்புவதிலும் ஈடுபடுகின்றனர்.

இதன் மூலம் படைத்தரப்பு கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டு சமாதான காலத்தில் ஒரு சூழ்ச்சிப் பொறியை உருவாக்க முனைவதையே இந்த நடவடிக்கை காட்டுகிறது.

இந்த நிலையில் இராணுவப் பிரதேசத்திற்குள் வைத்து மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் தொடர்பாக போராளிகளின் பயணத்தின் போது வழித்துணை வழங்கிய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் பாரிய பொறுப்புண்டு.

இது தொடர்பாக அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி யுத்தநிறுத்தத்தை பாதுகாக்கும் கடமையில் ஈடுபட்டிருக்கின்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவானது காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை காண்காணிப்புக் குழுவின் முன் உள்ளது.

இந்நிலையில் போராளிகளின் பாதுகாப்பான பயணம் தொடர்பாக புலிகளின் தலைமைப் பீடத்தை சிந்திக்க வைத்திருக்கும் சூழ்நிலையில் வெலிகந்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைப் போன்று மேலும் சம்பவங்கள் நடைபெறும் பட்சத்தில் இதுவரை கட்டிக்காக்கப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் பாரியசேதத்தை ஏற்படுத்துவதோடு பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையே இது காட்டுகிறது.

இது இவ்வாறு இருக்க வெலிகந்தயில் வைத்து இராணுவப் பாதுகாப்புடனும் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடனும் சென்ற போராளிகளின் மீதுமேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மூலம் எத்தகைய செய்திகளை வெளிப்படுத்த முயற்சிக்கப்படுகின்றது என்ற கேள்வி எழுகிறது.

இதனை இரண்டு விதமாகப் பார்க்கலாம். ஒன்று போராளிகளின் மீதான தாக்குதல்கள் எந்த சூழ்நிலையிலும் எத்தகைய நிலையிலும் மேற்கொள்ளப்படும் என்ற எச்சரிக்கையை புலிகள் இயக்கத்திற்கு விடுக்க முனைவதொன்று.

> **அரச பாதுகாப்புடன் இயங்கும் இராணுவ துணைக்குழுக்கள் தொடர்பாக படைத்தரப்பு மீது பல்வேறு அழுத்தங்களும் விமர்சனங்களும் எழுந்திருக்கும் இந்நிலையில் படைத்தரப்பு திட்டமிட்டு புலிகள் மீது தாக்குதலை ஊக்குவித்துவிட்டு தமக்கும் இந்த இராணுவக் குழுக்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதை நிரூபிப்பதோடு தம்மையும் மீறியே இந்தக் குழுக்கள் செயற்படுகின்றன என்ற ஒரு தோற்றப்பாட்டை காட்டுவதற்கு முயற்சிக்கப்படுகிறது.**

இரண்டாவது அரச பாதுகாப்புடன் இயங்கும் இராணுவத் துணைக்குழுக்கள் தொடர்பாக படைத்தரப்பு மீது பல்வேறு அழுத்தங்களும் விமர்சனங்களும் எழுந்திருக்கும் இந்நிலையில் படைத்தரப்பு திட்டமிட்டு புலிகள் மீது தாக்குதலை ஊக்குவித்துவிட்டு தமக்கும் இந்த இராணுவக் குழுக்களுக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்பதை நிரூபிப்பதோடு தம்மையும் மீறியே இந்தக் குழுக்கள் செயற்படுகின்றன என்ற ஒரு தோற்றப்பாட்டைக் காட்டுவதற்கு முயற்சிக்கப்படுகிறது.

ஆயினும் இராணுவத்தின் இந்த முயற்சி எத்தகைய பயனையும் ஏற்படுத்த போகாது என்பதே உண்மை.

ஏனெனில் இதன் ஆதியும் அந்தமுமாக படைத்தரப்பே செயற்படுவதால் படைத்தரப்பு எதிர்பார்க்கும் விளைவுகளுக்குப் பதிலாக எதிர் விளைவுகளையே ஏற்படுத்தப்போகிறது.


இது படைத்தரப்பினால் மேற்கொள்ளப்படும் ஒரு விசப்பரீட்சையாகவே நிச்சயம் அமையப்போகிறது.

படைத்தரப்பின் இந்த விளையாட்டை புலிகள் இயக்கம் ஒரு போதும் அனுமதிக்காது என்பதுடன் போராளிகளின் பாதுகாப்புப் பயணம் தொடர்பாக ஏற்கனவே புலிகள் கூறியிருப்பது போல தமது சுய பாதுகாப்புடனான பயணம் தொடர்பான கருத்துக்கு வலுச் சேர்ப்பதாகவே அமையும்.

இன்னொரு வகையில் இத்தகைய தாக்குதல்களுக்கு புலிகள் இயக்கம் பதிலளிக்க முனையும் பட்சத்தில் அது படைத்தரப்புக்கு மட்டுமன்றி புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மட்டுமன்றி நிரந்தர சமாதானத்திற்கும் கேடுவிளைவிக்க தூண்டுவதாகவே அமையும்.

**சிறி.இந்திரகுமார்**







# கடலில் மூழ்கும் மன்னார் மீனவர் வாழ்வு

மன்னார் தமிழர்களின் வரலாற்றோடு மிக நெருங்கிய தொடர்புடைய எமது தாயகத்தின் பழம்பெரும் மாவட்டம். இம் மாவட்டத்திற்கென்றே சில தனிப்பண்புகள் இருக்கின்றன. அதாவது மன்னாருக்கே உரித்தான மண் வாசனையாகச் சேர்ந்து வருகின்ற கருவாட்டு வாசனையும் நாட்டு நடப்புக்களைக் கூடிக்கதைப்பது போன்று ஆங்காங்கே சேர்ந்து நிற்கின்ற கழுதைக் கூட்டங்கள் என மன்னாரை பற்றி நிறையவே கூறலாம்.

அதிலும் தலை மன்னாரைப் பற்றி இன்னும் கூறலாம். இலங்கைத்தீவின் ஓர் எல்லைப்



பிரதேசம் அது. அழகாக வளர்ந்தும் வளைந்தும் நிற்கின்ற தென்னை மரங்கள் அதன் கீற்றுகளை வருடிச்செல்கின்ற உப்புக்காற்று சுடுவெயிலிலும் எம்மையும் வருடிச்சென்ற போது இதமாகவே இருந்தது. மேலும் தமிழர்களின் வீரத்தினை பறைசாற்றுவதுபோல் நிமிர்ந்து நிற்கின்ற பனை மரங்கள், மீன் களுடனும், மீன்வலைகளுடனும் கண்ணாடி இழை படகுகளின் இயந்திரங்களுடனும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்ற மக்கள் கூட்டம். மீன்களை கொள்வனவு செய்வதற்கென அடிக்கடி வந்து போகும் குளிரூட்டப்பட்ட தென் னிலங்கை வாகனங்கள், அக்கிரா மத்துக்கு அழகு சேர்க்கவென அமைதியாகக் காட்சி தருகின்ற பெரிய கிறிஸ்தவ ஆலயம் ஒன்று என தலை மன்னாரின் மேற்குப் பகுதியின் அழகை பார்த்துக் கொண்டே சென்ற எமக்கு கொமாண்டோ முட் கம்பிச் சுருள்களும், பச்சை மண் மூடைகளுமாக அமைக்கப் பட்டிருந்த கடற்படை முகாம் அந்தக் கிராமத்தின் அழகினையே கெடுத்து நிற்கிறது. திருஷ்டி கழிப்பதற்காக வைக்கப்படும் உருவம் போன்றே அழகான தலைமன்னார் மேற்குப் பகுதியின் அழகை நாசமாக்கியபடி இருந்தது அந்த சிறிலங்கா கடற்படை முகாம்.

தனியே அழகினை மட்டும் ரசித்து மகிழ்வுடன் இருந்த எம் மனங்களில் இப்போது சிறு அச்சம் எழவே நாம் வந்த நோக்கத்தினை நிறைவு செய்வதற்காக மீனவர்களை நோக்கிச் சென்றோம்.

அண்மைக்காலமாக ஊடகங்களில் அடிக்கடி பேசப்படுகின்ற விடயமாக தலைமன்னார் மீனவர்களும் இந்திய றோலர்களும் அமைந்திருந்தன. இன்றும் இந்தப் பிரச்சினை தொடர்கதையாகவே உள்ளது.

435 குடும்பங்களைச் சேர்ந்த 1571 பேர்கள் வாழ்கின்ற தலை மன்னார் மேற்குப் பகுதியில் 350 குடும்பங்கள் மீனவத் தொழிலையும் 35 குடும்பங்கள் அரச உத்தியோகத்தர்களாகவும் 30 குடும்பங்கள் கூலித்தொழிலையும் 20குடும்பங்கள் சீவல் தொழிலையும் மேற்கொள்கின்றன.

இதில் 350 மீனவத்தொழில் செய்கின்ற குடும்பங்களில் 65 பேரிடம் மட்டுமே கண்ணாடி இழைப்படகுகள் உண்டு. மேலும் 50 பேரிடம் கட்டுமரங்கள் காணப்படுகின்றன. ஏனையோர்கள் கூலிக்கே மற்றவர்களின் படகுகளை பயன்படுத்துகின்றனர். அதாவது வாடகைப் படகு மூலம் மீன் பிடிக்கச் சென்று உதாரணமாக 100 கிலோக்கிராம் மீன் பிடிபட்டால் படகுச் சொந்தக்காரருக்கு 50 கிலோ கொடுக்கவேண்டும். அதாவது பிடிபடுகின்ற மீன்களில் அரைவாசிப் பகுதி படகு உரிமையாளருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

சிலவேளைகளில் மீன் பிடிபடாமல் போனால் தாங்கள் கடன்காரர்களாக மாறவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதாக வேதனையுடன் கூறுகின்றனர் சில மீனவர்கள்.

முன்னரெல்லாம் 05உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்திற்கு 1260ரூபா பெறுமதியான நிவாரணமும்.

04உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்திற்கு 1008ரூபா பெறுமதி யான நிவாரணமும்.

03உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்திற்கு 840ரூபா பெறுமதியான நிவாரணமும்.

02உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்திற்கு 614ரூபா பெறுமதியான நிவாரணமும்.

01உறுப்பினரைக் கொண்ட குடும்பத்திற்கு 338ரூபா பெறுமதியான நிவாரணமும் வழங்கப்பட்டு வந்ததாகவும் தற்போது அதனையும் நிறுத்தி விட்டதாகவும் இதனால் தாம் பெரும் கஷ்ரங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதைவிட தலைமன்னார் மீனவர்கள் எதிர்நோக்குகின்ற மிகப் பிரதான பிரச்சினைகள் இந்திய றோலர்களின் பிரச்சினை. அதாவது தங்களின் கடற்பரப்பிற்குள் இந்திய றோலர்கள் அத்துமீறி வந்து மீன்பிடித்துச்செல்கின்ற துயரம் தொடர்கதையாய்த் தொடர்கிறது.

இது தொடர்பாக தலைமன்னார் கடற்கரையில் ஒரு மீனவருடன் கதைத்துக்கொண்டிருந்தபோது அவர் சொல்கிறார் "தம்பி இன்னும் கொஞ்ச நேரம் நில்லுங்கோ இந்திய றோலர்கள் வரும் காட்டுறன்"

இவரின் வார்த்தையில் வேதனை தெரிந்தது. அதைவிட ஆச்சரியமான விடயம் தலைமன்னார் கடற்கரையில் இருந்து ஓரிரு கடல்மைல் வரை இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்கின்றமை. இதனால் செய்வதறியாது தவிக்கும் தலைமன்னார் மீனவர்களின் நிலை- ஒருபுறமிருக்க

இந்திய மீனவர்களின் றோலர்கள் வருகையால் தங்களின் வலைகள் அறுக்கப்பட்டு நாசமாக்கப்படுவதாகவும்,

**-சுழியன்-**

பவளப்பாறைகள் உடைந்து அழிந்து போவதாலும், கடல்கீழ் தரைமட்டம் சமனிலை ஆக்கப்படுவதாலும் மீன்கள் வாழக்கூடிய இடங்கள் அசாதாரணமாக்கப்பட்டு அவை இடம்பெயர்ந்து போவதோடு இனப் பெருக்கம் செய்யக்கூடிய ஏது நிலையும் றோலர்களால் குழப்பம் அடைவதாலும் மீன்வளம் அருகிப் போவதாகக் கவலையுடன் சொல்கிறார்கள் தலைமன்னார் மீனவர்கள்.

அண்மையில் கூட தலைமன்னார் மீனவர் ஒருவர் ஒருலட்சம் ரூபா கடன் வாங்கி வலை ஒன்றினை கொள்வனவுசெய்து தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை இந்திய றோலர்களினால் அவரது வலை முற்றாக அழிக்கப்பட்டு மீளப் பயன்படுத்தமுடியாத நிலையில் போனதால் விரக்தி அடைந்த அம் மீனவர் தற்கொலைக்கு முயற்சித்ததாகவும் பின்னர் உறவினர்களால் தடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. ஆனால், தற்போதும் அவர் கடனாளியாகவே உள்ளார்.

இப்படித்தான் இன்று தலை மன்னாரில் பல மீனவர்களின் கதை தொடர்கிறது.

தாங்கள் சில வேளைகளில் இந்திய கடல் எல்லைக்குள் சென்றுவிட்டால் இந்திய கடற்படையினர் தங்களை உடனே கைதுசெய்துவிடுவதாகவும் ஆனால் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அவ்வாறு கைது செய்வதில்லை. ஒருசில தடவைகள் கைது செய்துள்ளதாகவும் பெரும்பாலான தடவைகள் இந்திய மீனவர்களிடம் இறால் போன்றவற்றை பெற்றுவிட்டு அவர்களை அப்படியே விட்டுவிடுவதாகவும் குற்றம் சாட்டுகின்றனர்.

இதனால்தான் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்கின்ற தாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இந்திய கடல் எல்லைக்கு அருகில் தனது கண்ணாடி இழைப் படகுமூலம் சென்று இந்திய கடற்படையால் கைது செய்யப்பட்டு மதுரைச் சிறையில் தண்டனை அனுபவித்து திரும்பிய தலை மன்னாரைச் சேர்ந்த ஸ்ரீபன் கொஸ்தா இவ்வாறு கூறுகின்றார்.

"ஐயோ தம்பி அடியென்டா ஓங்க வீட்டு எங்க வீட்டு அடியில்ல செம்ம அடிபோட்டிட் டாங்க. ஏழரை லட்சம் ரூபா கட்டினா வெளியில விடுறதா சொன்னாங்க. எங்கிட்ட எங்க




காசு இருந்திச்சு அதால தண்டனையை அனுபவிச்சிட்டு வந்ததுதான். ஆனா இந்திய மீனவர்கள் வந்தா அங்க கொண்டுபோவாங்க இங்ககொண்டு போவாங்க பெறவு பாத்தா இரண்டு நாளையால அனுப்பிருவாங்க"

என்றார் ஸ்ரீபன் கொஸ்தா.

இந்திய மீனவர்களின் இயந்திரப் படகுகளோடு தங்களது கண்ணாடி இழைப் படகுகள் போட்டிபோட முடியாது எனவும் தாங்கள் பல முறை பலரிடம் முறையிட்டுப் பலன் எதுவும் கிடைக்கவில்லை எனவும் கூறுகின்றார் மீனவ சங்கத் தலைவர் அ.ஞானப்பிரகாசம் அவர்கள். இதைவிட கடலையே நம்பி இருக்கின்ற இந்த அப்பாவி



மீனவர்கள் அறியாத ஆபத்து ஒன்று அவர்களை நோக்கிக் காத்திருக்கிறது. அதுதான் சேது சமுத்திர திட்டம். இதனால் இலங்கையில் பாதிக்கப்படப் போவது மன்னார் மீனவர்களே. தனியே இந்திய அரசு தனது எதிர்கால அரசியல், பொருளாதார, இராணுவ நலன்களை கவனத்தில்கொண்டு நடை முறைப் படுத்தப்போகும் இத்திட்டத்தால் பாதிக்கப்படுவது அப்பாவி மீனவர்கள் மட்டுமே.



இந்தியா கடலில் கிண்டப்போகின்ற குழி இலங்கை குறிப்பாக மன்னார், இந்தியாவினுடைய சில கரையோரப் பிரதேச மீனவர்களின் வாழ்க்கை அதில் மூழ்கப்போகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையே.

சேது சமுத்திர திட்டத்தால் மீன்வளம் வெகுவாகக் குறைய மேலும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தலைமன்னார் கடற்பகுதியில் அதிகரிக்கப் போகின்றது. இதனால் ஏற்கனவே உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டு இருந்த மன்னார் மீனவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படப்போகிறார்கள்.

பெருமளவான இந்திய மீனவர்கள் இயந்திரப்படகுகளை பாவிப்பதால் இந்தியக் கடற்பரப்பில் மீன்வளம் குறைந்து போயுள்ளது. இதனால் தற்போது அவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் புகுந்து அத்துமீறி மீன் பிடித்துச் செல்கின்றனர். இந்நிலையில் சேது சமுத்திரத் திட்டத்தால் மேலும் கடல் சூழல் அசாதாரணமாக்கப்படுவதால் மீன்வளம் மேலும் குறைவடையப்போகிறது. இதன் விளைவு பெருமளவான இந்திய மீனவர்கள் மன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறப் போகிறார்கள். அதனால் மன்னார் மீனவர்களின் இந்தத் துயரம் தொடர்கதையாய் அமையப்போகிறது.




# லூபஸ்- தோல்படை நோய்

லூபஸ் என்று அழைக்கப்படும் தோல் படை நோய்களில் பல வகையுண்டு. ஒரு சுய நோய் எதிர்ப்பு நோயான இதில் நோய் தடுப்பு சக்திகள் அறியாத பல காரணங்களினால் அதிகமாக செயல்பட்டு சாதாரண திசுக்களையும் தாக்கும் தன்மை கொண்டது. இந்த தாக்குதலினால் அழற்சிகள் தோன்றும் பிறகு பல்வேறு நோய்க்குறிகளும் தோன்றும். சருமம், மூட்டுகள், கிட்னி, குருதி செல்கள், இருதயம் மற்றும் நுரையீரல்களையும் தாக்கும் இது உடலின் பல பகுதிகளையும் பாதிக்கும் அழற்சி நோயாகும். நம் வாழ்வில் தோல் படை நோயின் கூறுகள் வந்து போகும் வண்ணம் இருந்து வருவது இயல்பே, இதனால் வலியும் உடற் சோர்வும் ஏற்படும்.

***இவற்றில் 4 வகையான தோல் படை நோய் உண்டு.***

01. கியுடேனியஸ் தோல் படை நோய் எரிதிமேடோசஸ் என்பது சருமத்தில் தோன்றும். இதிலும் பல வகைகள் உண்டு. தட்டு வடிவத்தில் ஏற்படும் படைநோய் ஒரு வகை. திடீரென தோன்றும் தோல் படைகள் மற்ற வகையாகும்.

02. உடலின் பல்வேறு அமைப்புகளை தாக்கும் சிஸ்டெமிக் தோல் படை நோய் எரித்மேடோசஸ். இது நுரையீரல், இருதயம், சருமம், மூட்டுகள், குருதி, ரத்தக் குழாய்கள், கிட்னி, கல்லீரல், மூளை மற்றும் நரம்பு மண்டலம் ஆகியவற்றை தாக்கும்.

03. மருந்துகள் தூண்டும் தோல் படை நோய்.

04. நியோ நேட்டல் தோல் படை நோய். இது மிகவும் அரிதாகவே ஏற்படுவதாக மருத்துவ உலகில் கருதப்படுகிறது.

நபருக்கு நபர் வேறுபடும் இதன் அறிகுறிகள் தோல் படை நோயின் வடிவத்தை பொறுத்தும் மாறுபடும். தோல் படை நோய் ஏற்பட்டுள்ள அனைவருக்கும் கீழ் வரும் அறிகுறிகள் அனைத்தும் தோன்றும் என்று கூற முடியாது.

1.வலி நிறைந்த அல்லது வீங்கிய மூட்டுகள்.
2.தொடர்ந்து 100டிகிரிக்கும் மேலான காய்ச்சல்.
3.நீண்ட நேரம் தீவிர சோர்வு.
4.தோல் பகுதிகளில் வெடிப்பு மற்றும் தாடை, மூக்குப் பகுதியில் வண்ணத்துப்பூச்சி வடிவத்தில் தோலில் படை தோன்றுதல்.
5.மூச்சை இழுத்து விடும்போது மார்பில் வலி.
6.இரத்தச் சோகை.
7.சூரிய ஒளிக்கு எதிர்விளைவு காட்டுதல்.
8.முடி உதிர்தல்.
9.வரம்பு மீறிய இரத்தக்கட்டு பிரச்சினைகள்.
10.குளிரில் விரல்கள் வெள்ளையாக மற்றும் நீலமாக மாறுதல்.
11. வாத சன்னியின் திடீர் தாக்குதல்.
12.வாய் அல்லது மூக்கில் தோன்றும், இரு வாரங்களுக்கும் மேல் நீடிக்கும் அல்சர்.

ஆண்,பெண் இருபாலாருக்கும் எந்த வயதிலும் தோல் படை நோய் ஏற்படும். பெண்களை அதிகம் இது தாக்குகிறது. 15 வயது முதல 44 வயது வரை உள்ள பேறு காலங்களில் தோல் படை நோய் பெண்களுக்குத் தோன்றுகிறது.

தோல் படை நோய் ஏற்படும் காரணங்கள் இன்று வரை அறிய முடியாத புதிராகவே உள்ளது. இருப்பினும், மரபுக்கூறுகள், சுற்றுச்சூழல் மற்றும் ஹார்மோன்கள் ஆகியவற்றின் கூட்டு காரணங்களால் இது ஏற்படலாம் என்று மருத்துவர்கள் கருதுகின்றனர்.

வம்சாவளியாக தோல் படை நோய் அப்படியே தோன்றாவிட்டாலும், சிலவகை மரபணுக்களை வம்சாவளியாக பெறுவதன் மூலம் இது தோன்றலாம் என்று கருதப்படுகிறது. ஒரு வைரஸ் அல்லது பாக்டீரியா நுண்கிருமியால் தோல் படை நோய் ஏற்படலாம். பெண்களே இதில் அதிகம் பாதிக்கப்படுவதால் இது தோன்றுவதற்கு ஈஸ்ட்ரோஜென் ஹார்மோன் காரணமாக இருக்கலாம் என்ற கோணத்திலும் ஆய்வாளர்கள் சோதனை செய்து வருகின்றனர்.

பெண்களுக்கு கர்ப்ப காலத்திலோ அல்லது குழந்தை பிறந்த உடனேயோ இது தோன்றலாம். குடும்பத்தில் யாருக்கேனும் தோல் படை நோய் இருந்திருந்தால் சந்ததியினருக்கும் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

இதன் அறிகுறிகள் நபருக்கு நபர், காலத்திற்குக் காலம் மாறுவதால் மருத்துவர்கள் இதை கணிக்க தடுமாறுகின்றனர். இதனாலேயே தோல் படை நோய் இருப்பதற்கான குறிப்பிட்ட அறிகுறிகள் தெரிந்த பிறகே மருத்துவர்கள் இதை தோல் படை நோய் என்று அறிவித்து சிகிச்சை அளிக்கின்றனர். இரத்த எண்ணிக்கை எரித்ரோசைட் சகடு பரிசோதனை, கிட்னி மற்றும் கல்லீரல் சோதனை, சிறுநீர் சோதனை, மார்பு எக்ஸ்ரே, இ.சி.ஜி மற்றும் கிரந்தி பரிசோதனை ஆகியவைகளை மருத்துவர்கள் மேற்கொள்கின்றனர்.

தோல் படை நோய்க்கு இதுவரை சிகிச்சை இல்லை.



ஆனால் அறிகுறிகளையும், மேலும் சிக்கல்கள் அதிகமாகாமல் தடுக்கவும் மருந்து, மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன. 'சிஸ்டமிக் தோல் படை நோய் எரித்மேட்டோஸஸ் என்ற நோய்க்கு உடலின் எந்த பாகம் பாதிக்கப்பட்டுள்ளதோ அதற்கு சிகிச்சை அளிக்கப்படும். தோல் படை நோய் பல வடிவங்களில் ஏற்படலாம் என்பதால் திருப்திகரமான சிகிச்சைக்கு நீண்ட நாட்கள் பிடிக்கும்.

மருத்துவர்கள் பொது வாக சிபாரிசு மருந்துகள் கீழ்வருமாறு

ஸ்டெராய்ட் அல்லாத அழற்சி எதிர்ப்பு வலி நிவாரணிகளான அஸ்பிரின், ப்ரூ.'.பன் நேப்ராக்ஸென் சோடியம் ஆகியவை மூட்டு மற்றும் திசு அழற்சியை தடுக்க பயன்படுகிறது.

மலேரியா எதிர்ப்பு மருந்துகள்- தோல்படை நோய்க்கும் மலேரியாவுக்கும் நேரடித் தொடர்பு இல்லையென்றாலும், தோல்படை நோயைக் கட்டுப்படுத்த மலேரியா எதிர்ப்பு மருந்துகளின் காரணம் என்ன என்பதை யாரும் அறிய முடியவில்லை. சரும மற்றும் மூட்டு பிரச்சினை, இருதயம் மற்றும் நுரையீரல் ஆகிய பாகங்களின் மேற்புறத்தில் தோன்றும் அழற்சியை குணப்படுத்த கொடுக்கப்படுகிறது.

கார்ட்டிகோ ஸ்டெராய்டுகள்- இவை தோல் படை நோய் தூண்டும் அழற்சிக்கு கொடுக்கப்படுகிறது, எந்த உறுப்பு எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை பொறுத்து டோஸ் அளவுகள் மாறும்.

இது தவிர தோல் படை கிட்னிகள் உள்ளிட்ட உடல் உறுப்புகளில் தீவிரமாக பரவும் போது உடல் எதிர்ப்பு சக்தியை கட்டுப்படுத்தும் மருந்துகளான அஸாதியோப்ரின், சைக்ளோபாஸ் போமைடு ஆகியவற்றை மருத்துவர்கள் சிபாரிசு செய்வார்கள். மற்றப்படி கார்ட்டிகோ ஸ்டிராய்டுகள் சரியாக வேலை செய்யவில்லையெனில், மெதோட்ரெக்ஸேட், குளோராம்புசில், சைக்ளோஸ்போரின், மைகோ.'. பினோலேட் ஆகியவற்றை சிபாரிசு செய்வார்.

இவை தவிர வாழ்க்கை முறையில் சில சின்னச் சின்ன விஷயங்களை கடைப்பிடித்தால் தோல் படை நோய் சரிவர கட்டுப் படுத்த முடியும்.

தேவையான ஓய்வும், தினசரி தேகப்பயிற்சியும் செய்து வாருங்கள்.

புகைப்பிடிக்கும் பழக்கத்தை அறவே தவிர்க்க வேண்டும். ஏனெனில் தோல் படை நோயின் விளைவுகள் இருதயம் மற்றும் ரத்தக்குழாய்களை பாதிக்கும் போது புகைப்பழக்கம் இதை மேலும் சிக்கல் மிக்கதாகச் செய்துவிடும். அதே போல்தான் குடிப்பழக்கமும்.

ஆரோக்கியமான, சம நிலையான உணவுப்பழக்கம் தேவை.

தோல்படைநோய் உள்ள பெண்கள் கர்ப்பம் தரிக்கும் முன் பாதுகாப்பான குழந்தைப் பிறப்பிற்கு தேவையான ஆலோசனைகளை முன்னதாகவே பெறுவது நல்லது.

---



# சினிமாவில் புகைத்தலுக்குத் தடை

அண்மையில் நம்மூர் இளைஞன் ஒருவன் தனது இரு விரல்களுக்கிடையில் சிகரெட்டினை சுழட்டி எறிந்து வாயால் பிடித்து இப்படி கூறினான். "இப்படித்தான் ஒரு படத்தில நம்ம ரஜனி ஸ்டைலா சிகரெட்டை பிடிப்பார்"

இது ஒரு இளைஞனின் நிலையல்ல. இப்படித்தான் இன்று எமது சமூகத்தில் உள்ள பெரும்பாலான இளைஞர்கள் நிலைகளும்.

மனித வாழ்வில் ஊடகங்கள் கணிசமான அளவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதிலும் சினிமா இன்று பெரும்பாலான மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்துப் போயுள்ளதை மறுக்க முடியாது. மக்கள் வாழ்க்கையில் குறிப்பாக இளைஞர் யுவதிகள் வாழ்வில் சினிமாவின் தாக்கம் பெருமளவு உண்டு.

கற்பனையில் வருகின்ற சினிமாக் காட்சிகள் சம்பவங்கள் போன்று இன்று நிஜ வாழ்விலும் இவர்கள் கடைப்பிடிக்க தலைப்படுகின்றனர். அதன் விளைவே அடிதடி, கோஷ்டி சண்டை, கற்பனை காதல் அதனால் ஏற்படும் விளைவுகள் மற்றும் ஆடை அலங்காரம் என சினிமாவோடு இரண்டறக் கலந்து விட்ட சமூகமாகவே இன்றைய சமூகம் காணப்படுகின்றது. மேலும் முக்கியமான விடயம் என்னவெனில் சினிமாவிலும், சின்னத் திரையிலும் காட்டப்படுகின்ற புகைபிடிக்கும் காட்சிகள் இதனால் படங்களில் தோன்றுகின்ற நாயகர்களின் ரசிகர்கள் என சமூகத்தில் இருக்கின்ற பெரும்பாலானவர்கள் அவர்களைப் போன்று இவர்களும் புகைபிடிக்கத் துவங்குவது.

இதனால் பெரும்பாலானவர்கள் புகையிலை பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகின்றனர். அதனை சினிமாவும் ஊக்கிவிக்கின்றது என்று எண்ணிய இந்திய அரசு சினிமாவில் புகைபிடிக்கும் காட்சிகளும் தடைவிதிக்க தீர்மானம் எடுத்துள்ளது. இது வரவேற்கத் தக்க விடயம் என பெரும்பாலானவர்கள் வரவேற்றுள்ள அதே வேளை ஒரு சிலர் எதிர்த்துள்ளனர்.

இந்தியாவில் மட்டும் புகையிலைப் பழக்கத்தால் ஒவ்வொரு வருடமும் எட்டு லட்சம் பேர் இறப்பதாவும், ஒன்றரை லட்சம் பேருக்கு புற்று நோய் ஏற்படுவதாகவும் 4.2 மில்லியன் பேருக்கு இருதய நோய் ஏற்படுகிறது எனவும் மேலும் 3.7 மில்லியன் பேர்கள் சுவாசம் தொடர்பான பல நோய்களுக்கு ஆளாகின்றனர் எனவும் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. அத்தோடு இந்த நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு 1999 ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படி 277.61 பில்லியன் இந்திய ரூபாய்கள் செலவு ஏற்படுவதாகக் கூறுகிறது இந்திய புள்ளி விபரங்கள்.

பல்வேறு எதிர்ப் பிரசாரங்கள் மத்தியிலும் 5.7 வீதமாக புகையிலை பாவனை அதிகரித்து வருவதாகவும் கூறிய அரசு சினிமா காட்சிகள் அதனை ஊக்குவிப்பதாக எண்ணியே தடை விதிக்க தீர்மானம் எடுத்துள்ளது. வரவேற்கத்தக்க நல்ல தீர்மானத்தை விரைவாக நடைமுறைப்படுத்துங்கள். இந்தியா மட்டுமல்ல எமது பெரும்பாலான நாடுகள் நன்மை அடையும்.

---




நைற்றோமெச் இன்கோப்ப ரேட் ரட் நிறுவனம் அண்மையில் இருதய நோயாளர்களுக்கான ஒரு புதிய மருந்தைக் கண்டு பிடித்துள்ளது. இம் மருந்தினை "பிடிஸ்" (Bidil) என அழைக்கப்படுகிறது.

உணவு மற்றும் மருந்துகள் நிர்வாகத்தால் (FDA) குறித்த இனத்திற்கு என் அங்கீகரிக்கப்படும் முதலாவது மருந்து



# சிறப்பான மருந்தா..? வியாபார உத்தியா..?

நிலையை இது எட்டியுள்ளதாக தெரியவருகிறது. அதாவது கறுப்பின இருதய நோயாளிகளுக்கு இம் மருந்தினை அங்கீகரிக்கும் படி (FDA)பரிந்துரை செய்துள்ளது.

இதய நோய் ஏற்பட்ட 1050 ஆபிரிக்க மற்றும் அமெரிக்க நோயாளிகளை ஆராய்ந்த போது இம் மருந்தானது மரணம் மற்றும் ஆபத்தான நிலையில் இருந்தவர்களை குறிப்பிடத்தக்களவில் குறைத்து விட்டிருப்பதனை கண்டுகொள்ளப்பட்டுள்ளது. இதனால் 2004 ஆம் ஆண்டுக்கான சிறந்த கண்டுபிடிப்பு இதுவென அமெரிக்காவின் இருதய நோய் மருத்துவர் ஒருவர் பாராட்டியுள்ளார்.

இம் மருந்து குருதியிலுள்ள நைற்றிக் ஒக்ஸைட் மட்டத்தை அதிகரிக்கிறது. இதனால் குருதிக்கலங்கள் விரிவடைகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

வெள்ளை இனத்தவர்களுடன் ஒப்பிடும் போது கறுப்பு இனத்தவர்களுக்கு இதனால் சிறப்பான பலன் கிடைக்கிறது என்பதனை காட்ட விஞ்ஞான ரீதியிலான சான்றுகள் எதுவும் இன்மையால் இக் கருத்து வெறும் சந்தைப்படுத்தல் உத்தியாக இருக்கலாம் என்று இம் மருத்தினை விமர்சிப்பவர்கள் கூறுகின்றனர்.

மினிஸோட்டாஸ் பல்கலைக் கழகத்தில் இதயத்துடிப்பியல் நிபுணராக இருக்கும் டொக்டர் ஜே.கோஹ்ண் என்பவரால் முதன் முதலாக இம் மருந்து உருவாக்கப்பட்டது.

கறுப்பு இனத்தவர்களின் இம் மருந்து நம்பிக்கை தரும் விளைவுகளை ஏற்படுத்துகிறது என்று கண்டறிந்த அண்மைய ஆய்வுகளுக்கு இவரது சகாவான டொக்டர் ஆன்ரெய்லர் தலைமை தாங்கினார்.

# கார சாரம்

# சில்லறையைக் கொண்டு ஒரு சில்லறை விளையாட்டு

அதிகாலை ஐந்தரைக்கு கிளிநொச்சியிலிருந்து புறப்படும் பேருந்தில் வவுனியா நோக்கிய பயணம் செய்தால், காலை ஏழுமுப்பதுக்கெல்லாம் வவுனியா நகரத்துள் நிற்கலாம். பயணச்செலவுக்கென எப்போதும் ஒரு ஐநூறு ஆயிரம் ஒதுக்குவதுதான் வழக்கம். அதை பேருந்துச் செலவுக்குப்போக தேநீர் குடிப்பதற்கும் முடிந்தால் காலை உணவை உண்பதற்குமாக சிற்றுண்டிச்சாலையுள் நுழைந்தேன், கணக்கு-இருபத்தெட்டு ரூபா. ஐம்பது ரூபாத்தாளை நீட்டினேன். மீதி பத்து ரூபாவும் ரெண்டு தரங்கெட்ட ரொபியும். பணத்துக்குப் பதிலாக ரொபி-அதை நான் ஏற்கமுடியாது என்றும் எனக் குமீதிப் பணந்தான் வேண்டும் என்று கேட்டால் காதிலேயே விழாததுபோல கல்லாவில் இருந்தவன் மற்றவர்களைக் கவனித்தான். இதே கணக்குப்படி அவன் பிரித்து வைத்திருந்த ரூபா நூறு பெறுமதியான ரொபிப்பை மெலிந்துகொண்டிருந்தது. அசடுகள்போல அந்த ரொபிகளைப் பைகளில் போட்டுக்கொண்டு சடங்களாய் நகர்ந்தது சனக்கூட்டம். இப்போதெல்லாம் அநேகமான வீடுகளில் புத்தக லாச்சி, வெங்காயம் மிளகாய் வைக்கும் அடுக்களைப்பெட்டி, காற்சட்டைப்பை, கைப்பை போன்றவற்றில் இத்தகைய தரங்கெட்ட ரொபிகள் வாசஞ்செய்கின்றன. இவற்றைக் குழந்தைகள் கூட உண்ண மறுக்கின்றனர். ஒரு மாற்றாக கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பெருநகரங்களிலும் இதே கதை தொடர்கிறது. கேட்டால் "நீங்கள் சில்லறையாக்க் கொண்டுவரலாமே'' என்றார் ஒரு கடைக்காரர். நானும் ஞாபகமாக மறுநாள் அதே கடையில் இருபத்தேழு ரூபாவுக்குப் பொருட்கள் வாங்கிவிட்டு இருபத்தைந்து ரூபா பணமும் இரண்டு ரொபிகளையும் கொடுத்தேன். கடைக்காரர் அசந்துதான் போனார். காசுக்குப் பதிலாக ரொபிகொடுக்கலாம், என்றவிதி கடைக்காரருக்குச் சரியென்றால், எனக்கும் சரிதானே என்றேன். அவர் அதை ஏற்கமுடியாது என்று பிடிவாதமாக நின்றார். பின் அழுவதுபோல மாறிய அவர் முகத்தைப் பார்த்துவிட்டு நானாகவே இரண்டு ரூபாவைக் கொடுத்தேன்.

ஒரு விற்பனையாளர் எப்படியும் சில்லறை வைத்திருக்கவேவேண்டும். அதற்காக பாவனையாளர் ஒரேயடியாக பெருந்தொகையை மாற்றத்தான் வேண்டுமெனக் கோரமுடியாது. கிராம சேவையாளரிடம் 'மஞ்சள்காட்' பெறுவதற்கு பதினைந்து ரூபா செலுத்தவேண்டும். ஒரு பெண் ஆயிரம் ரூபாத்தாளைக் கொடுத்தார். பதினைந்து ரூபாவுக்கு ஆயிரம் ரூபா நீட்டினா என்ன செய்யிறது என்ற கேள்விக்கு அந்தப் பெண் மசியவில்லை. "எத்தினை பேரிட்ட வாங்கியிருப்பியள் இருக்குந்தானே" அவர் உடனேயே தன் பையை திறந்து காட்டினார். அங்கும் ஆயிரம் ரூபாத்தாளே கிடந்தது. இதேபோன்று இறைச்சிக்கடையில் பில்போட்ட ஒருவர் "சில்லறையாத் தாங்கோ" என்று கூறிக்கொண்டே இருந்தார். அதைப்பார்த்துக் கொண்டே வரிசையில் நின்ற ஒருவர் மெதுவாகத் தன்முறை வந்ததும் ஐந்நூறு ரூபாவை நீட்டி "ஒருகிலோ இறைச்சி" என்றார். ''சில்லறையாத் தாங்கோ'' என்றார் சிட்டைபோடுபவர். ''காலையிலிருந்து வாங்கிய சில்லறை கிடக்கும் மாத்துங்கோ...'' "இல்லை சில்லறையாத்தாங்கோ''

இப்போது வாங்கவந்தவர் "இறைச்சிக்கடையிலும், சாராயக் கடையிலும் சில்லறை இல்லையெண்டா நானென்ன வெற்றிலைக் கடையிலயே மாத்திறது'' என்றார். சட்டென்று 'அதானே' 'நல்லாக்கேள்' 'நீங்கதான் சரி' என்று அவருக்கு ஒரு மெஜாரிட்டியும் சேரவே காசுமிச்சமும் பில்லும் வந்தது. கொஞ்சம் வசதி குறைந்த வீடுகளில் இந்த ரொபியில் போகும் காசுக்கு நிரம்பவே வேலையிருக்கும். ரொபியைக் கடித்துக் கொண்டு தேநீர் குடித்துவிட்டுப் போகும் நிலை ஒரு காலத்தில் இருந்ததுதான். இன்றைய ரொபிகள் பற்களின் இடையே சிக்கிக்கொண்டு தொந்தரவு செய்யும். இவை முன்பு கடதாசியில் சுற்றாமல் இனிப்பு என்ற பெயரில் வந்தவைதான். போத்தல் ஓடுபோல வாயுள் சிதறி நாக்கைப் புண்ணாக்கிவிடும் ரகங்களும் இதிலடக்கம்.

புதிய புதிய கண்டுபிடிப்புக்களைத் தொடர்ந்து இப்போதெல்லாம் சிறுவர்களுக்கு ரொபி தேவைப்படுவதுமில்லை. 'பபிள்கம்' 'ஜூஸ்', 'கன்டோஸ்' 'நிசாம்பாக்கு' (நல்லவேளை இன்னும் 'பாண்பராக்'கைக் கண்டு பிடிக்கவில்லை) என்றுதான் அவர்கள் ரசனை. இவற்றைவிட 'சீசனுக்குச் சீசன்' கிளிமூக்கு மாங்காய், கொய்யாப்பழம், ஜம்புக்காய் என பழங்களும் வந்துவிடுகின்றன. எனவே ரொபியை விற்கமுடிவதில்லை என்பது பெரிய உண்மை.

இதைச் சில்லறையைச்சாட்டி விற்கத்துடிக்கும் வியாபாரிகளின் தந்திரமே இந்தச் சில்லறை விளையாட்டு. சில்லறை வியாபாரிகள் ஒருமுறை கவனியுங்கள். தேங்காய்க்கடையிலோ, மரக்கறிக் கடையிலோ, மீன்கடையிலோ, வெற்றிலைக்கடையிலோ சில்லறைக்குப்பதிலாக ரொபியா கொடுக்கிறார்கள். ஒருவெற்றிலைக் கடையில் அல்லது தேங்காய்க் கடையில் இந்தப்பிரச்சினை எழுவதில்லையே. ஏன்? வாடிக்கையாளர்களும் தம்மிடம் வரும் சில்லறைகளைச் சேகரிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தத்தான் வேண்டும். சில்லறை கிடந்தால் 'பர்ஸ்'ஸில் வைப்பது சிரமம், பைக்குள்ள கிடந்து குலுங்கிக்கொண்டிருக்கும், பாரமாக இருக்கும். நண்பர்கள் கண்டுவிட்டால் 'எங்கயப்பா உண்டியல் குலுக்கினாய்' என்பார்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக சிறுவர்கள் உண்டியலில் பணஞ்சேர்க்கும் பழக்கமிருந்தால் பெரியவர்களின் சில்லறைகள் பறிபோவதும் உண்டு.

சில்லறை விசயத்துக்காக சில இடங்களில் அரசல் புரசலாக உரசல்கள் இடம்பெறுவதுண்டு. எது எப்படியிருப்பினும் பணத்துக்கான ஊடகமாக ஒருபோதும் ரொபி அமையமுடியாது. அதை மறுப்பதற்கு நுகர்வோருக்கு உரிமை உண்டு. 1949இல் தென்னிலங்கையில் [illegible] வழக்கு நடந்தது. அப்போது தீப்பெட்டியின் விலை மூன்றரைச்சதம். அரைச்சதம் அப்போது வழக்கொழிந்து வந்தது. ஆனால் புழக்கத்திலிருந்தது. ஐந்து சதம் பெற்றுக்கொண்டு ஒரு கடைக்காரர் தீப்பெட்டியை விற்றார். ஒன்றரைச் சதம் அதிகமாக விற்றதற்காக அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது. அவர் தன்னிடம் ஒன்றரைச்சதம் சில்லறை இல்லாததே காரணம் என்று நீதிமன்றில் கூறினார். எனினும் நுகர்வோர் பாதுகாப்புக் கருதி அவருக்கு மூவாயிரம் ரூபா (இப்போதைய பெறுமதி மூன்றுலட்சம்) அபராதம் விதிக்கப்பட்டது. மண்ணெய் போத்தல் ஒன்றின்விலை ஆறுரூபாய்கள். இரண்டு போத்தல் பன்னிரெண்டு ரூபா. அதுவே ஒரு கலனாக வாங்கினால் (1கலன்6போத்தல்கள்) முப்பத்தைந்து ரூபா. மூன்று போத்தல் எண்ணெய்யை வாங்க விரும்புவோர் மூன்று போத்தல் என்று கேட்டால் பதினெட்டு ரூபாதான். 'அரைக்கலன்' என்று கேட்டால் பதினேழு ரூபா ஐம்பதுசதம்தான். இந்த அரைக்கலனுக்கான (ஐம்பதுசதம்) அரைரூபாய் பிரச்சினை நீதிமன்றம் போனபோது மண்ணெய் விற்பனைக்கான 'வண்டில் உரிமத்தை' அவர் இழந்தார். அப்போதெல்லாம் ஒற்றைமாடு பூட்டிய ஒரு வண்டியில் இருநூற்றிப்பத்து கலன் கொள்ளக்கூடிய கொள்கலன் வைத்து தெருத்தெருவாகக் கொண்டு சென்று விற்பர். படலையடியில் மண்ணெய்வரும். ஆக இந்தச் சில்லறை விசயத்தையிட்டு மக்களுக்கு விழிப்புணர்வுவேண்டும். நீங்களே யோசித்துப் பாருங்கள். நாளொன்றுக்கு நூறு பேர் பசியாறும் தேநீர்க் கடையில் இருநூறு ரூபா பெறுமதியான ரொபி சில்லறையைச்சாட்டி விற்கப்படுகிறது. வாங்கிய ரொபியை உங்களிடம் சில்லறை கேட்பவருக்குக் கொடுக்க முடியுமா? வாங்கவும் (பரிமாற்றம்) கொடுக்கவும் கூடியதுதான் பணம். பணத்திற்குப் பதிலாகப் பொருட்களை வாங்கும் நிறுவனந்தான் கடை. நுகர்வோர் கேட்கும் பொருளைத்தான் விற்பவர் கொடுக்கவேண்டும். கேட்காத ரொபியைக் கொடுக்கமுடியாது. ஒரு தையல் ஊசி, தீப்பெட்டி, சம்போ பைக்கட், சட்டைப்பின் என்பனபோன்ற சில்லறைக்கு வழங்கக் கூடிய சில்லறைப்பொருட்கள் ஏராளமாக உண்டு. இவை பயன்படக்கூடியவைதானே. சில்லறை விசயங்கள், நுகர்வோருக்கு மட்டுந்தான் சில்லறை விசயம். விற்போனுக்கு தினசரி மாலையில் ஒரு பெருந்தொகையை மீதப்படுத்திவிடுகின்றது. எனவே அவர் அதைச் சில்லறை என்று கருதிச் செய்யவில்லை என்பதே உண்மை. விலைக்கட்டுப்பாடும் நுகர்வோர் பாதுகாப்பும் நாங்கள் தான் ஏற்படுத்தவேண்டும். எங்கள் விழிப்புணர்வுகள் விடைபெற்றுப்போக, சிறிலங்கா அரசின் கடந்த காலப் பொருளாதாரத்தடைகள் ஒரு காரணந்தான். பணத்தைப்பாராமல் பொருள் கிடைத்தால் போதுமென நினைத்துப் பலருடைய பைகளையும் தலையையும் கூட வீங்கவைத்தோம். ஆனால் இன்றும் விழிப்புணர்வற்று குடுக்கிறதக் குடுத்து வாங்கிறத வாங்காமல், தாறதை வாங்குறது அசட்டுத்தனம். அவ்வளவுதான் சொல்வேன்.

-மாயா-



## விசுக்விசுக் விசாலாட்சி

அரிசிப்பொரியோட திருவாதிரையும் நடக்குதுபோல. சொன்னது சொன்னதுதான் எண்டமாரிப் பிரச்சினையை முடிக்கிறன் பாரெண்டு வெளிக்கிட்ட அம்மா ஒப்பந்தத்தில கையெழுத்துப் போட்டாலும் போட்டா.... கைதப்பக் கரணமெண்டு காத்துக் கொண்டிருந்த மாதிரி, பச்சைக் கட்சிக்காரருமெல்லே அறிக்கை விட்டிருக்கினம் கேள்விப்பட்டனியே? பொடியளோட மெல்லச் சாஞ்சு கதைச்சுப்போட்டாவாமெண்டு தானே உவை தொங்கிக் குதிக்கினம். ஆனா ரணிலாரும் ஒரு காலத்தில அம்மாவ மட்டுமில்ல, அரசியல் யாப்பையுந் தள்ளி நிக்கச் சொல்லிப்போட்டுத்தானே பொடியளோட கைகொளுவித்திரிஞ்சவர். இதிலயெல்லாம் ஒரு இரகசியங் கிடக்கடா மெய்யாத்தான், தோழமைக் கட்சியளக் கழட்டிவிட்டிட்டெண்டாலும் இதைச் செய்துதான் தீரவேணுமெண்டு ஒரு நிர்ப்பந்தங் கிடக்குது அம்மாவுக்கு. எங்க சுத்தியும் ஒரு பெரிய போராட்டமே நடத்துவம் எண்டு நிண்டு பாக்க அதை முறியடிச்சுப் போட என்ன கசகரணம் போடுகினம் பாத்தியோ. முதல் புத்தபெருமான் சொன்ன தத்துவங்களையும், கொள்கையளையும் வச்சுக்கொண்டு காவிகட்டின ஆசாடபூதியள் என்னமாதிரி கடவையள் வேலியளுக்கு மேலால ஏறிக்குதிக்கினம் எண்டதையும், என்ன மாதிரிக் கடுவன் பூனையள் முகத்தை வச்சுக் கொண்டிருந்த மாதிரி கூட்டத்தில இருக்கினமெண்டதையும் பாத்தியே... இது தான்ரா சொல்லுறது. "முக்காலுங்காகம் முழுகிக் குளிச்சாலும் வெள்ளைக் கொக்காகாது." எண்டு இனவாதச் சேத்துக்குள்ள தாமரை முளைக்குமேடா? அது 'பொப்பிமலர்' லடா 'பொப்பிமலர்' கொடும் விசம். ஜே.வி.பி காறர் இப்ப பல்லுப்புடுங்கின பாம்புதான். தங்களுக்குத்தாங்களே வெட்டின குழியில தாங்களே விழுந்து போச்சினம். சமாதானத்துக்கு வாக்களிச்ச மக்களாலதான் தேர்தல்ல சந்திரிகாவும் வெண்டது,ரணிலும் வெண்டது. இதுதான் உண்மை. இப்ப சும்மா சண்டைக்குப் போறன் பொல்லை எடு எண்டா ஆர் போற. எங்கயும் ஏழை பாழைச் சனந்தானே இராணுவத்துக்கு வர ஓயாத அலை மூண்டு ஓங்கி அடிச்ச நேரம், பெரிய பெரிய உத்தியோகத்தில இருந்த இராணுவத்தார் ஓடித்தப்ப கால் நடையா ஓடிக் களைச்சவை இவைதான். இப்பவும் ஏனடா... பலிக்கிடாக்கள் போல போய்ப்பாரன் நொச்சி மோட்டை ரோட்டில அவை படுறபாட்டை. ஏதோ சொந்த நாட்டை அடகுவைச்சவை மாதிரி தேச பக்திக் கீதங்கள். சூ... சொல்லி வேலையில்லை.

அது கிடக்கட்டும் பொடியள் எங்கட பேரியல் அம்மாவும் கக்கீங் காக்காவும் என்னவோ கதைச்சிருக்கினமாம். தங்களை ஒதுக்கிப் போட்டு எல்லாஞ் செய்து போட்டினமெண்டு, ங எப்பிடிக் கதை. எடேய் எங்கட பொடி ரத்தஞ் சிந்திப் போராடினாத்தான் உரிமை கிடைக்குமெண்டு உயிரைக் குடுத்துப் போராட, சீ... வன்முறையில இறங்கவோ... அது கூடாது. நாங்கள் அரசாங்கத்தோட இணைஞ்சு நிண்டுதான் எங்கட மக்களுக்கோ, எங்களுக்கோ தேவையானதை வாங்கிக் குடுக்கோணும் எண்டு கூடி ஒண்டாத் திண்டு குடிச்சிருந்தவை. இப்ப என்ன தனியக் கேக்கிறது. எனக்கு தலையச் சுத்துதடா. இவையால தங்கட பதவியளயாவது மக்களுக்காக விட்டுக் குடுக்க முடியுமோ எண்டு பாப்பம். எது? அது நடக்குமெண்டோ- இருந்துபாரன். இது கிடக்க இந்த நாடு தழுவிய போராட்டம் நாடு தழுவிய போராட்டம் எண்டு மாரிப் பொக்கானுகள் மாதிரிக் கத்திக் கொண்டிருக்கிற ஜே.வி.பி காறர் அரசாங்கத்தை இப்போதைக்கு கவுக்கமாட்டினமாம். ஏனெண்டு கேக்கயில்ல. ஒரேயடியா இதை தேர்தல் பிரச்சாரமா மாத்திப் போடப்படாத பாடுபட்டுத்திரியினம். சொன்னாப் போல பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில ஏறிற்றுதெல்லே. எட அது தெரியாதே உனக்கு அடுத்த சனாதிபதி வேட்பாளரா அநுராத்தம்பியெல்லே வாறார். அவ பதவிக்கு வந்த உடன சனாதிபதி உரையெண்டு ரீவியள் ரேடியோக்கள்ளயெல்லாம் ஒரு பேருரை செய்தவாயெல்லே மறந்திருக்க மாட்டாய். அதிலதான் புரியனோட தனிச்சிருந்து கயிற்றப்பட, தாயும் மோனும் தன்னைப் பற்றியும், தன்ர புரியனைப் பற்றியும் அவதூறு கதைச்சவை. உவன் விக்டர் ஐவன்தான் ரெண்டுபக்கமும் சிண்டு முடிஞ்சுதிரிஞ்சவன். அது இதெண்டு ஓராறு கண்ணீரை ஒருமிக்கச் சாச்சுப் போட்டு... பிறகு கிழடுபத்தி ஏலாமக் கிடந்த தாயைக் கொணந்து பிரதமர் பதவி குடுக்கயில்லயே. இப்ப தம்பி... எல்லாம் ரத்தபாசம். குடும்பப்பிணைப்பும் ம்... எங்க போப்போகுதோ.

# சமூக ஒழுங்கும் மனித மேம்பாடும்

**சமூகத்தின் மனிதனின் ஒவ்வொரு செயல்களுக்கும் காரண காரியங்களுண்டு. ஒவ்வொரு இயற்கை நிகழ்வுகளுக்கும் ஒவ்வொரு உயிரினங்களின் இயல்புகளுக்கும் காரண காரியங்களுள்ளன. வானவில் தோன்றுவதற்கும், யானை புழுதியை வாரித் தன் மீது இறைத்துக்கொள்வதற்கும், தேசத்தின் எழுச்சி நிகழ்வுகளுக்கும் அர்த்தமுண்டு. அரசியல் முரண்பாடுகள் தோன்றுவதற்கும், போர்கள் நிகழ்வதற்கும் நாடுகளிடையே அபிவிருத்தி வேறுபாடுகள் காணப்படுவதற்கும் விளக்கங்களுள்ளன. இவை புரிந்துகொள்ளப்பட வேண்டிய அம்சங்களாகும். இவையாவும் சமூக ஒழுங்கைப் பேணி மனித மேம்பாட்டைக் கருத்தில்கொள்வன.**



உலக ஜீவராசிகளில் இலட்சியம் கொண்ட ஒரே ஒரு பிராணி மனிதன். மனித வாழ்வுக்கு அர்த்தம் உண்டு. நோக்கம் உண்டு.குறிக்கோள் உண்டு. ஒவ்வொரு தனிமனிதனும் இந்தச் சமூகத்திற்கு ஒரு உயிரினம். (Biological orgarism) என்கிற வகையிலே தான் வந்துசேருகிறான். சமூக முன்னேற்றத்திற்கு சமூக ஒழுங்கை நிலைநாட்டும் வகையில், மனித மேம்பாட்டைச் சிந்திக்கும் வகையில் அவன் உருவாகின்றான்; உருவாக்கப்பட வேண்டியவனாகின்றான். ஓர் உயிரினப்பொருள் பல்வேறு ஆக்கக் கூறுகளைக்கொண்டு அமைகிறது. இவ் ஆக்கக் கூறுகள் ஒரே நிறுவனமாக அனைத்து மனிதர்களின் நலன்களையும் கருத்தில்கொண்டு செயற்படும் போதுதான் உயிரினப்பொருள் ஓர் ஒழுங்கைப்பெற்று இயல்பாக இயங்குகிறது. சமூகப் பொறுப்பு வாய்ந்த ஒவ்வொரு மனிதர்களினதும் வாழ்க்கைத்தர உயர்விலுமே மனித மேம்பாடு புத்துயிர் பெறுகின்றது.

சமூகத்தின் ஆக்கக்கூறுகளிடையே படைப்பாற்றலும், மேம்பாட்டுத் திறன்களும் மனித மூலவளங்களாக ஒத்திசையும் ஓட்டங்களாகச் செயற்படும் போதே நிலைத்த, நேர்மையான சமூகம் இயங்குகின்றது. அறிவியல்கள், கலைகள், மொழி, உரிமைகள், கருத்துக்கள், சட்டம் போன்றவை சமூகப் பொறுப்புடன் அனைத்து விடயங்களிலும் நேர்மை காக்கப்படுதல் வேண்டுமென்பதும் மனித மேம்பாட்டின் ஒழுங்கு விதியாகின்றது.

சமூக நீதியை நிலைநாட்டி சமூக ஒழுங்கைப் பேணுபவர்கள், முழுமையான அனுபவமும், பூரணமான அவதானமும் முழுமையான உட்கிரகித்தலுமுடையவராக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு கடமை உண்டு. தொழில் என்பது மனிதர்கள் தத்தம் இயலுமைக்கேற்ப தம் ஆற்றலை ஒன்றுதிரட்டி உழைத்தலேயாகும். ஒவ்வொரு தொழிலும் சமூக ஒழுங்கை நிலைநாட்டி இயங்கச்செய்கின்றது. ஒவ்வொரு சமூக உறுப்பினருக்கும் மற்றொரு தொழிலுடைய சமூக அங்கத்தவர் தேவையுடையவராகின்றார். ஏற்றத்தாழ்வுகள், வருமானச் சமமின்மையை எவ்வெவ் நிலைமைகளிலும், தத்தம் கோலத்திலும், அரசோ, சட்டமோ உருவாக்கலாம். ஆனால் கடமையும், சேவையும் அர்ப்பணிப்புடன் கூடியதாகவே இருக்கவேண்டுமென்பதும் விசுவாசம் நிறைந்த நேயத்துடன் ஆற்ற வேண்டுமென்பதும் அனைவரும் மனங்கொள்ளத் தக்கதே.

தொழில் வாண்மையில் அடிமட்டம், மேல்மட்டம் என்ற பிரிப்புச் செய்வதானது அறிவீனம். எந்த நிலையில் உயர்ந்தாலும் பதவிப் பவிசை நிலை நாட்டினாலும் "செய்யும் தொழிலே தெய்வம்" என்பது அனைவரும் அறிந்ததே. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்" "உண்டிகொடுத்தார் உயிர்கொடுத்தாரே" என்பதான முன்னோர் வாசகங்கள் உழவுத் தொழிலின் மேன்மையை எல்லாத் தொழிலுக்கும் உயர்ச்சியான பாதையைக் காட்டும் தொழிலாக, சேவையாக, தன்நலம் கருதாத உழைப்பாக எம்முன் கொண்டுவந்து நிறுத்தியுள்ளார்கள். மனித மேம்பாட்டின் ஆணிவேராக இத்தொழில் எம்மிடையே பரிணமிக்கக்காண்கிறோம்.

சமூக ஒழுங்கை, உறவை ஏற்படுத்துவதில் பல்வேறு நிறுவனங்கள் சமூகத்தில் பங்காற்றுகின்றன. அவை குடும்பம், மொழி, மதம், வேலைப்பங்கீட்டுமுறை (System of Division of Labour) ஆகியவை குறிப்பிட்டுக்கூறப்படுகின்றன.

குடும்பம் என்று சொல்லிக்கொண்டு தமக்குள் முரண்பட்ட எண்ணக்கருக்களை வளர்த்துக் கொள்வது மனித மேம்பாட்டுக்கு உதவாது. என்னால் எத்தனை பேர் உயர்ந்தார்? வாழ்ந்தார் என்பதே குறிக்கோளாக்கி, சமூகத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட நெறிமுறைகளுக்கேற்ப உண்மைகளுக்கேற்ப தன்னை உருவாக்கிக்கொள்ளுதல் வேண்டும். "தாய்" அதற்குரிய இடத்தில் போற்றப்படவேண்டும் என்பது மிக மிக உண்மையானது. ஆனால் இன்றைய எமது தமிழ்ச் சமூகத்தில் "அம்மா" என்று அழைப்பதற்குரிய உரிமையை உறவை பூரணமாக எந்த ஒரு உண்மைப் பண்புள்ள பெண் வழங்குகிறாளோ அவள் அனைவருக்கும் தாய்தான். பெண்கள் அனைவரையும் தாயாகக் கருதினால் வன்முறைகளுக்கு இடமேது. பாரதியாரோ ஒரு சிறுமியையே தாயாகக் கருதி "சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா என் செல்வக்களஞ்சியமே" என்பதாகப் பாடியுள்ளார். இன்றைய எமது தேசத்தில் சமூகசேவை மனப்பாங்கில் எத்தனையோ நிறுவனங்கள் உருவாக்கப்பட்ட நிலைமைகளில் "பெற்றால் தான் பிள்ளையா?" எனும் மனப்பாங்கில் எத்தனை தாய்மார் அர்ப்பணிப்புடன் வருங்காலப் பிரஜைகளை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

மனித மேம்பாடு என்பது சமூக ஒழுங்கை சாட்டுக்களால், குறைநிரப்பு வாதங்களால் நிரப்பி தன் தேவை கருதிய கண்டு பிடிப்பாக அமைத்து விடக்கூடாது. பழமைவாதம் என்பது வெறும் மரபுகளாலும், பண்பாட்டு மோசடிகளாலும் மனித மேம்பாட்டுக்கு உதவாத பூச்சுக்களைத் தவிர்த்தலுடன் முற்றுப்பெறலாம். ஆனால் பொதுஉடமைக் கருத்துக்கள் சமூகப் புரட்சியை உண்டு பண்ணி, சமூகப் படிமலர்ச்சிக்காக வாதாடுபவை. தனி மனிதமேம்பாடு, சமூகமேம்பாடாக உருவெடுப்பதற்காய் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு வழி சமைத்தவை. உயிரற்ற உடலுக்கும் உணர்வற்ற மனிதனுக்குமுள்ள சம்பந்தம் எதுவெனில் கருத்துக்களை மோசடிசெய்வதும், கருத்துக்களை வெளியிடும் மனிதனை உயிரற்றவனாக்குவதுமே.

சீனப் பழமொழியொன்று பின்வருமாறு கூறுகின்றது. "மகத்தான மனிதர்கள் கருத்துக்களைப் பற்றி விவாதிக்கிறார்கள்; சாதாரண மனிதர்கள் நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதிக்கிறார்கள்; மட்டமான மனிதர்கள் நபர்களைப் பற்றி விவாதிக்கிறார்கள்; இந்தப் பழமொழி எம்மெல்லோருடைய நிலைமைகளையும் எமக்குப் புரிய வைக்கின்றது" மாறாக ஒரு அநியாயத்துக்கெதிரான போராளி, அநியாய வாதியைக் கொன்று புதைக்க வேண்டியவனாகிறான். எப்பொழுதும் தேர்ந்தெடுத்த செயற்பாட்டின் மீது பொறுப்புணர்வும், நேர்மையும் கொண்டிருத்தல் சமூக ஒழுங்கை நிலை நாட்டி மனித மேம்பாட்டிற்கான திறவுகோலாக அமைந்துவிடுகிறது.

தனது நாட்டின் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார சூழ்நிலைகள், நடைமுறைத்தேசிய அனைத்துலக விவகாரங்கள், விஞ்ஞான தொழில்நுட்ப, விடயங்கள் என்பவை உட்படத்தானிருக்கும் சூழல் பற்றிய தெரிதிறனை மதிப்பிட உதவுவது பொது அறிவாகும். சமூகத்தின் மனிதனின் ஒவ்வொரு செயல்களுக்கும் காரண காரியங்களுண்டு. ஒவ்வொரு இயற்கை நிகழ்வுகளுக்கும் ஒவ்வொரு உயிரினங்களின் இயல்புகளுக்கும் காரண காரியங்களுள்ளன. வானவில் தோன்றுவதற்கும், யானை புழுதியை வாரித் தன் மீது இறைத்துக்கொள்வதற்கும், தேசத்தின் எழுச்சி நிகழ்வுகளுக்கும் அர்த்தமுண்டு. அரசியல் முரண்பாடுகள் தோன்றுவதற்கும், போர்கள் நிகழ்வதற்கும் நாடுகளிடையே அபிவிருத்தி வேறுபாடுகள் காணப்படுவதற்கும் விளக்கங்களுள்ளன. இவை புரிந்து கொள்ளப்படவேண்டிய அம்சங்களாகும். இவையாவும் சமூக ஒழுங்கைப் பேணி மனித மேம்பாட்டைக் கருத்தில் கொள்வன.

ஒருவனின் தர்க்க ரீதியாக நியாயம் காணும் திறனையும் தரப்படும் தகவல்களிலிருந்து ஊகித்துணரும் ஆற்றலையும் மதிப்பீடுசெய்வதற்கு நுண்ணறிவு உதவுகின்றது. ஒருவனின் சொற்புலமை, எண்புலமை, கட்புலமை என்பனவற்றினை மதிப்பிடுவதன்மூலம் அவனின் தர்க்க ரீதியான நியாயம் காணும் திறனை வெளிப்படுத்தமுடியும். சொல்பவற்றிலிருந்தும், படிப்பவற்றிலிருந்தும் மெய்க்கருத்தைப் புரிந்துகொள்வது கிரகித்தலாகும். ஒரு வாசகப் பகுதியைப் படிக்கும்போது அல்லது கேட்கும்போது அதற்கான அர்த்தம் இரண்டாக இருக்கமுடியாது. அர்த்தம் ஒன்றாக இருக்க அதன் பொருளைப் பலவாறாகப் புரிந்துகொள்பவர்களும் இருக்கிறார்கள். சரியாகப் புரிந்து கொள்பவன் அதன் மெய்க் கருத்தைப் புரிந்துகொள்கிறான். மாறாக இல்லையேல் வலிந்து எதிர்மறையாகச் சிந்திப்பவர்கள் சமூக ஒழுங்கைச் சீர்குலைத்து விடுவார்கள்.

மொழியானது சமூக உறுப்பினர்களிடையே ஓர் இணக்கமான உறவு ஏற்பட வழிவகுத்துக்கொடுக்கின்றது. மொழியின் மூலம் தனிமனிதர் கள் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்து பொதுக்கருத்துக்களை உருவாக்கி மேற்கொள்கின்றனர். அந்தப் பொதுக் கருத்துக்கள் நிலைபெறும் போதே அவர்களிடையே ஒத்த உணர்வுபெற முடியும் என்பதுடன் தற்காலத்திற்கேற்ப முற் போக்கான சிந்தனைகளின் வழியே சமூக ஒழுங்குடன் கூடிய மனித மேம்பாட்டை அடையமுடியும் என்பதும் மனங்கொள்ளத்தக்கது. நற்சிந்தனைகள் நல்ல மனங்களிலிருந்தே தோற்றம் பெறத்தக்கவை. தனி ஒருவனை வீழ்த்துவதற்காக சிந்தனைகளையும், காலத்தையும் விரயம் செய்வது மேம்பாடாகாது. பேரினவாதச் சிந்தனைகளில் ஒன்றான புத்தரின்

## இனியவள்

சிந்தனை கேள்விக்குறியானது? எத்தனையோ விதமான சமூக பொருளாதாரச் சேதாரங்களுடன் மனித உயிர்களையும் காவுகொண்ட சிந்தனைகள் அன்பைப்பற்றி அலட்டிக்கொள்வதில் அர்த்தமற்றவை. மாறாகத் தம்மையே இந்தத் தேசத்தின் மேம்பாட்டிற்காக, தமிழ்ச் சமூகத்தின் வாழ்விற்காக, உன்னத உரிமைக்காகத் தந்துவிட்ட தியாக நெஞ்சங்களின் சிந்தனைகள் பலம் பொருந்தியவை. அனைத்து தமிழ்ச் சமூகத்திற்கும் ஏற்புடையவை. மனித மேம்பாட்டிற்கு உறுதியானவை.

பொது மக்களுடன் பேசும்போது அல்லது அவர்களுக்கு எழுதும்போது பொதுநல உறவு உளப்போக்கினைக் கைக்கொள்ளல் மிக அவசியமென்பதை நினைவிற்கொள்ள வேண்டும். நறுக்குத் தெறிப்பான நயமற்ற செயல்களும், அதிகாரத் தொனி படைத்த உளப்பாங்குகளும் செயல் வடிவங்களும் வலிந்து அடிமைச் சங்கிலியால் பூட்டும் செயல்பாங்கும் மறுதலிப்பவை. பூரணமற்ற, விழல் நியாயம் பேசும் மனிதத் தொடர்புகள் சமூக ஒழுங்கைச் சீர்குலைப்பன. மனிதன் தன் தொழில் முறைமைகளில், கடமைகளில் நேரத்தின் கணிப்பானது பூரண கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவன். சமூகத்தில் ஒவ்வொரு மனிதனின் பாதிப்பிலும் துன்பத்திலும் அதிக கவனம் செலுத்துகின்ற சட்ட திட்டங்கள், பழக்க வழக்கங்கள் புறக்குடத்தில் வார்த்த நீர்போன்றவை. படி மலர்ச்சி என்பது மேம்பாட்டை நோக்கிய இலக்கு. உபயோகமற்ற சிந்தனை வார்ப்புகள் பொறுப்பற்ற விதத்தில் விளக்கம் கொடுப்பது வீணானது.

மனித நடத்தைகளை விவரிக்கும் கணிப்பீடுகள், முக்கியமானவையாகவும், போற்றத்தக்க முயற்சிகளாகவும், இருந்தபோதும் எமது நாகரிகத்தைப் பூரணமாக விளங்கிக்கொள்வதற்கு அவை போதுமானவையல்ல. தம்மளவில் தென்னிந்திய கலாசாரங்களை அடியொற்றி சடங்குகளை வடிவமைத்து சமுதாயச் சீரழிவுகளைக் கண்ணாரக் கண்டு களித்து தமக்குள் உயர்வுகண்டு, யாரோ ஒரு தனிமகனை பகல் முழுவதும் தொழில் காரணமாக வீட்டுக்கு வெளியே காலத்தைக் கழிப்பவனை அடிமைச் சங்கிலியுால் பிணைத்து ஒருவித திருப்தியும் காண்கிறார்கள். இதில் இவர்கள் கண்ட சமூக ஒழுங்கு என்ன? மனித மேம்பாடு என்ன? மாறாக இந்தத் தேசத்திற்கு இந்தக் குடும்பங்கள், இந்தத் தனி மனிதர்கள் செய்த பங்களிப்புக்கள் யாவை? சொகுசு வாழ்க்கையில் சொந்தங்களை இனங்காணும் விஷஜந்துக்கள் அடுத்தவன் மேம்பாட்டை எவ்விதத்தில் சிந்திக்கின்றன?

சமூகமானது வறியவர்களையும், செல்வர்களையும் இனம் காண்கிறது. சமூக ஏற்றத்தாழ்வுகளையும் தத்தம் கௌரவம், வசதிக்கமைவாகக் கண்டுபிடிக்கிறது. இதற்கு யார் காரணம்? இதனால் ஏதாவது பயன் உண்டா? என்பதாக வித்தியாசமாக வினைத்திறனுடைய விதத்தில் சமூக அசைவைக் கருத்தில்கொள்வதாக மனநிலைகளை மாற்றியமைக்கின்றதா? அடுத்தவன் வீழ்வையும் குறைநிலைகளையும் மன்றாட்டமாக மனதில் கொள்பவர்கள் மனுக்குலத்தின் ஒழுங்கமைப்பையும் மேம்பாட்டையும் முன்னெடுத்துச் செல்பவர்களாக எப்போது மாறுவார்கள்? "அதுகளிட்டை ஒன்றுமில்லை" "இவர்களிடம் கன பொம்பிளைப்பிள்ளை", "அவரிடம் நிறையக்கிடக்கு", "உந்த வீட்டிலை உங்களுக்கு தரித்திரம்" இவ்வாறாகத் தாம் இருக்கும் இருப்பிடங்களை துர்நாற்றமெடுக்கச் செய்து ஏதேதோ ஆராய்ச்சிகளை செய்துவிடும் இத்தகைய மனிதர்கள் சமூக ஒழுங்கை, மனிதமேம்பாட்டை எவ்வாறு புரிந்து கொள்வார்கள்?

இந்த யுகத்தில் விஞ்ஞானத்தின் பரந்த அடிப்படைத் தத்துவங்களை விளக்கி நடப்பதற்கு அக்கறையுடன் முயற்சி செய்யாத எந்தவொரு மனிதனும் பண்பட்ட மனிதன் எனக் கருதப்படமாட்டான். தமது சொந்த ஆய்வுப் புலத்திற்கு அப்பால் அக்கறை கொள்ளாத சில விஞ்ஞானிகள் இருக்கின்றனரேயாயினும் பொதுவாக

(18ஆம் பக்கம் பார்க்க)




**உண்மைச்சம்பவம்**


# வேரும் கிளையும் வேதனைகளும்

சு.ஞாலவன்

நக இடுக்குகளில் ஊசி முனையெனத் தீண்டும் குளிரின் உக்கிரம், அவர்கள் இதுவரை அறியாததாக இருந்தது. காதுச்சோணைகள் விறைத்துக் கல்லுப்போல இருந்தன. எங்கேயாவது பதிந்திருந்த மரக்கிளைகளில் தட்டுப்படும்போது, முறிந்து விட்டனவோ என எண்ணத்தை உண்டாக்கியது ஏற்பட்டவலி. கண்ணுக்கெட்டியதூரம்வரை விரிந்துகிடந்த வெண்பனிக்கம்பளத்திலே, இவர்களின் அநாதரவான தனிமையைப் போக்குவதற்கு ஓங்கியிருந்த ஊசியிலை மரங்களைத்தவிர வேறெவரும் அங்கிருக்க வில்லை. "அம்மா! அப்பாவின்ர இடத்துக்கு இன்னும் கனதூரம் போகோணுமோ? காலெல்லாம் நோகுதம்மா!'' "இல்லை அப்பன்! இன்னும் கொஞ்சத்தூரம்தான். கெதியா நாங்கள் போடுவம். வீட்டை போயிட்டோ மெண்டால் குளிர் இருக்காது எண்டு அப்பா சொன்னவர். அப்பா பிள்ளைக்கு வேணுமெண்ட விளையாட்டுச் சாமான் எல்லாம் வாங்கித் தருவார்''. ஏதோ மகனின் மன ஆறுதலுக்காக அப்படிச் சொன்னாலும், 'எங்கு நிற்கிறோம் ? இன்னும் எவ்வளவுதூரம் போகோணும்?' என்றெல்லாம் அவளுக்கும் தெரிந்திருக்கவில்லை. விமானத்தில் வந்திறங்கியவர் களை நீண்ட தூரக்கார்ப் பயணத்தின் பின்னர் அல்ப்ஸ் மலைகளில் மொழி தெரியாத முகவரின் ஆள் ஒருவன், "இப்படியே நேரே போனால் ஊர்மனைகள்வரும். அங்கே பொலிஸ்காரரிடம் கணவனின் முகவரியைக் காட்டினால், கணவனுக்கு அறிவிப்பார்கள்" என்று ஆங்கிலம் கலந்த ஏதோ ஒரு மொழியில் கூறியிருந்தான். உதடெல்லாம் விறைத்து வெடிக்கத்தொடங்கி இருந்தது. மூக்கு வடிகின்றது என மனம் சொன்னாலும், அதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையிலான எந்தவித உணர்வுகளையும் ஸ்பரிசித்துககொள்ளும் நிலையில் அவள் இருக்கவில்லை.

French Corner இலும், House of Fashion இலும் சுற்றிச்சுற்றிப் பார்த்தெடுத்த உடுப்புக்கள் எதுவுமே பெரிதாக உதவுவதாகத் தெரியவில்லை. 'சீ! அப்பையும் இவர் ரெலிபோனில சொன்னவர், ஜீன்ஸ் போட்டுக்கொண்டு வரச்சொல்லி'. அவள் மனம் ஏதோ எங்களுடைய கலாச்சாரப்பண்பாடுகளைப் பேணவேண்டுமென்ற எண்ணத்தில், பஞ்சாபியையே நாடியிருந்தது. அது குறித்து அவள் மனதில் கடுமையான கேள்விகள் எழத்தான் செய்தன. வாழும் சூழலின் தட்பவெப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு உடை உடுத்திக் கொள்வதை அவள் எதிர்க்கா விட்டாலும், அவளால் திடீரென்று ஏனோ மாறிவிட மனம் இடமளிக்கவில்லை. கால்களின் வேதனை களை சட்டை செய்யா மல் வேகமாக நடக்க முயற்சித்தாள். "அம்மா! இந்த ஐஸ்"க்கு சீனி கலந்தால், எங்கட ஊர் ஐஸ்கிறீம் மாதிரி ரேஸ்ரா வருமே? அப்பாட்டை போனாப் பிறகு ஒவ்வொருநாளும் ஐஸ்கிறீம் செய்து சாப்பிடுவன். ஆனா நிலத்தில விழவிடாம முதல்லையே ஏந்திப் பிடிக்கோணும். என்னம்மா!". தக்காளிப்பிஞ்சு போல் குளிரில் சிவந்திருந்த அவனது மூக்கு நுனியில் கண்டுபிடிப்புக்குதூகலம் பெருகியிருந்தது. "அம்மா! அங்க பாருங்கோ லைற்வெளிச்சம் தெரியுது". அப்போது தான் அவளும் நிமிர்ந்து தூரப்பார்த்தாள். குடிமனைகளை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற தைரியம் நெஞ்சில் பிறந்தது. மின்விளக்குகளைக் கண்டபோதுதான் கூடவே பொழுதும் நன்றாகவே இருட்டி விட்டதை உணர்ந்தாள். மிஞ்சிக்கிடந்த முழுப்பலத்தையும் திரட்டி மகனின் நடைக்கு இணையான வேகத்தோடு நடந்தாள். 'ஏதோ தான் பெரிய சமையல்காரன் எண்டு இவர் தொலைபேசியில அடிக்கடி சொல்லிறவர். ஒருக்கால் அவற்றை சமையலைச் சாப்பிட்டுப் பார்க்கோணும்!', நினைத்துப் பார்த்தவளுக்கு வெட்கத்துடன் சிரிப்பு வந்தது. 'சீ! பாவம் மனுசன்! ஆம்பிளைச்சமையல் உப்புப்புளியில்லாமல் இருக்கும். நான்தான் போய் வடிவாய் சமைச்சுக் கொடுக்கோணும். வீடு, வாசலெல்லாம் எப்பிடி கூட்டி வடிவா வைச்சிருப்பாரோ? இனிமேல் வீட்டுவேலை எல்லாம் நான் தான் செய்யவேணும். ஊரில இருக்கிற அவற்றை தங்கச்சிக்கும் நல்லதொரு இடத்தில வரன் பார்க்கோணும். சுவிசிலேயே பார்த்தால், எங்களுக்கு அயலிலேயே உறவா இருக்கும். ஒருத்தருக்கொருத்தர் கூடமாட ஒத்தாசையாவும் இருக்கும். வீரச்சாவடைந்த என்ர தம்பியின்ர ஞாபகார்த்தமா மாவீரர் படிப்பகம் ஒண்டு கட்டோணும். நானே உழைச்ச காசில செய்யோணும். ஓ! சும்மா போய் வீட்டுக்குள்ளை முடங்கிக்கிடக்காமல், மொழியைப் படிச்சுப்போட்டு ஏதாவதொரு பகுதிநேர வேலை செய்யோணும். இவற்றை வருமானத்தை குடும்பத்துக்கு வைச்சுக்கொண்டு, என்ர சம்பளத்தில வர்ற காசை அப்பிடியே இயக்கத்துக்குக் குடுக்கோணும்'.

சுவிஸ் செல்வச் செழிப்பான நாடு. அங்கு ஈழத்தமிழர்கள் கடுமையான உழைப்பிற்கும், நம்பிக்கைக்கும் பெயர் போனவர்கள். தமிழனாக இருப்பதே அங்கு தொழில்வாய்ப்பிற்கானதொரு தகுதியாகி



விடுகிறது. இப்படி நற்பெயர் பெற்றதனால் தானோ என்னவோ, அங்குள்ள ஐக்கியநாடுகள் சபையின் நிர்வாகத்தலைநகரான ஜெனீவாவிலே, வருடத்தில் ஒருநாள் ஈழத்தின் குரல் ஓங்கி ஒலிப்பதற்காக வழிவகை செய்து கொடுக்கிறார்கள்! என்னதான் அந்நிய சுகபோகங்கள் நிறைந்து கிடந்தாலும், அங்கு வாழும் நம்மவர்கள் தாயகத்தின் விடுதலையை மறக்காது, போராட்டத்திற்கு கடும் பங்கு ஆற்றி வருகிறார்கள். நேரில் இதுவரை அங்கு அவள் போயிருக்கவில்லையே தவிர, 8 வருடங்களாக தொலைபேசி மற்றும் கடிதங்களினூடாக தன்னவனோடு உணர்விலே கலந்திருந்த அவளுக்கு, அவன் அங்கத்தைய அனைத்து விபரங்களையும் அவளோடு பகிர்ந்திருந்தான்.

நினைவுகளிலே திளைத்திருந்தவளுக்கு ரணவேதனையின் உச்சக் கட்டமாய், உயிர்மூலத்தி லிருந்து உதிரம் உப்பிப் பாய்வது போலொரு வலி. அவளால் மேலும் முடியாம லிருந்தது. வலியின் பிறப்பிடத்தை இனங்காண முடியாத அளவு குளிரின் உக்கிரம்! "அப்பன்! அம்மாக்கு இயலாமக் கிடக்கடா. உதிலை கொஞ்சம் இருக்கப்போறன். அந்த வெளிச்சம் தெரியிற பக்கமாப்போய், ஆராவது ஆக்களைக் கண்டால் கூட்டிக்கொண்டு வாங்கோடா!", என்றபடி அவள் குளிர் அரக்கியின் பனிக்கொழுப்பு படர்ந்திருந்த நிலத்திலே குந்தி விட்டாள். நீக்கமற நிறைந்திருந்த அந்தப் பனிவெளிக்குள் ஒரு அநாதரவான நிலையிலே கூப்பிடுவதற்குக்கூட தன் 7 வயதுக் குழந்தையைத் தவிர யாருமற்ற நிலையில்! 'சே! இந்த நேரத்தில இது வேற வந்து தொலைக்கோணுமே!'. 'அம்மா!' என்று யாரையாவது அருகிலே அழைத்துக்கொள்ள வேண்டும்போல் இருந்தது அவளுக்கு. "அம்மா! நீங்க இருங்கோம்மா. நான் ஓடிப்போய் ஆரையாவது கூட்டிக்கொண்டு வாறன்'', பதட்டப்பட்டவாறே கூறிய அவன் தன் தாயை அப்படி ஒரு கோலத்தில் ஒருநாளும் பார்த்திருக்கவில்லை. முகம் எல்லாம் வெளிறி பலவீனமான ஒரு நிலையில் இருந்தாள். தான் கொளுவியிருந்த முதுகுப்பையைக் கழற்றி, தாய் இருப்பதற்கு அணையாக வைத்தான். "செல்லம் கவனமடா! வீடுகள் பக்கத்திலைதான் இருக்கு. கவனமாப் போட்டு வரோணும்! என்ன!", அவன் முகத்தை அருகிலிழுத்து நெற்றியிலே முத்தமிட்டாள். அவனுக்கு தாயின் காய்ந்த உதடுகளின் ஸ்பரிசம் இனம்புரியாத கவலையை அளித்தது.

மின்விளக்குகள் மிகுந்திருந்த திசையினை நோக்கி ஓடினான். 7 வயதுக்கு அவனது வேகம் மிகவும் அசாதாரணமானதாக இருந்தது. வீடுகளை மிகவும் அண்மித்துவிட்டான். முதல் வளவின் வாசல் கதவிலே தட்டினான்....இறுக்கித் தட்டினான். எவருமே வரவில்லை. அடுத்த வீட்டினுள்ளே ஆட்கள் இருப்பது மூடப்பட்ட ஜன்னல் கண்ணாடிகளினூடாகத் தெரிந்தது. எப்படி அவர்களை அழைப்பதென்று தெரியாமல் பலம் வந்த மட்டும் வெளி 'கேற்' இல் தட்டினான். கேற்றைத் திறந்து உள்ளே போனால் வீட்டுக்காரர் திட்டுவார்களோ என்ற அச்சமிருந்தாலும், வேறுவழியில்லாமல் படலையைத் திறந்து வளவுக்குள் நுழைந்தான். வீட்டுக்கதவில் தட்டலாம் என்றெண்ணியவனாய் அவசரமாகப் படிக்கட்டுகளிலே ஏறும்போது, Glatteis எனப்படும் வழுக்கும் நிலையிலிருந்த படியில் எகிறி "அம்மா!!" என்றபடி விழுந்தான்.

கண் விழித்துப் பார்த்தபோது சுற்றிவர வெள்ளை முகங்கள். தான் ஒரு கட்டிலில் படுக்க வைக்கப்பட்டிருப்பதை அவன் உணர்ந்தான். ஏதோ புரியாத மொழியில் அவர்கள் பேசிக்கொள்வதையும், தன்னை ஏதோ கேட்பதாகவும் மாத்திரம் அவனுக்கு விளங்கியது. அவர்களிடையே தான் தனிமைப்பட்டுவிட்டதை நினைக்க அழுகை வரத்தொடங்கியது. அப்போதுதான் திடீரென்று தாயின் நினைவும் வந்தது. 'இவையளை அம்மாவின்ர இடத்துக்குக் கூட்டிக்கொண்டு போனால், காரிலேயே அம்மாவைக் கூட்டிக்கொண்டு வரலாம். பாவம் அவா, நடக்கேலாமல் கஸ்ரப்பட்டவா', ஆனால் எப்படிக் கேட்பது? அவர்கள் கதைப்பதொன்றும் அவனுக்கு விளங்கவில்லையே! "அம்மாவுக்கு ஏலாம இருந்திட்டா... my mother ... அம்மாவுக்கு உதவி செய்யுங்கோ!'', வார்த்தைகள் மேலும் வரத்தெரியாமல்

தவித்தன. சீருடை அணிந்தவர் போலக் காணப்பட்ட உயரமான ஒருவர் முழந்தாழிட்டு அவன் உயரத்திற்குப் பதிந்தார். “வனக்கம்! எப்பரி சுகம்?” அவனது முகம் ஆச்சரியத்தால் விரிய, அழுகை சற்றே ஓய்வு கண்டது. “தமிழ்? ”, கேள்வி போலக் கேட்டார். ‘ஆம்’ என்பதாகத் தலையை ஆட்டினான். மேலதிகமாக அவன் ஏதும் கூறுவதற்கு முன்னதாகவே, அந்த உயரமானவர் தனது கைத்தொலைபேசியை எடுத்து எங்கேயோ தொடர்புகொண்டு கதைத்துவிட்டு, தொலைபேசியை அவனிடம் கொடுத்தார். “தம்பி ஒண்டுக்கும் பயப்பிடாங்கோ! உந்த பொலிஸ் மாமாக்கள் உங்களுக்கு உதவி செய்வினம். என்ன நடந்தது? ஆரோட வந்தனீங்கள்? இஞ்ச சுவிசில சொந்தக்காரர் ஆரேனும் இருக்கினமோ”, எதிர்முனையில் தமிழ்க்குரல் ஒன்று கேட்டது. “மாமா! அப்பாவிட்ட அம்மாவும் நானும் வந்தனாங்கள். அம்மாவுக்கு வருத்தம். குளிருக்குள்ள நடக்கேலாம ஐஸ்கிறீமுக்கு மேல இருந்திட்டா! பாவ..ம் அ . அ . ம்மா . . . ”, வார்த்தைகள் சிக்கித்தவிக்க அவன் அழுதான். “தம்பி! அழாங்கோ! நான் இப்ப கொஞ்ச நேரத்தில உந்த இடத்துக்கு வந்திடுவன். நீங்கள் அந்த பொலிஸ் மாமாட்டை ரெலிபோனைக் குடுங்கோ! ஒண்டுக்கும் யோசிக்கக்கூடாது, நாங்கள் இருக்கிறம்!”.

அழுதுகொண்டிருந்த அவனை அந்த உயரமானவர் தூக்கி நெஞ்சோடு அணைத்துக்கொண்டு ஏதேதோ சொன்னார். மொழி அந்நியமாக இருந்தாலும், அந்த அணைப்பின் தாய்மை அவனுக்கு ஓரளவு தெம்பை அளித்தது. சில நிமிடங்களில் தமிழர் ஒருவர் அங்கே வந்தார். தொலைபேசியில் கதைத்தவராக இருக்க வேண்டும். மிகவும் இருட்டிப்போயிருந்த திசைக்குள்தான் ஓடி வந்த வழியை இனங்கண்டு அவன் காட்ட, அவர்கள் குடியிருப்புகளைத் தாண்டி அந்த மலைப்பகுதியை நோக்கி ஓடினார்கள். இடையிடையே அவன் காட்டிய வழி பிழையாக இருந்தது. “ஆ..! அந்த நீட்டு மரங்கள் இருக்கிற பக்கம்தான்! “, அந்த உயர்ந்த காவல்துறை அதிகாரியின் கைகளில் இருந்தவாறே, இறங்குவதற்கு எத்தனிப்பவனாக அவன் அந்தரித்தான். அவர்கள் நெருங்கினார்கள்.

“அம்... மா...!!” மூடிய பனியின் கோரப்போர்வைக்குள், எங்கள் ஈழத்துப்பிள்ளை அவள் கல்லாக வெளிறிப்போன முகத்தால் தன்னை இனங்காட்டிக்கொண்டு, அங்கே தனித்துப் போயிருந்தாள்... அவளின் ஆவி மட்டும் நீளும் நினைவுகளிலே தன் உறவுகளிடம்:...

காற்றில் அவளது கனவுகள் எதிரொலித்தன: ‘ஏதோ தான் பெரிய சமையல்காரன் எண்டு இவர் தொலைபேசியில அடிக்கடி சொல்லிறவர். ஒருக்கால் அவற்றை சமையலைச் சாப்பிட்டுப்பார்க்கோணும்!’, நினைத்துப் பார்த்தவளுக்கு வெட்கத்துடன் சிரிப்பு வந்தது. ‘சீ! பாவம் மனுசன்! ஆம்பிளைச்சமையல் உப்புப்புளியில்லாமல் இருக்கும். நான்தான் போய் வடிவாய் சமைச்சுக் கொடுக்கோணும். வீடு, வாசலெல்லாம் எப்பிடி கூட்டி வடிவா வைச்சிருப்பாரோ? இனிமேல் வீட்டுவேலை எல்லாம் நான் தான் செய்யவேணும். ஊரில இருக்கிற அவற்றை தங்கச்சிக்கும் நல்லதொரு இடத்தில வரன் பார்க்கோணும். சுவிசிலேயே பார்த்தால், எங்களுக்கு அயலிலேயே உறவா இருக்கும். ஒருத்தருக் கொருத்தர் கூடமாட ஒத்தாசையாவும் இருக்கும். வீரச்சாவடைந்த என்ர தம்பியின்ர ஞாபகார்த்தமா மாவீரர் படிப்பகம் ஒண்டு கட்டோணும். நானே உழைச்ச காசில செய்யோணும். ஓ! சும்மா போய் வீட்டுக்குள்ளை முடங்கிக்கிடக்காமல், மொழியைப் படிச்சுப்போட்டு ஏதாவதொரு பகுதிநேர வேலை செய்யோணும். இவற்றை வருமானத்தை குடும்பத்துக்கு வைச்சுக்கொண்டு, என்ர சம்பளத்தில வர்ற காசை அப்பிடியே இயக்கத்துக்குக் குடுக்கோணும்’.

“அம்மா! இந்த ஐஸ"க்கு சீனி கலந்தால், எங்கட ஊர் ஐஸ்கிறீம் மாதிரி ரேஸ்ரா வருமே? அப்பாட்டை போனாப்பிறகு ஒவ்வொரு நாளும் ஐஸ்கிறீம் செய்து சாப்பிடுவன். ஆனா நிலத்தில விழ விடாம முதல்லையே ஏந்திப்பிடிக்கோணும். என்னம்மா!”, அவன் வெறித்துப் பார்த்தவாறே அழ மட்டுமல்ல, எதையுமே நினைக்க முடியாதவனாய்!

# மாலைக் கருக்கல்

மண்ணுலகை தீவதஞ்செய்துவிட்ட களிப்பில்
நெருப்புப்பழமாய் வதனம் தகதகிக்க
மேல் திசையில் களைப்பாறி
காணாமல் போகத் தயாராகும் கதிரவன்.

இன்றைய தீவதஞ்செய்தலின் செய்திகள் திரட்டவும்
நாளைய தாக்குதலுக்கு உளவு பார்க்கவுமாக
எதிர் வீட்டுக் காதலியைப்போல்
இரகசியமாய்த் தலை நீட்டி
வெண்ணொளி பொழியத் தொடங்கும்
மழலை நிலா.

பாதைகள் எங்கும் மஞ்சள் நீர்
தெளித்து வைத்து
கங்குலின் வரவுக்காக
காத்துக்கிடக்கும் தொடுவானம்.

புதுமனைவியின் தொடுதல்கள் போல்
காதுமடல்களையும் உச்சியையும்
தடவிச் சென்று மயக்கம் தரும்
இளமாலைத் தென்றல்.

வெயிலைப்பருகிய போதையில்
கடந்து செல்லும் காற்றோடு
மல்லுக்கட்டித் தள்ளாடும்
மரங்களின் கூட்டம்.

சூடிக்கொள்ளுதற்கு யாருமின்றி
விண்வெளித் தோட்டத்தில்
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
மலரத் தொடங்கும் நட்சத்திரப் பூக்கள்

நான் எறிந்த மௌனத்துகழ்களை
முகத்தில் வாங்கி
கவிதையாகத் திருப்பித் தந்து
வெளியெங்கும் கவியத் தொடங்கும்
இரவு.

இவை எதிலுமே மனம் லயிக்காது
இரையை மட்டுமே தேடும் விலங்குகள் போல்
காசு வேட்டையில் காலம் கழித்திருக்கும்
மனிதர்கள்.

இரவும் பகலும் தழுவிக் கொள்ளும்
எழில் நிறை மாலைக் கருக்கல்கள்
வாசிக்கப்படாத கவிதைகளைப் போல்
வந்து வந்து போகின்றன.
தினந்தோறும்.

வேல். லவன்

# மீள் நினைவு

ஒரு
பேனாவைப் போல்
எப்போதும்
கொட்டிவிடத் தயாராய்
என்னுள்
நிரம்பி விட்டிருக்கும்
ஞாபகங்கள்...
சின்ன தாய்
ஓர்
எறும்பின் ஊரல்
கொஞ்சம்
நளினமாய் மோதும்
மெல்லிய காற்று
ஏன்?
ஒரு
தேனீர்க்குவளையின்
ஓரம் கூடப்
போதுமானதாயிருக்கிறது
ஞாபகங்களை
கிளறி விடுவதற்கு!
இன்னமும்
என்னுள்
புருவம் சுருக்கி
பார்த்துக்
கொண்டேயிருக்கிறாய்
நீ
மறுபடியும்
மீன் தொட்டி
உடைந்து நொருங்குகிறது
மனசுள்....
நான்
மூடிவைத்து விடுகிறேன்
பேனாவை
மீண்டும்
ஏகாந்தத்தில் இருந்து
இறங்கும்
மனசு
இயல்பிற்கு.....

த.அகிலன்

# படித்ததில் பிடித்தது

## ஆசைகள்

ஆசைகள் வந்து போவதால்
தொல்லைகள் எம்மை வாட்டுது
பாஷைகள் தெரியாத உறவால்
வந்தவர்களின் பாசம் ஆட்டுது.

ஆசைகள் எதுவென
ஆன்றோர் அன்று சொல்லி வைத்தார்
தடைகள் தாண்டும் ஆசையால்
தவிக்கிற உள்ளங்கள் ஏராளம்.

உறவுகள் சொன்ன ஆசையால்
உரிமைகள் இழந்த குடும்பங்கள் பல
கனவுகள் ஆயிரம் வந்த போதும்
கற்பனை ஆகிய ஆசைகள் பல.

காதல் கொண்ட ஆசையால்
கண்ணின் பேதமை கண்டபோதும்
சாதனையாகிவிட்டாலும்
வேதனையானது உள்ளத்தில்.

பார்த்து நடித்த ஆசையால்
பாவியாகிவிட்ட வாழ்க்கை
சேர்ந்து வாழாவிட்டாலும்
சொந்தங்கள் பிரிந்த ஆசையானது.

ஒரு தலையான ஆசைகள்
ஒரு நாளும் நிறைவேறாது
ஒரு மனம் கொண்ட ஆசை
இணைந்த உறவானது.

மொழிவேறு இனவேறுபாடாலும்
ஆசைகள் வருவது உண்மைதான்
வந்த ஆசை எதுவானாலும்
வாழ வைப்பது உறவுதான்.

கண்ணால் பார்த்த ஆசை
கானல் நீராவது உண்மைதான்
உண்மையால் வரும் ஆசை
உறவான வாழ்க்கையாகும்.

*தமிழாக்கம்–இ–றஜித்*
*ஆங்கிலத்தில்–வாகீர்சீமா*

# வீடு

# வாழ்வினை மேம்படுத்துங்கள்..!

ஒரு குடும்ப நிர்வாகம் ஆண்,பெண் இருவர் கைகளிலும் இருக்கின்றபோதிலும் வீட்டில் அதிக பொறுப்புக்களில் சிக்குண்டிருப்பவள் பெண்தான். ஆண் தன் வேலைப்பீடங்களில் இருக்கின்ற வேலைகளை முடித்துக் கொண்டு அதில் கிடைக்கின்ற நேரங்களில்தான் வீட்டு வேலைகளை கண் நோக்குபவர்களாய் காணப்படுகின்றனர்.

எனவே இந்நிலைக்குள் பெண்ணானவள் தான் வீட்டில் பலவேலைகளைச் சுமக்கின்றாள். அவள் முழுமனதோடு தன் சக வேலைகளை செய்த பின்னர் தனக்கு கிடைக்கின்ற நேரங்களை வீண் போக்காது பலதரப்பட்ட துறைகளிற்குள் தன்னை உட்படுத்திக்கொண்டு மேன்மை பெறுகின்ற போதிலும் இவர் ஆழ் மனதினில் "நான் ஏன் வேலை



செய்யக்கூடாது'' எனக் கூறுபவரை காண்கின்றோம். இவர் மனதினில் பலதரப்பட்ட நினைவுகளோடு இவர்கள் வேலை வாய்ப்பினை தேட முனைவார் கள். நாம் இருவகையான பிரச்சினையை நோக்குவோமானால்,

"நானும் வேலை செய்தால் என் குடும்பச் சுமைகளை இலகுபடுத்தமுடியும்''

நானும் வேலை செய்தால் நானும் எதனையும் அதிகாரமாய்ச் செய்யமுடியும்.

உண்மையில் இவ்வாறானநிலைகள் சிலரிடமுண்டு.

இதனை நாம் ஒவ்வொன்றாய் பிரித்துப்பார்க்கின்றபோதினிலே "நானும் வேலை செய்தால் என் குடும்பச்சுமைகளை இலகுபடுத்த முடியும். இது உண்மை. நாம் கஷ்டப்பட்டு உழைப்போமானால் அதன் பயன்பாட்டினை நாம்தான் அனுபவிக்கின்றோம். இதனால் வீட்டு நிர்வாகம் சீர்குலைந்து போகாமல் அதனை கவனித்து, அடுத்தபடியாக வேலைவாய்ப்பினை தேடிக்கொள்வது நல் நோக்கு. இவ்வாறு பெண்ணானவள் வேலை வாய்ப்பினை தேடி குடும்பச் சுமையை குறைக்க முனையும்போது ஆணும் தான் மனைவியோடு சேர்ந்து சக வேலைகளைச் செய்தால் ஓர் புரிந்துணர்வுகூட ஏற்படும்.

"நானும் வேலை செய்தால் நானும் எதனையும் அதிகாரமாய் செய்துகொள்ளமுடியும்'' இந் நினைப்புக்கள் சிலரிடம் காணப்படுகின்ற போதிலும் அது மாறுபடல் வேண்டும். இதன் மூலம் முரண்பாடுகள் ஏற்படுவதற்கு நிறையவாய்ப்புண்டு. இவ்வாறான நினைப்புக் குடும்பத்தில் கஷ்டம் ஏற்படுகின்றபோது அதாவது பணம் போதாமை காணப்படுகின்றபோதுதான். தான் எதனையாவது வாங்க முனைந்து பணம் கோரும்போது ஆண் என்னிடம் தற்போது பண மில்லை என கூறும்போது ஓர் கோபவுணர்வோடு இந்த நினைப்பு தோன்றலாம்.

குடும்ப நிர்வாகத்தில் காசாளராய் வாழ்பவள் பெண்தான். அவள் ஊடாகத்தான் பணம் வெளியேற்றப்படுகின்றது. எனவே அதற்கேற்றவாறு பணம் கோரமல் நீங்கள் செய்தால் மனக்கசப்புக்கள் ஏற்படாதிருக்கும். இதற்காய் என்னால் அதிகாரமாய் செய்யமுடியும் என்ற மனநோக்கினை மனதிலிருந்து அறுத்தெறியுங்கள் இதன் பயனாக.

முரண்பாடுகள் அற்ற வாழ்வினை மகிழ்வோடு ஏற்படுத்திக்கொள்வதோடு நேரம் பொன்னானது. இதற்கேற்றவாறு அட்டவணைப்படுத்தி அடுத்தபடியாய் ஒவ்வொரு வேலைத் திட்டத்தினையும் ஏற்படுத்தி இருள் சூழ்ந்த வாழ்வினுக்குள் நிறைவான நிலாமதியை அஸ்தமித்து வாழ்வினை இன்னும் மேம்படுத்துங்கள்.

**S.மதீஸ்**

# கருத்துக்களுக்கு மதிப்பளிப்போம்

எவ்வாறான கருத்துக்களாயினும் அவைபற்றி ஆழ ஆராய்ந்து செயற்படுவது இன்றைய சமூகத்திற்கு இருக்கவேண்டிய பொறுப்பாகும்.

ஏனெனில் மூடத்தனம் நீங்கி அறிவியற் கருத்துக்கள் பல இருப்பினும் அவை சமூகத்திடம் சென்றடைவது அரிதே. அதற்கான



காரணம் யாதெனில் ஒருவர் பத்திரிகை, வானொலிபோன்ற ஊடகங்கள் மூலம் அல்லது ஏதோ ஒருவகையில் கிடைக்கப்பெற்ற தகவலை தன்னுடன் சார்ந்தவர்களிடம் கூற முற்படும்போது சகாக்களினால் விமர்சிக்கப்படுகின்றார்.

அதனால் அந்நபர் மூலம் சென்றடையக்கூடிய நல்ல கருத்துக்களை இச் சமூகம் தன் விமர்சனங்களால் தடைபோடுகிறது.

உதாரணமாக சில விமர்சனங்களை பார்ப்போமானால் "தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற நினைப்பு", "தான் ஒரு சமூகவாதி என்ற நினைப்பு", "அங்கபாரன் லெக்சர்வாரார்", "இது ஒருமாதிரியான ஆள்" போன்ற பலசொற்களால் கருத்துக்கூறுபவரை தாக்குகின்றனர். அதனால் கருத்துக் கூறுபவர் தனது கருத்தை கூறாமலே சென்றுவிடுவார். இப்படிப்பல வகையில் சமூகம் தன்னை நோக்கி வரும் நல்[illegible]யங்களை ஏற்காமை வ[illegible]தக் கூடிய விடயமாகும்.

உதாரணமாக சிலவற்றை எடுத்து நோக்குவோம். தீபாவளி, சித்திரைப் புத்தாண்டு, தைப்பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் அனைத்து வீடுகளிலும் பழைய பொருட்களை எரித்து வீடு கழுவி சுத்தம் செய்வர். இதனால் கிருமிகள், கழிவுகள் அகற்றப்படுகின்றன. சுத்தம் செய்யாத வீடுகளில் அகற்றப்படும் கிருமிகள் சென்றடையும். எனவேதான் எல்லோரும் கழுவி சுத்தம் செய்யவேண்டும் என்ற நியதி ஏற்பட்டது. இது பற்றி பத்திரிகைகளில் பல தடவை எழுதப்பட்டுள்ளது. அவைகளை வாசிப்பவர்வாசிக்காதோரிடம் கூறமுற்படும்போது விமர்சிக்கப்படுகிறான்.

இதேபோல் நகை அணிதலில் பல நன்மைகள் உண்டு. அதாவது தோடு அணிவதால், பொட்டு வைப்பதால் தலைக்கும் மூளைக்கும் நன்மை. காப்பு அணிவதால் கர்ப்பிணிகளுக்கு நன்மை, வலது கை மோதிரம் அறிவுக்கும் இடதுகை மோதிரம் காதலுக்கும், சலங்கை, மெட்டி கர்ப்பகாலத்திற்கும் நன்மை போன்ற காரணங்களாலே ஆபரணம் அணிவது நல்லது. ஆனால் இன்றைய சமூகம் அந்தஸ்துக்கும் அழகுக்குமே ஆபரணம் என எண்ணி இல்லாதோரைப் பழித்தல், கேலி செய்தல் அவர்களுடன் உறவை வெட்டுதல் போன்ற காரியங்களில் ஈடுபடுகின்றனர்.

இன்னுமொரு உதாரணத்தைப் பார்ப்போமானால் ஒரு வீட்டிலே ஒரு சகோதரிக்கு குழந்தை பிறந்தால் அத்தாயின் சகோதர சகோதரிகளுக்கு தொடக்கு என்ற பழைய நம்பிக்கை உண்டு. அவர்கள் சந்தனம் நெற்றியில் இடுவது கூடாது என்ற கருத்தும் உண்டு. சந்தனம் இடுவது குளிர்மைக்காகவே. ஆனால் சடங்கு சம்பிரதாயம் என்ற காரணங்களைக் காட்டி சந்தனம் இடுவதைக் குறித்து விமர்சிப்பது தவறாகும். வீட்டினுள் இருக்கும் சந்தனம் நெற்றியில் இருந்தால் தீமை என்ன? என்ற கேள்விக்கு யாருமே பதில் கூறமுடியாது.

இவ்வாறு பல காரணங்களுக்காக சமூகத்தினரிடையே கருத்து முரண்பாடு உண்டு. இங்கு சமூகம் என்பதில் அரைப்பகுதியினர் மாத்திரமே கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றனர். சம்பிரதாயங்களோடு ஒன்றிப்போவதால் கட்டுப்பாடு, பயம், ஒழுக்கம் என்பன ஏற்படுகின்றன. அதற்காக மூடநம்பிக்கையுடன் ஒன்றிப்போக முடியாது. எவ்வாறெனினும் விமர்சனம் என்பது ஒருவரை ஊக்கப்படுத்தவேண்டுமே தவிர, ஒடுங்கிப் போக வைக்கக்கூடாது. நல்ல விமர்சனங்கள் சமூகத்திற்கு அவசியம். ஒருவர் கூறவரும் கருத்து பிழையெனின் அதனை அமைதியான முறையில் சுட்டிக்காட்டவேண்டும். எனவே நல்ல சமூகத்தை உருவாக்க தவறுகள் திருத் தப்படவேண்டும். விமர்சிக்கப்படக்கூடாது. எனவே நல்ல விமர்சனங்களால் நாம் உயருவோம். தீய விமர்சனங்களை தவிர்ப்போம்.

**ந.கங்கா**

## கறி ரொட்டி




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| கோதுமை மா | -250 கிராம் |
| பட்டர் | -1மேசைக்கரண்டி |
| உருளைக்கிழங்கு | -100 கிராம் |
| கரட் | -50 கிராம் |
| பெரிய வெங்காயம் | -1 |
| மிளகாய்த்தூள் | -1தேக்கரண்டி |
| உப்பு | -அளவாக |

செய்முறை:-

- உருளைக் கிழங்கு, கரட் இவற்றை அவித்து வெட்டி மசிக்கவும்.
- வெங்காயத்தை குறுணலாக வெட்டிக் கிழங்குக் கலவையுடன் சேர்த்து மிளகாய்த்தூள், உப்பு இவற்றையும் சேர்த்துக் கலக்கவும்.
- கோதுமை மாவுடன் பட்டர், சிறிதளவு உப்புச் சேர்த்து நன்கு பிசைந்து கொள்ளவும்.
- பின் நீரைச் சிறிது சிறிதாகச் சேர்த்து இறுக்கமாகக் குழைத்துக் கொள்ளவும்.
- குழைத்த மாவை சிறு சிறு வட்டங்களாகத்தட்டி அதன் நடுவில் கிழங்குக் கலவையை வைக்கவும்.
- பின் மாவினால் கலவையை மூடி ஓரங்களை முக்கோணமாகவோ அல்லது சதுரமாகவோ மடித்துக்கொ[illegible]ளவும்.
- பின்பு எண்ணெய் பூசப்பட்ட தோசைக்கல்லில் இரண்டு பக்கமும் நன்கு வேகும்படி சுட்டு எடுக்கவும்.

## வீட்டுக் குறிப்பு

உடைகளில் இரத்தக்கறை இருந்தால், தண்ணீரில் சிறிது உப்பைக் கரைத்து அதில் உடைகளை ஊற வைத்துக் கசக்கிப் பிழிந்தால் இரத்தக்கறைகள் போய்விடும்.

★★★★★

வெந்நீரில் சிறிதளவு உப்பைப் போட்டுக் குளித்தால் உடல்வலி நீங்கும். சொறி, சிரங்கு போன்ற தோல் நோய்கள் வராது.

★★★★★

இனிப்பு வைத்திருக்கும் பாத்திரங்களைச் சுற்றி உப்புத்தூளையும், மஞ்சள்தூளையும் தூவி வையுங்கள் எறும்பு அந்தப்பக்கம் எட்டிப்பார்க்காது.

★★★★★

அரிசியில் சிறிதளவு உப்பைக் கலந்துவையுங்கள் அரிசியில் பூச்சி வராது. அந்த அரிசியை சமைத்துச் சாப்பிடுவது ஜீரண சக்திக்கு நல்லது.

★★★★★

தக்காளிப்பழங்கள் பழுதடையாமல் இருக்கவேண்டுமா? சிறிது உப்புக் கலந்த நீரில் போட்டு வையுங்கள். பழமும் பழுதடையாது. அதன் சுவையும் பழுதடையாது.

★★★★★

உருளைக்கிழங்கை மெல்லிய வட்டத்துண்டுகளாகச் சீவி உப்புக் கலந்த நீரில் வேகவைத்து, பின்பு அதை வெயிலில் காயவையுங்கள். நன்றாகக் காய்ந்தபின் எடுத்து பாத்திரத்தில் போட்டு மூடிவைத்துக் கொள்ளுங்கள். தேவைப்படும்போது எடுத்து, எண்ணெய்விட்டுப் பொரித்து வறுவலாகச் சாப்பிடலாம்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவ வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்— 54

பெயர்:....................................................

முகவரி:..................................................


..................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.



# இளைய நாதம்

## நகைச்சுவை



***ஒருவர்:-*** "கோயிலுக்குப்பக்கத்தில சாராயக்கடை திறந்தது சரியில்லையாம், ஒருத்தரு சொன்னாரு"

***மற்றவர்:-*** "அதற்கு என்ன செய்யிறதாம்"

***ஒருவர்:-*** "கோயிலை வேற இடத்திற்கு மாத்தட்டாம்"

சு.கௌரீஷன்.

# பல்லிகள்

பல்லிகள் என்று நாம் குறிப்பிடுவது வீட்டுப்பல்லிகளைத்தான். இதில் ஏராளமான இனங்கள் உள்ளன. இவைகள் உலகமெங்கும் பரவலாகக்காணப்படுகின்றன. மரங்கள், வீடுகள், பாறைகள், காடுகள் என்று பல இடங்களில் வாழ்பவை. மரம், சுவர் கண்ணாடி போன்ற வழுவழுப்பான தரைப்பகுதி ஆகியவற்றில் கடந்து செல்வதற்கு ஏற்றவாறு கால்கள் அமைந்திருக்கும். 3செ.மீ முதல் 35 செ.மீ நீளம்வரை வளரக்கூடியது. கெக்கோ என்று குறிப்பிடப்படும் இது தீங்கற்றவை.

இதைத் தன் நாக்கினால் அடிக்கடி நக்கிச் சுத்தம் செய்துகொள்ளும். கரப்பான் பூச்சி, கொசு விட்டில் பூச்சி, சிலந்தி மற்ற சிறு பூச்சிகளே இதன் உணவு. இதன் நாக்கு இரையைப் பிடிக்க இதற்கு உதவுகின்றது. சிறு பூச்சிகளைக் கண்டதும் வேகமாக ஓடி நாக்கி னால் அதை இழுத்துப் பிடித்து வாயில் கவ்விக் கொண்டு பின்னர் சிறிது சிறிதாக அதை விழுங்கி விடும்.

பெரும்பாலானவை இரவு இரைதேடிகள். இவற்றின் கண்மணி கண்ணின் நடுவில் செங்குத்தாக இருக்கும். இவற்றுள் பகல் இரை தேடிகளும் உள்ளன. இவற்றின் கண்மணி வட்டமாக இருக்கும். பெரும்பாலான வைகள் "கெக் கெக்" என்று ஒருவித குரல் கொடுக்கும். அதனால் இந்தத் தொகுதிக்கு கெக்கோ என்ற பெயர் வந்தது.



பொதுவாக இவற்றின் உடல் தட்டையாகவும் தலை குட்டையாகவும் பருமனாகவும் இருக்கும். வால்கள் பலவித வடிவமைப்பிலிருக்கும்.இதன்நிறம் வெளிர் சாம்பல் அல்லது கரும் பழுப்பு நிறத்தில் இருக்கும்.

குட்டையான கால்கள்; விரல் முனைகளில் அகன்ற படர் இலைபோல் மென் தகடு இருக்கும். இந்த மென்தகட்டில் வளை நகம்போல் சிறு சிறு காம்புகள் உள்ளன. தவிர ஆயிரக்கணக்கான நுண்ணிய கொக்கிகள் போன்ற அமைப்பும் உள்ளன. இந்தக் கொக்கிகள் வெறும் கண்களுக்குத்தெரியாது. இந்த நுண்கொக்கிகள் சுவரிலோ அல்லது கூரையிலோ உள்ள நுண்துருத்திகளைப் பற்றிப் பிடித்துக்கொள்ள உதவுகிறது. சுவரிலும் கூரையிலும் செல்வதற்கு இந்தக கொளுவி அமைப்புத்தான் இதற்கு உதவிபுரிகிறது.

ஆபத்துக்காலத்தில் எதிரிகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வாலைக் கழற்றி எறிந்துவிட்டு ஓடிவிடும். இழந்த வாலுக்குப் பதிலாக புதியவால் விரைவில் வளர்ந்துவிடும். சிலசமயங்களில் வாலை முழுமையாகக் கழற்றிவிடமுடியாது. பாதிவால் ஒட்டிக்கொண்டிருக்கும். அப்போது இழந்த பகுதியும் வளரும் புதிய வாலும் வளர்ந்துவிடும். பின்னர் இது இரட்டைவால் பல்லி ஆகிவிடும்.

கொழுத்தவால் பல்லியைத் தவிர மற்றவைகளுக்கு கண் இமைகள் கிடையாது. அதற்குப் பதில் ஒளி உட்புகுதன்மை கொண்ட மென்படலம் உள்ளது. இந்தப் படலம் எப்போதும் ஈரப்பதத்துடன் இருக்கும். பல்லி

கொழுத்தவால் பல்லி என்ற ஒரு இனம் உடலில் குறிப்பிட்ட பகுதிகளை ஒன்றோடொன்று உராய்வதன் மூலம் ஒருவித ஒலியை எழுப்புகிறது. இது 'டக் டக்' என்று உரத்த ஒலியை எழுப்பும். அதனால் இந்த பல்லிக்கு 'டக்டு' என்று பெயர். இது எழுப்பும் ஒலி 100மீற்றர் தூரம்வரை கேட்குமாம்.

# சொற்சிலம்பம் - 93

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கை | ப் | ம | மு | ன் | தி | ம் |
| டு | கு | ல் | பா | ந் | மி | பு |
| க | லா | தி | கோ | னி | ணி | ன் |
| ந் | னா | பி | லி | னை | ரீ | இ |
| செ | ட் | தா | ஷ் | ர் | ரி | னை |
| ற் | ர் | யா | க் | ஸ் | க | ண |
| ளு | வ | மோ | ன் | கி | த் | ம |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -91 இன் விடைகள்

01. கிளி.
02. மல்லிகை.

## சொற்சிலம்பம் - 91 இன் பரிசுக்குரியவர்

ம.நிரோஜினி,
யாழ்/தாளையடி
றோ.க.த.க. பாடசாலை.

## சொற்சிலம்பம் - 91 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ச.கௌரி, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
02. த.முரளிதரன், மொந்திபுலம், காரைநகர்.
03. அ.சாமந்தியா, ஒட்டுசுட்டான் ம.வி, ஒட்டுசுட்டான்.
04. கு.கௌசிகன், வற்றாப்பளை ம.வி, வற்றாப்பளை.
05. சு.பிரியங்கா, தரம்-6, புதுக்குடியிருப்பு ம.க.
06. இ.துர்க்கா, வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி, வவுனியா.
07. தி.தர்ஷினி, வடலித்தோட்டம், பருத்தித்துறை.
08. து.சுஜந்தி, கலைவாணிவீதி, சித்தங்கேணி.

01. கட்டுக்கரைக்குளம் உள்ள மாவட்டம்?
01) ......................................

02. புல்மோட்டையில் காணப்படும் கனியவளம்?
01) ......................................

பெயர் :- ......................................

முகவரி :- ......................................

......................................

......................................

சொற்சிலம்பம்-93
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

# ஓட்டப்பந்தயம்...

## பகுதி-11



# எங்கட இனத்தின்ர வளர்ச்சிக்காக; — எங்களிட்டப் பிடிவாதம் இருக்கிறது பிழையில்ல...




வணக்கம் வணக்கம் எல்லாருக்கும்! என்னமாதிரி உங்கள் எல்லாரின்ரை பாடுகளும் போகுது? என்ன இந்த ஆள் இண்டைக்கு வலு குஷாலாய் இருக்கிதெண்டு யோசிப்பயள். பின்ன அஞ்ஞாதவாசம் கழிஞ்சு என்ரை நாட்டுக்கு வந்துகொண்டெல்லே இருக்கிறன். கொழும்பில வந்து இறங்கினதுதான் கிடைச்சதொரு பஸ்ஸில உடன வெளிக்கிட்டிட்டன். ஓமோம் போன அதே KLM விமானசேவையிலதான் திரும்பினனான். அங்கை சில ஆக்கள் சொன்னவை ரிக்கற்றை Air lanka வுக்கு மாத்திப்போட்டால் 2,3 புதுத்தமிழ்ப்படமும் பார்த்துக் கொண்டு, எங்களுக்கேற்ற சாப்பாட்டு வகையளையும் சாப்பிட்டுக்கொண்டு சந்தோசமாய் 11 மணித்தியாலம் கழியிறதே தெரியாமல் பயணிக்கலாம் எண்டு. சே! கேவலம் படத்துக்காகவும், வாய்க்கு ருசியாய் கிடைக்கிது எண்டிறதுக்காகவும் நான் Airlanka விமானத்தில பயணிக்கிறதோ! நான் அவையளுக்குச் சொன்னன், அதை விட நான் Somalian Airlines இல கஞ்சியைக் குடிச்சுக்கொண்டு போடுவன் எண்டு. நீங்கள் உது மிதமிஞ்சின பிடிவாதம் எண்டு நினைக்கிறீயளோ தெரியாது.

உழைப்பில பிடிவாதமாய் இருக்கிற சீனாவைப் பாருங்கோ! உற்பத்தியில பிடிவாதமாய் இருக்கிற யப்பானைப் பாருங்கோ! எல்லாத்தையும் இழந்தும் உயரத்துக்கு எழுந்த யேர்மனியையும், ஆதிக்கத்தில பிடிவாதமாய் இருக்கிற அமெரிக்காவையும், சுயகௌரவத்தை விட்டுக் கொடாத முஸ்லிம் மக்களையும் பாருங்கோ! நான் என்ன சொல்லிறன் எங்கட இனத்தின்ரை வளர்ச்சிக்காக எங்களிட்டையும் ஒருசில பிடிவாதங்கள் இருக்கிறதால லாபமே தவிர நட்டம் ஒண்டும் ஏற்படப்போறேல்லை.

பஸ் கொழும்பைவிட்டுக் கழிஞ்சாப்பிறகு சிங்கள தேசத்தின்ரை இயற்கை அழகை ரசிக்கிறதில ஒரு சந்தோசம் தான்.! வீதி வழியால போறவாற சனங்கள் எல்லாத்தையும் பார்க்கிறன். சே! நீங்கள் எல்லாரும் ஏன் எங்கட உரிமையளை மறுக்கிறீங்கள். எங்களை மாதிரியே சிரிக்கிற, அழுகிற, வாழத்தலைப்படிற மக்கள்தானே நீங்களும். கிட்டடியில கூட பொதுக் கட்டமைப்புக்கு ஆதரவாய் கொழும்பில ஒரு ஊர்வலம் நடந்தது. கடந்த 2 வருசத்தில வேற ஒண்டு சிங்களப் பக்கத்தில இருந்து தமிழரின்ரை உரிமையளுக்கு ஆதரவாய் நடந்த மாதிரி எனக்கு ஞாபகமில்லை. நல்ல விசயம் அப்பிடி ஒண்டு இப்ப நடந்தது. ஆனாலும், ஆக 700 பேரளவில தானாம் கலந்துகொண்டிருந்தவையள். ஆனால் ஜேவிபி எண்டு சொல்லிக்கொண்டு எல்லாக்கட்சியளும் ஒழுங்குசெய்யிற எதிர்ப்பு ஊர்வலங்களுக்கு அலையலையாய் ஆக்கள் சேரினம். உங்களை மாதிரியே எங்களையும் வாழவிடுங்கோ எண்டுதானே நாங்கள் கேட்கிறம். ஏன் விளங்கிக் கொள்றியளில்லை.

வீதி மருங்குகள் இரண்டிலையும் சிங்களப் பாரம்பரியத்தை எடுத்து விளக்கிற கைவினைப் பொருட்கள், முகமூடியள், புத்தர் சிலையள் எண்டு நடைபாதை வியாபாரியள் விற்றுக் கொண்டிருந்திச்சினம். உல்லாசப் பிரயாணியளும், உள்நாட்டு மக்களுமெண்டு பெருமளவில ஆக்கள் அதுகளை வேண்டிக்கொண்டிருந்தினம். இன்னும் இளநீர் வியாபாரியள் வேற எக்கச்சக்கமாய் அமோக வியாபாரத்தில ஈடுபட்டிருந்தினம். வெளிநாட்டில ரின்னுக்கிள வாற இளநீரை(?) குடிச்ச வாய்க்கு இப்பிடி உடனடியாய் குடிக்க ஆசையாய் இருந்தாலும், உள்ளுக்கிளை இருந்த ஒரு பொறாமை பிடிச்ச குரங்கு மனம் அதுக்குச் சம்மதிக்கேல்லை. கிளிநொச்சி மத்திய மைதானத் துக்கு முன்னால ஒரேயொரு பெட்டிக்கடையில முந்தி இளநீர் வித்தது. பேந்து அதுவும் காணாமல் போயிட்டிது. எங்கட சனத்துக்கு ஏன் இயற்கை எண்டாலே ஒத்துக்கொள்றேல்லை எண்டெனக்கு விளங்கேல்லை. சந்திரன் பூங்கா எண்ட பெயரில நல்ல நிழல் தரக்கூடியதொரு வளவைக் காயவிட்டிட்டு, செயற்கையாய் ஊறவிட்டு ரசிச்சுக்கொண்டிருக்கிறம். மனசில ஒரே வேதனையாய் கனத்திச்சிது. எங்கட ஏ9 இல இல்லாமல் சிங்கள வீதியளெங்கும் நிரம்பிக்கிடந்த கைவினைப்பொருட்களையும், இளநீர்க் கடையளையும் பார்க்கச் சகிக்காமல் கண்களை இறுக்கி மூடினன்.

காலைக் காத்து முகத்தில குளிர்மையாய் வீசினது இதமாய் இருந்திச்சிது. அப்பாடா நேரம் போனதே தெரியேல்லை. ஒருமாதிரி கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தாச்சிது. இருட்டியும் போயிட்டிது, 2 தோளிலையும் bag ஐ கொளுவிக்கொண்டு வீட்டுக்கு நடக்கவேண்டியதுதான், வேறென்ன செய்யிறது. ஓட்டோவையும் காணக் கிடைக்குதில்லை. அங்கை கடைக்காரக் குணத்தார் சைக்கிளிலை வாறார், கூட சாப்பாட்டுக்கடை மணியத்தாரும். அங்கால இன்னுமொரு சைக்கிள்.. எட எங்கட சின்னச்சந்திரிகா! இல்லைப் பாருங்கோ! எங்கட முன் வீட்டுச் சின்னவள். முகவெட்டு கிட்டத் தட்ட சந்திரிகா மாதிரி. அதுதான் நான் சின்னச்சந்திரிகா எண்டு கூப்பிடிறனான். நல்லதாய் போச்சு! வீடு மட்டும் இதுகளைக் காவிக் கொண்டு போகேலாது. சைக்கிளிலை ஏத்தி வீட்டில வைச்சுவிடச் சொல்லி சின்னவளிட்டைக் குடுத்திட்டு, குணத்தாற்றை சைக்கிளை வேண்டிக்கொண்டு வேளைக்கே வீட்டை போய்ச்சேருவம். "வாங்கோ! வாங்கோ! எல்லாரையும் கண்டு கன காலம். கதைக்கிறதுக்கு கனக்க இருக்கிது. ஆனாலும், இப்போதைக்கு வீட்டை போய்ச்சேரோணும். இந்த நேரத்தில கடவுள் மாதிரி வநதிருக்... நீயள் எல்லாரும்". "ஓமோம் போகவே...டிய இடத்துக்கு அனுப்பிறதுக்குத் தான் நாங்கள் வந்திருக்கிறம்", எண்டு சொன்னபடி குணத்தார், முதுகுப் பக்கமாய் கையை விட்டு பெரியதொரு பொல்லாங்கட்டையை இழுத்தெடுத்தார். மணியத்தார் மடிச்சு விட்ட கையுக்கிளால சைக்கிள் செயின் ஒண்டை இழுத்துச் சுழட்டினார். உந்த ஆக்களின்ரை மூஞ்சையளை ஒருகாலமும் உந்தக்கோலத்தில இதுவரைக்கும் நான் கண்டதில்லை. வில்லன் நடிகர் வீரப்பன் மாதிரி இருந்த அவையளின்ரை அட்டகாசச் சிரிப்பைக் காண பயமாய் கிடந்திது. "ஏய் ஏரம்பர்! வெளிநாட்டு கொக்கோ கோலாவும், ரின்மில்க்கும்தானே உமக்குப் பிடிக்காது. உள்நாட்டுத் தயாரிப்புத்தானே விருப்பம். உள்ளூரிலையே சீவின பொல்லு இது. 4 போட்டால் எப்பிடியிருக்கும்! படுபாவிக் கிழவா! என்ரை வியாபாரத்தை நாசமாக்க வந்த உன்னை நான் சும்மா விடமாட்டன்", குணத்தார் கர்ச்சித்தார். "என்ரை கடையில நான் எது வேணுமெண்டாலும் விற்பன், விடுவன். அதைக் கேட்க நீர் ஆர் ? விருப்பமிருந்தால் வந்து கொட்டிக் கொள்ளிறது. இஷ்டம் இல்லாட்டி விட்டிட்டுப்போடிறது. அதை விட்டிட்டு என்ன உள்ளூரிலை, போசாக்கில்லை எண்டு நக்கல், நையாண்டி வேண்டிக்கிடக்கிது. ஏய்! மிதிவெடிக் கிள்ளை நான் உருளைக் கிழங்கும் வைப்பன், உம்மையும் வைப்பன். உள்நாடோ வேணும் உமக்கு! உள்ளூரிலையே உண்டில்லை எண்டு நான் உம்மை ஆக்கிக்காட்டிறன்", மணியத்தார் முழங்கினார்.

கொஞ்சநேரத்திலை என்ன நடக்கிறதெண்டு யோசிககிறதுக்கு முன்னாலேயே என்ரை வயித்திலை பொல்லாங்கட்டை புதைஞ்சிது. சைக்கிள் செயின் 2 பக்கத்தாலையும் முதுகைப் பதம் பார்த்திது. எங்கைதான் உவ்வளவு ஆத்திரம் புதைஞ்சு கிடந்ததோ, தெரியேல்லை. ஆளாளுக்கு மாறிமாறி உருவி எடுத்தாங்கள். வாயாலையும், மூக்காலையும் ரத்தம் ரத்தமாய் வந்தது. உடம்பும், மனமும் ஒரேயடியாய் வலிச்சிது.தாங்கமுடியாத வேதனை. "சத்தியமாய் உங்கட வியாபாரம் நட்டப்படோணும் எண்டிறதுக்காக நான் அப்பிடிச் சொல்லேல்லை.

எங்கட சனங்கள் எல்லாருமே லாபம் அடையோணும் எண்டுதான் சொன்னனான். மணியத்தார்! உமக்கு நான் சொன்னது விளங்கேல்லையே! எங்கட சமூகத்துக்குத் தேவையான போசாக்கையும், பொருளாதாரத்தையும் வழங்கிறதில உமக்கிருக்கிற பங்கைத்தான் உணரச்சொல்லி சொல்லிறனான். உம்மட தம்பியார் வயலிலை விளைவிக்கிற மரக்கறியளை நட்டப்படாமல் விற்க முடிஞ்சிதெண்டால், அந்த மனுசன் ஏன் தன்ரை இரண்டு குமருகளையும் காலாகாலத்துக்கு கட்டிக்குடுக்கேலாமல் கஷ்ரப்படோணும்! அவற்றை மரக்கறியளை விட்டிட்டு நீர் தெற்கில இருந்து வாறதை வேண்டிறீர்.

எனக்குத் தெரிய உம்மட கொப்பரின்ரை காலத்தில இருந்து உந்தக் கடை மாறவேயில்லை. அப்பிடியே தான் கிடக்கிது. ஆனால், நீர் விக்கிற கொக்கோக்கோலா கொம்பனியின்ரை வளர்ச்சி எங்கையோ போயிட்டிது. சும்மா நல்லது கெட்டதுக்குப் போய் ஆ.. ஊ.. எண்டால் மட்டும் தான் சொந்தம் இல்லை. கூடப்பிறந்த சகோதரத்துக்கு லாபம் கிடைக்கப் பண்ணாமல், அவனாரோ அமெரிக்கன்காரன் கலர்த்தண்ணியை போத்திலிலை வித்த உடனே ஆஆவெண்டு தூக்கிப்பிடியுங்கோ ! உம்மட இளையவனிட்டை நிக்கிற கறவை மாடுகளின்ரை பாலை கடைக்கெடுத்துப் பாவிச்சால் உருப்படப்போறது நான் இல்லை, உம்மட குடும்பம் தான். பால் கறந்தாலும், விற்கேலாதெண்டு கைவிட்டிட்டு இண்டைக்கும் நிவாரண முத்திரையில தான் அந்தப்பாவம் தங்கியிருக்கிது. அதுக்குக் காரணம் உம்மளை மாதிரி இருக்கிற சிலர்தான்.

எங்கட இனம் காலாகாலத்துக்கு அரசசார் பற்ற நிறுவனங்களின்ரை உதவிப் பொருட்களிலையும், அரசாங்கத்தின்ரை முத்திரையிலையும் தான் மூச்சு விடோணும் எண்டு சபிக்கப்பட்ட இனமில்லை. எங்களிட்டை எல்லா வளமும் இருக்கிது. அதால நாங்கள் எல்லாரும் பயனடைய வேணும் எண்டுதான் நான் சொன்னனான்", சொல்லிக்கொண்டிருக்கேக்கிளையே கழுத்தில பெல்ற் சுழண்டு, சுள்ளிட்டிது. மூச்சு திணறிச்சிது. பொல்லாங்கட்டையும், சைக்கிள்-செயினும் கூடவே தங்கட ஆத்திரத்தைக் காட்டிச்சிது. ஐயோ! என்ரை உறவுகள் எண்டு வாய்க்குவாய் சொன்ன என்னை விளங்கிக் கொள்ளாமல் இப்பி... உவள் சின்னவள் உதிலை நிண்டவளெல்லே! அவளிட்டைச் சொல்லியெண்டாலும் ஆரையாவது உதவிக்குக் கூப்பிடலாம். உவங்கள் என்னை இண்டைக்கு கொல்லாமல் விடமாட்டங்கள் போல கிடக்கு. எட வெளியால வெளிக்கிட்ட நேரம் கள்ளரிட்டை அடிவாங்கினன். இப்ப திரும்பி வந்த நேரமும் இப்பிடி! நொருங்காத குறையில கிடந்த கழுத்தைத் திருப்பி சின்னவளைத் தேடினன். ஆனால், அவளோ உண்மையான சந்திரிகாவின்ரை முகம் மாதிரியே ஆக்ரோசமாய் என்னை எரிக்காத குறையாய் பார்த்துக்கொண்டு நிண்டாள். எனக்கு அடிவிழுந்ததைக் கண்ட ஏக்கமாக்கும் எண்டு நினைச்சுக்கொண்டு, "என்ரை குஞ்செல்லே! உதிலை ஓடிப்போய் ஆரையாவது உதவிக்கு கூட்டிக்கொண்டு வாங்கோடா!" எண்டு அனுங்கினன். "உதவியோ வேணும்? ம்... நாங்கள் எத்தினை பவுண் நகையள் எண்டாலும் போடுவம். அப்பிடிப் போட்டுக் கொண்டு நாங்கள் மினுங்கினால் உமக்கென்ன? தொடர்நாடகம் எத்தினை மணித்தியாலம் எண்டாலும் இருந்து பார்ப்பம். எங்கட கண்! எங்கட ரிவி! உமக்கென்ன நொட்டைக் கதை வேண்டிக்கிடக்கிது. விஜய சாந்தி அடி தெரியுமே? இந்தா காட்டிறன்", எண்டு கொண்டு அதுக்குப்பிறகு நடந்ததை என்னண்டு என்ரை வாயால சொல்லிறது!

"அப்பு! வெளியால வந்து ஐடென்ரி கார்ட் காட்டிறது! எலும்புங்க! என்ன தூக்கம்? நீங்கள் தமிழு மினிசு இப்ப ரொம்ப மோசம். முந்தி கொட்டி மட்டும்தான் எங்கலுக்கு அடிக்கிறது. இப்ப பொதுசனமும் எங்களை அடிக்கிறது, கொளுத்திறது . . மிச்சம் மோசம். உங்களைத் தூங்க விட்டாலும் எங்கலுக்குத்தான் கஸ்ரம். கனவிலையும் ஈழம் பற்றித் தான் காணுவீங்க! ம்.. இறங்குங்க! அங்கை சந்திரிகா மேடம் சொல்லுவா, நாங்க இஞ்சை வெய்யில்லை காயிறது", ஆமிக்காரன்ரை கதையைக் கேட்டு எழும்பிப்பார்த்தன், பஸ் ஓமந்தை ராணுவச்சாவடிக்கு முன்னால நிண்டுகொண்டிருந்திச்சிது. உடம்பெல்லாத்தையும் தொட்டுக் கிட்டுப் பார்த்திட்டு, ஒரு நிம்மதிப் பெருமூச்சோட கீழ இறங்கினன்.

கன காலத்துக்குப் பிறகு என்ரை மண்ணை ஸ்பரிசிக்கிற சுகமான உணர்வு. விட்டுவிட்டு இருந்த இந்த 3 மாதமும் ஏதோ 10,15 வருசம் மாதிரியான பிரிவழுத்தத்தை மனசில உண்டுபண்ணிச்சிது. சுற்றும் முற்றும் பார்க்கிறன். செம்புழுதி பரந்த மண்ணில தங்கட குருதியைச் சிந்தின ஆயிரமாயிரம் பிள்ளையளின்ரை முகமும் ஒருக்கால் நெஞ்சுக்கிள்ளை வந்திச்சிது. கையிலை கிடந்த லேஞ்சியை தரையில நழுவ விட்டிட்டு, லேஞ்சியை எடுக்கிற தோரணையில எங்கட மண்ணை கையாலை தொட்டன். கண் மூடுப் பட்டிச்சிது. அதுக்கு மேல மனசில எழுந்த உணர்வுகளை நான் வெளியால சொல்லமாட்டன். ஒரு தாய்க்கும், பிள்ளைக்கும் இடையில இருக்கிற அதீதமான உறவு அற்புதமானது. அதை விபரிக்கிறதிலை எந்த மொழியும் தோற்றுப்போயிடும். வாற்கிழமை சந்திப்பம், எல்லாரும் கவனமாய் இருங்கோ!

# மனித மனங்களும் அதன் நடத்தைகளும்

மாதங்கி

*(சென்றவாரத் தொடர்ச்சி......)*

உயிரியல் சார்ந்த பண்புகளும் வாழ்க்கை நிலைமைகளால் திரட்டிக்கொள்ளப்பட்ட பண்புகளும் ஒன்றிணைந்து மனித மனங்கள் வழி நடத்தைகளை உருவாக்குகின்றன என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கோட்பாடாகும். வேறுசில ஆய்வாளர்கள் எழுச்சி ஆட்சி, ஊக்கல். ஆட்சி, அறிகை ஆட்சி எனும் முப்பொருளுக்குமிடையே நிகழும் தாக்கங்களினை மேற்கிளம்பல்தான் இம் மனவெழுச்சி என்று குறிப்பிடுகின்றன.

தமிழ் மரபில் ஒருவரது நடத்தையைக் குறிப்பிடுவதற்கு சாது, நெருப்பன், நஞ்சன், சுட்டி, பொறுக்கி, அவியல், வெளிவாயன், புளுகன் போன்ற பதங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சமூகப் புலங்களில் ஒவ்வொருவரும் தத்தமது நிலைமைகளினின்று, பிறரைப் பற்றிய சிந்தனைகள் எதுவுமின்றி நடத்தைப் பாங்குகளை அமைப்பர். தத்தமது அநியாயமான நடத்தைப் பாங்குகள் பிறர்வாழ்வில் எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பற்றி நன் நோக்குச் சிந்தனையற்றவர்களாகவே தொழிற்படுவர்.

வதந்தி பரப்புதல், ஆடை அலங்கார வெளிப்பாடு, நுகர்வுக் கோலங்கள், பகுத்தறிவு குன்றிய உள நெருக்குவாரங்கள் (Mass Hysteria) முதலியவை ஒழுங்கின்றியும், நெறிப்படுத்தப்படாமலும், ஒருங்கிணைப்பின்றியும் காணப்படும் பட்சத்தில் நடத்தையில் மாற்றங்களையும், நெருக்கடிகளையும் ஏற்படுத்தியும் விடுகிறது. பகுத்தறிவுடன் மேற்கொள்ளப்படாத இவ்வாறான நடத்தைகள் அனர்த்த நடத்தைகள் (Disaster Behaviour) எனும் தொடராலும் அழைக்கப்படுகின்றது.

நவீன சமூக உளவியலானது மனித மனங்களின் நடத்தைகளையும், நெருக்கடிகளையும் எளிமை பொருந்திய ஒரு செயல் முறையாகக் கருதாது, சிக்கல் பொருந்தியதாகவும் சமூக அலைகளால் விசைப்படுத்தப்படும் செயல் முறையாகவும் கருதுகின்றது. நவீன சமூக உளவியலில் "உளவியல் நெருக்கீடு, சமூக நெருக்கீடு" (Social Stress) போன்றவை ஆழ்ந்து நோக்கப்படுகின்றன. சமூகத்தின் அடிப்படை அலகாகக் குடும்பம் விளங்குவதால், அனைத்து நெருக்கீடுகளுக்கும் குடும்பமே அடிப்படையாக விளங்குகிறது எனும் கருத்தும் உண்டு. ஆனால் நவீன சமூகக் கட்டுமானம் குடும்பத்துடன் மட்டும் கட்டுப்பட்டிருக்கவில்லை. பல்வேறு தளங்களிலும், எதிர்பாராத மனிதர்களாலும், சமூகங்களாலும் நாளாந்த நடவடிக்கைகளின் போதும் நெருக்கீடுகள் உருவாக்கப்பட்டு குரோதம், பழிவாங்கல், காழ்ப்புணர்வு போன்ற இன்னோரன்ன மனுக்குலத்தையே கீழ் நிலைக்குக்கொண்டுவரும் செயல்கள் வழி அல்லற்படுத்திக் கொண்டுதானிருக்கிறது.

வறுமையின் காரணமாக இளையோர் குற்ற நடத்தைகளில் ஈடுபடுவதாகக் கூறினாலும் அம்மனங்களில் வெவ்வேறு விதமான சமுதாயக் காரணிகள் பங்கு பற்றல்களில் ஈடுபடக் காண்கிறோம். வறுமை மட்டும் குற்ற நடத்தைக்குக் காரணமாகாது. செல்வர்களின் சுகபோக வாழ்க்கைக்கும், தமது வாழ்க்கைத் தரத்திற்குமிடையே உள்ள வேறுபாடுகளை உணரும்பொழுது மனித மனங்களில் அதற்கான காரணங்களைக் கண்டறியவும், எதிரான செயற்பாடுகளுக்கு தூண்டியாகவும் ஏதோ ஒரு வித நடத்தை இம் மனங்களை வந்தடைகிறது. மேலும், பல்வேறு குற்றங்கள் புரியும் பெரியவர்கள் தண்டனைக்குத் தப்பிவிடும் பட்சத்திலும், இளம் தலைமுறையினருக்கு குற்றம் செய்வதற்கும் வழிகாட்டியும் விடுகின்றனர்.



தங்களுக்கென்று தனிப்பட்ட நியதிகளும் நெறிகளும் வகுத்துக்கொண்ட குழுக்கள் எல்லாச் சமுதாயங்களிலும் காணப்படுகின்றன. பிறழ்வு என்பது வலுவற்ற சமுதாய நியதிகளால் மட்டுமன்றி, வேறுபட்ட கொள்கைகளையுடைய பிறழ்வு நிலைமைகளில் பங்குகொள்வதாலும் விளைகிறது. தமது ஆதிக்கத்தைக் குறிப்பிட்ட இடங்களில் வன்முறைகளாகவோ, துஷ்பிரயோகங்களாகவோ பிரயோகிக்க முற்படுபவர்களும் இன்று எமது சமூகங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மேட்டன் எனும் அறிஞரின் கருத்துப்படி ஒவ்வொரு சமுதாயத்திலும், பொதுவாகப் பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சில குறிக்கோள்களும் (Cultural Goals), அவற்றை அடையக் குறிப்பிட்ட சிலவழிமுறைகளும் (Institutionalised means) வகுக்கப்பட்டிருக்கும். குறிக்கோள்களும், வழிமுறைகளும் சமமாக வலியுறுத்தப்பட்டால், மக்கள் இரண்டையும் ஏற்றுக்கொண்டு 'ஒத்துப் போதல்' (Conformity) எனும் சம நிலையில் இருப்பர். ஆனால் குறிக்கோள்கள் மட்டும் மிகுதியாகப் போற்றபபட்டும், வலியுறுத்தப்பட்டும் இருக்க அதை அடையும் நியாயமான வழி முறைகள் வலியுறுத்தப்படாவிட்டால், மக்கள் தமக்கேற்புடைய விதத்தில் வழிமுறைகளைத் தேடிக்கொள்கின்றனர். மனித மனங்கள் வெளிப்படுத்தும் நடத்தைகளைக் கொண்டே சமுதாயத்திற்கான சாதக, பாதகமான நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப் படுகின்றன. பிறழ்வு நடத்தைக்கு சமுதாய அமைப்பும் ஒரு காரணமாகி விடுவதாக மேட்டன் கூறுகின்றார்.

கும்பல்களைச் சேர்ந்த இளைஞர்கள் தங்களது எந்தவிதமான செயல்களுக்காகவும் கும்பலின் பாராட்டைப் பெற்றுத் தமக்குள் உயர்வர். வரிவடிவம் உள்ள விதிகளையும் வரிவடிவமற்ற விதிகளையும் மீறுபவனே பிறழ்வு நடத்தைக்குரியவன் என்று கூறப்படினும், சமூகப் போலிச் சட்டங்களையும், சம்பிரதாய அடக்குமுறைகளையும் மீறுபவனும், அநியாயவாதிகளினால் அடிமைப் படுத்தலுக்குட்படாமல் எதிர்ப்பவனும் பிறழ்வு நடத்தையாளனாகக்கொள்ள முடியாது.


சமூகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பணி உண்டு. அந்தப் பணியில் இழுக்கு அல்லது கறை ஏற்படும்பொழுது அதனை எதிர்க்கின்றனர். மனித மனங்களில் இயல்பாக எழும் மனவெழுச்சிகளை விட சூழல் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

மனிதர்களும் வாழும் இடங்கள் எனும்போது வெறுமனே சடப் பொருட்களின் ஒழுங்கமைப்பாகக் கருதமுடியாது. மக்களின் விருப்பு, வெறுப்புக்கள், மகிழ்ச்சி, நம்பிக்கை, இன்பம், துன்பம் என்பன கலந்த ஓர் உயிரோட்டமான அமைப்பாகும். வாழுமிடங்களைக் கொண்டே ஒவ்வொரு செயற்பாடுகளும் மனித மனங்களில் முகிழ்க்கின்றன. சூழவுள்ள மனிதர்கள் பால் அன்பு பூண்டவனாய், நேயம் பூண்டவனாய் வாழ்கின்றனர். "அன்பில்லாத்தொடர்பு உறவுமாகாது. நட்புமாகாது" இதனை விளக்கமாக மனித மனங்கள் புரிந்து கொண்டால் பிரச்சினைகள் ஏது?

அன்பு, பாசம், பரிவு, புரிந்துணர்வு, பெரியோரைத் துணைக் கொள்ளல், பிறருக்கு உதவுதல், உயிர்களிடத்து அன்பு, விருந்தோம்பல் ஆகிய பண்புகள் வளர்த்தெடுக்கப் படுகின்றன. கிராமங்களிலே மிகவும் உன்னதமான நிலையிலே இப் பண்புகள் வளர்த்தெடுக்கப்பட நகரங்களிலே சிலசந்தர்ப்பங்களிலே சுரண்டல்களாகவும், அடக்கு, ஒடுக்கு முறைகளாகவும் தென்படுகின்றன. உயரிய விழுமியங்கள் மனித நேயத்தை மனித மனங்களுக்குப் போதிக்கும்வகையில் உணர்த்தப்படவேண்டியன. மாறாக "கூட இருந்து குழிபறிக்கும், உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும், உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசும், போகவிட்டுப் புறம் சொல்லும்" மனித மனங்கள் தமிழர் தம் மரபாக தமக்கு தெரிந்த விதத்தில் இகழுரை வழங்குவதும் எதிர் மறை எண்ணங்களுக்கு வழி சமைப்பதும் நல்லவர் விழுமியங்களில் இப்போதோ? எப்போதோ? புனையப் பட்டிருக்கிறதா?

மனித மனங்களிலே ஒரு கருத்து நிலை (Ideology) மேன்மை பெற்று ஆதிக்கம் செலுத்தும். இது சமூக-இலக்கிய- வரலாற்று உண்மை. ஆனால் அக்கருத்து நிலை தன்னைத் தானே வெளியிட்டுக்கொள்ளும் முறையில் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் மனித மனங்களிலே தம் வல்லமைக்கேற்ற சமூக உருவாக்கத்தினுள்ளே? மேற் கிளம்பியிருக்கும் பிரதான கருத்து நிலை சம உரிமைப்போரா? அல்லது அநியாயத் திற்கெதிரான கோஷமா? சமூக சேவை மனப்பாங்கில் மனிதங்களை மாண்புறச் செய்வதில் வெற்றியா? இழி நிலைகளில் தத்தம் வசதி வாய்ப்புகள் கருதி அலங்கோலத்தால், அநியாயமான அலங்கரிப்புகளால் இனம் சுட்டப்படும் மனிதர்களின் வாழ்வியல் போராட்டமா? எல்லாவற்றுக்கும் மேலாக 'எல்லோரும் ஒரே இனம்', 'ஒரே தேசம்', 'ஒரே மொழி பேசுபவர்' எனும் உயரிய சிந்தனையா? இவற்றுக்கு விடை தருபவர்கள் உயரத்தே பறந்தாலும் வினாக்களாகவே மாறிவிடுகின்றனர்.

மனிதர்களைக் கூர்ப்பு நிலைப் படியமைப்பில் வைத்துக் கூறிய டார்வினின் வாழ்தலுக்கான போராட்டமே (Struggle For Existence) அதன் விளைவான வலியது வாழ்கின்றது. (Suruival of The Fittest) என்பது அமைகிறது.



வழிகாட்டவேண்டிய பெரியவர்கள் நெறிமுறையுடன் கூடியதாகக் கூறப்படும் சமய நிறுவனங்கள் கூட மனித மனங்களை அனுபவத்தில் அன்பிலாராக்கி, மன வளர்ச்சி குன்றியவராக்கிவிடுகின்றன. அதிகாரமற்ற, ஆதிக்கமற்ற எல்லோருக்கும் வாழ்வென்ற சமூகமமைத்து, சமூக உறவுகளைக் காண்பது எனும் தமது இலக்குகளிலிருந்து விலகி, உயர் குழாம்களுக்கு ஏற்புடைத்தான விதத்திலும், அநியாயங்களுக்கு அரண் அமைப்பதாகவும், புரிந்துணர்விற்குமப்பால் பிறரின் துயரங்களில், புதிய அதிகாரத்தினை நிறுவ முற்படும் இடங்களில் இவர்களும் இடறிப் போவது இயல்பே.

மனித மனங்களின் நடத்தைகள் மேம்பாட்டை நோக்கியதாக அமையவேண்டுமென்பதும், நவீன சமத்துவ விழுமியங்களினடியானது என்பதும் மறுப்பதற்கில்லை. சமூக மேம்பாடு தொடர்பாக கிம் எனும் அறிஞர் தரும் வரைவிலக்கணமானது, வாழ்வின் அனைத்துத் தளங்களிலும், குறிப்பாக சமூக-பொருளாதார நிதி, பொருளாதார செழிப்பு, அரசியல் சுதந்திரம், சுகாதாரம், கல்வி என்பவற்றில் தமக்குரிய பங்கினைப் பெற முடியாதவாறு மறுக்கப்பட்ட மக்கள், எந்தளவிற்கு அவற்றினைக் கேட்கவும், பெறவும் முடிகிறது என்பதனைப் பொறுத்தே சமூக மேம்பாடு அமைகிறது என்பார் கிம். இங்கு சுரண்டல் வழி சமூக ஒழுங்கினின்றும் விடுதலை காண்பதே மேம்பாட்டின் இலக்காகிறது.

எனவே மனித மனங்கள், அதன் நடத்தைகள் 'மேம்பட்ட மனிதனை- நவீன மனிதனைத் தேடும் ஆராய்ச்சி வெறுமனே சந்தை ஆராய்ச்சியாகவன்றி, அனைத்து மனித மனங்களின் தெளிந்த - அது சார்ந்த அனைத்து அம்சங்களையும் ஒன் றிணைந்த பார்வையும் நீதியான நடைமுறையும் இணையும் பொழுதே, செயலுடன் இதயம் சார்ந்த உணர்வுகள் கலந்திருத்தலின் பொழுதே சமூகம் மேம் பாடடைகின்றது. மானுடம் நிலைத்து வாழ்கின்றது.



## இலக்கியப்பகிர்வு

# அறிவாலயம்:

20.03.2005 அன்று இணுவி லில் நடந்த ஒரு முக்கியமான நிகழ் வின் பின் புலத்தில் வெளியிடப்பட்ட "அறிவாலயம்" என்னும் சிறப்பு மலர் தொடர்பாக சிலவற்றை நாம் இங்கு பார்க்கலாம்.

இணுவில் திருவூர் ஒன்றியம் என்னும் அமைப்பு "அறிவாலயம்" என்று நூலகத்தையும், அருங்காட்சி யகத்தையும் அமைத்து திறப்பு விழா வினையும் நடாத்தியது. அன்றைய தினமே "அறிவாலயம்" சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூலகம், அருங்காட்சியகம் இரண் டையும் ஒன்றுசேர ஒரே இடத்தில் அமைத்ததன் மூலம் எங்கள் வரலாற் றில் ஒரு முன்னோடியான செயற்பாட் டினை இணுவில் திருவூர் ஒன்றியம் செய்துள்ளதால்தான் அந்த விழாவும் வெளியீடும் முக்கியத்துவம் பெறுகின் றன.

வழக்கமாக விழா மலர்கள் விளம் பரங்களையும் வாழ்த்துச் செய்தி களையும் தாங்கி வருவது வழக்கம். இந்த மலரில் அவ்வாறான வாழ்த்துச்செய்திகள் இருந்தாலும் பல பயனுள்ள கட்டுரைகளை மலர் தன்னகத்தே கொண்டுள்ளது.

அதுவும் குறிப்பாக ஒரு நூலகத்தின் தேவை, பயன்பாடு, முக்கியத்துவம் என்று பல்வேறு வகைப்பட்ட விடயங்களைக்கொண்ட கட்டுரைகள் பல உள்ளன.

கவிஞர் இ.முருகையன், பேரா சிரியர் நந்தி, பேராசிரியர் சபாஜெய ராஜா, ஏ.கே.கனகரட்ணா, பேராசி ரியர் வி.சிவசாமி, பேராசிரியர் கா.சிவத்தம்பி, சிற்பி, செல்லப்பா நடராசா, செ.பத்மநாதன், பா.செல்வ ரஞ்சினி, மு.சிவலிங்கம், பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், கலாநிதி வ.மகேஸ்வரன், பா.மகாலிங்கசிவம், மதுரைப் பண்டிதர் க.சச்சிதானந்தம், அருளானந்தம், ஸ்ரீகாந்தலட்சுமி, க.சௌந்தரராஜன், த.சிவபாதம், தமிழ்வேள், இ.கந்தசாமி, ச.தனபாலசிங்கம், திருமதி வா.பரமேஸ்வரன், சைவப்புலவர் ச.முகுந்தன், குமாரசாமி சண்முக நாதன், நித்திலன், மு.சின்னராசா, சிவநெறிச்செம்மல், வை.அநவரத விநாயகமூர்த்தி, திருமதி மைதிலி விசாகரூபன், பண்டிதை த.மகாலிங் கம், தி.சேந்தன், திருமதி காஞ்சன மாலா, உதயகுமாரன், திருமதி இ.கருணானந்தராசா என நீளும் பட்டியலில் நூலக வியலாளர்கள் பலர் உள்ளமை சிறப்பு அம்சமாகும்.

கோயில் இல்லா ஊரில் குடி யிருக்கவேண்டாம் என்பது எங்களின் பழைய பழமொழி. அதனையே நூலகம் இல்லாத ஊர் பாழ் என்பதனை உணர்ந்து அறிவாலயம் என்றபெயரில் நூலகம் அமைக்க ஊரவர்கள் முனைந்துள்ளார்கள். ஏற்கனவே சிறிதும் பெரிதுமாக பல நூலகங்கள் இருந்தாலும் அறிவால யம் அருங்காட்சியகத்தையும் தன்னகத்தே கொண்டதால் தனித் தன்மை பெறுகின்றது.

"அறிவாலயம்" நூலக திறப்பு விழாவிற்காக வெளியாகி இருக்கும் அறிவாலயம் சிறப்பு மலரில் பண்டிதர் க.சச்சிதானந்தம் அவர்கள் குறிப் பிடும் கருத்து முக்கியமானது. அவர் கூறுகின்றார்,

"புத்தகங்கள் இவற்றில் தலை யாய நண்பர்களாவர். வானொலி நிலையத்தாரின் விருப்பு வெறுப்பு களுக்கேற்பவே தயாரிக்கப்படும். அவ்வாறே ஒளிக்காட்சிகளும் ஒரு நிலையத்தாரின் சுவைக்கேற்பவே அமையும். ஒரு வாசிகசாலையினுள் புகுந்தோமானால் எங்களுக்கு விரும்பிய எமது நாட்டத்திற்கேற்ற வற்றைத் தெரிந்துசுவைக்கலாம்; அறிவைத்தேடலாம். அங்கு வாசிக் கும் நூல்கள், படிக்கும் நூல்கள், கற்கும் நூல்கள் என மூன்று வகை யானவை உண்டு"

"ஆதலாலே
உலகினர்கள் நூலகத்தை நாடிச்சென்று, தமது உரிமை எனத்தக்க அறிவை, அன்பை, அறிவுணர்வை, திறமைகளை அள்ளிக்கொண்டால் நூலகங் களால் விளையும் பயனை எங்கள் நுணுக்குணர்வின் முழுப்பலனை நுகர்வோம் நாங் கள்-காலமெல்லாம் நிலைத்து நிற்கும் அறிவுப்பேற்றை கலைச் சுவைப்பு முழுத்திறனைப் பெறுவோம். நாங்கள்-கூனல் மதி படைத்தோரின் கோணலான கொக்கரிப்பும் வக்கரிப்பும் மக்கிப்போக ஞானநிலை பொன் கதிர்கள் விரியலாகும், நாம் விரும்பும் கோயில், நூல் அகங்கள் ஆகும்"

என கவிஞர் முருகையன் குறிப்பிடுகின்றார்.

"நூலகங்கள் வாசகர்களின் நன்மையைக் கருதியே அமைக்கப் படுவன. எனவே வாசகர்கள் அதனைப் பயன்படுத்தும் முறையி லும் அவர்களுக்கு உதவும் வகையி லும் நூலகங்கள் இயங்கிவருவதும் அவசியமாகும். நூல்களைப் பலரும் கற்பதும் கற்பவர்களை உற்சாகப் படுத்துவதும் முக்கியமே. ஒருவர் தனக்குத் தேவையான அறிவைத் தனிப்பட்டவகையிலே குருவிடம் மட்டுமோ நிறுவன ரீதியிலோ பெற முடியாது. மேலும் ஓரளவு கற்றுப் பின்னர் படிக்க விரும்புபவர்கள் நன்கு கற்றவர்கள். கல்வியில் ஈடுபாடு உள்ள வயோதிபர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் முதலிய பலருக்கும் நூலகங்கள் ஏதோவகையில் துணை புரிவன. அவர்களின் அறிவை அதிகரிப்பன. வளப்படுத்துவன. இந்த வகையில் அவர்களுக்கு உதவும் வகையில் நூலகங்கள் அமைந் திருப்பதே மிக நன்று" பேராசிரியர் வி.சிவசாமி கூறுகின்றார்.

இன்றைய தமிழ் சூழலில் குறிப்பாக யாழ்ப்பாணத்து சூழலில் வாசிப்புப்பழக்கம் அருகிவருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

ஒரு மனிதனை முழு மனிதனாக மாற்றும் வாசிப்புப் பழக்கம் இவ்வாறு கழுதைதேய்ந்து கட்டெறும்பாக மாறும் அவலத்தில் நாளைய சந்ததியினரான மாணவர்களை யாவது விருப்புடன் வாசிப்புப் பழக்கத்தில் ஈடுபடுத்தப்படவேண்டும். இது பெற்றோர்-ஆசிரியர் போன்றோ ரின் கடமையாகும்.

தன்னுடைய வாசிப்புப் பழக்கம் எவ்வாறு தொடங்கியது எனக் கூறும் மாணவர் ஒருவரின் அனுபவமும் [illegible]ள்ளது.

"வீட்டிலிருந்து வாசிப்புப் பழக்கம் ஏற்பட்டது என்று என்னால் கூற முடியாது. வீட்டை விடவும் பள்ளிப் பருவத்தில்தான் வாசிப்புப் பழக்கம் கருக்கொண்டது. சிறுபராயத்தி லிருந்தே பாடசாலை மட்டத்திலான பேச்சுப்போட்டிகளில் கலந்துகொண்டு வருகின்றேன். அங்கே சகபோட்டி யாளர் பேசும் விடயங்களில் மேல்திக தகவலைப்பெற வேண்டும் என்ற உணர்வு எனக்குத் தோன்றும் சமயங்களில் அவர்களிடமே அவர்கள் என்ன நூலிலிருந்து மேற்கோள் களைக் கையாண்டார்கள் என விசாரித்து அதைத் தேடியெடுக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினேன். அது மட்டுமன்றிப் பாடசாலைப் புத்தகங் களில் காணப்படும் நூலாசிரியர்களின் வரலாறுகளையும் அவர்கள் இயற்றிய நூலின் சிறப்பினையும் மற்றவர்கள் வாயிலாக அறியும்போது அவர்களின் புத்தகங்களைப் படிக்கவேண்டும் என்ற ஆவல் இயல்பாகவே எனக் குள் வளர்ந்துவிட்டது என்றுதான் நினைக்கிறேன்.




அறிவாலயம் வழங்கும் அறிவுக் கருவூலங்கள் என்ற தலைப்பில் மலரின் ஆசிரியர் ஸ்ரீகாந்தலட்சுமி அவர்கள் ஒரு நீண்ட கட்டுரை எழுதி யுள்ளார். நூலகம் தொடர்பான ஒரு முழுமையான விளக்கத்தை இந்தக் கட்டுரை வெளிப்படுத்து கின்றது.

"மக்களுக்காக மக்களால் மக்களைக்கொண்டு உருவாக்கப் படும் நிறுவனமே பொதுநூலகமாகும். நவீன சமுதாயத்தின் முக்கிய அம்சமாகக்கருதப்படும் பொதுசன நூலகங்கள் சமூகத்தின் நாளாந்த செயற்பாடுகளில் மிக முக்கியத்துவம் வகிக்கின்ற ஒரு சமூக நிறுவன மாகும். சமூகத்தின் கலை, கலாச்சார நிலையங்களாகச் சேவையாற்றும் இந்நிறுவனங்கள் சமூக அங்கத்தவர் களை இன, வயது, மொழி,மத வேறுபாடின்றி ஒன்றிணைக்கும் நிலையங்களாகக் காணப்படுகின்றன. இவை ஏனைய கல்விசார், விசேட நூலகங்கள்போன்று குறிப்பிட்ட வாசகர் பிரிவுக்குச் சேவை செய்வன அல்ல. சிறுவர், மாணவர், முதியவர், பெண்கள், மாற்றுவலுவுடையோர், ஆசிரியர், ஆராய்ச்சியாளர் போன்ற சமூகத்தின் அனைத்து மட்டத்தின ருக்கும் சேவை செய்யவேண்டிய கடமைப்பாடு உடையது பொதுசன நூலகமாகும். எனவே பொது நூலகம் என்றவகையில் இணுவில் அறிவாலயமும் தனது தகவல்வள சேகரிப்பில் சமூக உறுப்பினர்களின் பலதரப்பட்ட அறிவுத் தேவைகளை யும் பூர்த்திசெய்யக் கூடிய அள விற்குத் தகவல் சாதனங்கள் இடம் பெறுமாறு கொள்கை வகுக்க வேண்டி யது அவசியமாகும். இக் கொள்கை வகுப்பில் தகவல் சாதனங்களின் தரம், தொகை, வகை, வடிவம் என் பனவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் பொதுசன நூலகத்தின் முக் கிய செயற்பாடுகளான வாசகருக்கான தகவல், கல்வி, பொழுதுபோக்கு, மீள் உருவாக்கம் போன்றவற்றை நிறைவுசெய்யமுடியும்"

இது தவிர மலரில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இன்னுமொரு விடயம பழம்பெரும் பத்திரிகையாளர் செல் லப்பா நடராசா அவர்கள் எழுதிய "சீர் இணுவைத் திருவூர்க்கோர் அருங்காட்சியகம்" என்ற கட்டுரை யாகும்.

எங்கள் பாரம்பரியத்தின் அடிப் படையான பலபொருட்களை அவர் பட்டியலிட்டு விளக்கம் தருகின்றார். இன்றைய இளையதலைமுறை யினர் அறியமுடியாத அறியவேண் டிய பலவிடயங்கள் அதில் குறிப்பிடப் பட்டுள்ளன.

**இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்**

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞானிகள் மனிதர்களின் அலுவல்களி லும் கலைகளிலும் விரிவான அக்கறை கொண்டிருக்க வேண்டும். ஆனால் பண்பட்ட விஞ்ஞானிகள் எவரும் மனித இனத்தின் சூழ் நிலையை அவாவி நிற்கும் கண்டுபிடிப்புக் களைக் கண்டனரென்று வரலாறுகள் ஆராய்வில் கூறவில்லை. மனித மேம்பாட்டை விரும்பியவர் களாகவே முன்னேறி வந்துள்ளனர்.

ஒருவன் தன் உணர்வின் மீது பிறர் நலம் கொண்டதான தீர்மானங்களையும், தத்தம் கடமைகளை மறந்து விடாத மறுக்கமுடியாத சிறப்பான தெரிவினை மேற்கொள்ளல் அவசிய மாகிறது. சமூக ஒழுங்கு என்று கூறிக்கொண்டு பழமையில் ஊறிய மரபுக் கொள்கைகளுக்கு ஒத்துப்போகாதவனை மூடிய வீட்டிற்குள் இறுகப்பூட்டிவிட முயலலாகாது. முற்போக்கான சிந்தனைகளால் தவறென நிறுவப்படும் கருது கோள்கள் எவையாயினும் உடனடியாகக் கை விடப்படுதல் சாலச்சிறந்ததாகும். இம்முறைமை யானது மனித மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் வகையில் வளர்க்கப்படவேண்டிய ஒன்றாகும். கேலிக்குரியவை, கேலிக்குரியவர் களுக்கும் பிற்போக்கான தேவைகளுடையவர்க் குமே உகந்தது.

எதிர்பாராத ஊறுபாடுகள் நேரினும் அவற்றை ஏற்றுக்கொண்டு சூழலைத் தொடர்ந்தும் பயன்படுத்துவதைக் குடியேற்றப் புவியியல் விளக்கிக் காட்டுகின்றது. நகர, கிராமியக் குடி சனங்கள் எரிமலைகளாலும், பூமி அதிர்ச்சி யினாலும் மீண்டும் மீண்டும் பேரழிவுபெற்ற விடங்களிலேயே இன்னும் ஒட்டிக்கொண்டி ருக்கிறார்கள். சூழலினால் ஏற்படக்கூடிய ஒரு குறிப்பிட்டளவு எதிர்பாராச் சேதங்களை ஏற்றுக்கொண்டு மக்களுக்கு முன்னெச்சரிக்கை செய்யும் வழிகளைச் சீர்செய்வதற்குப் போராடிக் கொண்டும் அல்லது சேதங்கள் ஏற்படுங்கால் அவற்றைத் திருத்தி அமைப்பதற்கும் பெரும் பாலான மக்கள் கொண்டிருக்கும் இவ்வுறுதிப் பாடானது மனதில் கொள்ளத்தக்க ஒரு முக்கிய காரணியாகும். உலகம் முழுவதும் எல்லா இடங்களிலுமுள்ள எல்லா மக்களுக்கும் உகந்த உன்னத வாழ்க்கை வாழ்வதற்கேற்ற சந்தர்ப்பத்தை ஒழுங்கு முறையை வழங்கு வதிலேயே இன்று "மேம்பாடு" எனும் கருத் தாக்கம் கருத்தொருமித்து நிற்கின்றது.

மேலைத்தேச விழுமியங்கள், கருத்துக்கள், பழக்கவழக்கங்கள் என்பவையாவும் உலகமய மாதல் மூலமாக புற எல்லைத்தேசங்களைச் சென்றடைகின்றன. விருத்தி அடைந்த நாடுக ளில் மையம்கொண்ட பண்பாட்டு அம்சங்கள் ஏனைய புற எல்லைத் தேசங்களைச் சென் றடைவது என்பது தவிர்க்க முடியாத ஒன்றா கக் காணப்படுகின்றது.

இவ்வகையில் உலகப் பண்பாட் டில்வளர்ச் சிக்கான விலையாக உள் நாட்டுப்பண்பாடு காணப்படுகின்றது. வேறு வார்த்தைகளில் கூறின் உள் நாட்டுப் பண்பாட்டின் சரிவில் தான் உலகப் பண்பாடு நிமிர்கின்றது. மனித மேம்பாட்டின் நிமிர்வாக இது கருதப்படுகிறது.

மக்கள் சார்பான மகத்தான உண்மைகளைப் போதிக்கின்ற மனித உரிமைகள், சமூக ஒழுங்கிற்கும், மனித மேம்பாட்டிற்குமான காலத்தின் தேவையுமாகின்றது. சமுதாயத்தில் ஒவ்வொரு மனித உறவின் தேவையை உரிமையை சமூக, பொருளாதார, அரசியல் நிறைவில் புரிந்துகொள்ளாத நிறைவேற்றாத அதிகாரங்கள் முரண்நிலைமைகள் உடைத்து சமநிலை எய்தப்படாதவரை பெரிதென்ன, சிறிதென்ன எங்கள் தமிழர் புலத்திற்குள், தமிழ் அகராதிக்குள் வெறுமனே புள்ளி விபரங்களாக மட்டுமே அடக்கப்படுவதே விதியும் வசதியு மாகின்றது. தொடர்பில்லாத கோலங்களை, உண்மையாய் உரிமைபற்றி உணர்த்துகின்ற உரிமைக்குரியவர்களை கேலிச்சித்திரங்களில் கிறுக்கி விடுவதில் இந்நாட்டின் சனாதிபதியும் ஒரு பெண்தானே என்பதுடன் பெண் விடுதலை பற்றிய எண்ணக்கருவை சின்னத்தனமாய் சித்தரிப்பவர்களை எந்தப் பட்டியலில் சேர்ப்பது?

மாக்ஸ்வெபர் எனும் ஜேர்மனிய அறிஞர். சமூக ஒழுங்கு பற்றிக் கருத்துக் கூறுகையில் சமூகக் கௌரவமானது பல்வேறு சமூக அங்கத்தவர்கள் இணைந்த குழுக்களிடையே பகிர்ந்தளிக்கும் முறைமைதான் சமூக ஒழுங்கு என்கிறார்.பகிர்வு முறையில் ஒழுங்கின்மை ஏற்படும்போது குழப்பம் ஏற்படுகின்றது. அதி காரம் என்பது மக்கள் நலனை நோக்கியதாகும். சமூக, பொருளாதார, அரசியல் அந்தஸ்தை உரிய முறையில் பகிர்ந்தளிப்பதாகும். அநீதி கூறும் மனிதர்களிடையே அதிகாரம், அர்த்தம் கொள்ளப்படமுடியாதது. தன்தன் உரிமையை, சமூக அநீதிகளை வெளிப்படையாகக் கூறுப வன் எந்த அதிகாரத்தையும் நிறைவேற்று வதில்லை. மாறாக மறைக்கப்பட்ட, புதைக்கப் பட்ட உண்மைகளை அம்பலத்தில் அரங்கேற்று கின்றான்.

சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் சீர்கேடுகள், கொள்ளை, கொலை போன்ற இன்னோரன்ன சமுதாயச் சீர்கேடுகளும் ஒட்டு மொத்தமாக யாழ்குடா நாட்டையே சுற்றிவளைத் துள்ளது. தத்தம் கௌரவங்களுக்கு எல்லோரு மாக வக்காளத்து வாங்குகின்றோமேயொழிய மனித மேம்பாட்டின் சரிவிற்கான காரணங் களைக் கண்டறியவும், தீர்வுகள் காணவும் யாரா வது முன்மொழிகின்றோமா? என்றால் அதுவும் கவலைக்கிடமானது.

வறுமைநிலையிலுள்ள ஒரு சிறுவன் ஒரு குற்றத்தைப் புரியும்பொழுது அவன் "பாலியல் குற்றவாளி" என்று தம்மை உயர்வாக (?) கூறுபவரால் பட்டம் சூட்டப்படுகின்றான். அதே செயலை பணம் படைத்த ஒரு சிறுவன் செய்யும்பொழுது அவன் "இளமையின் வீரதீர உணர்வுகளால் அதனை மேற்கொண்டான்" என்று புகழாரம் சூட்டப்படுகின்றான். சிலர் தாம் விலகியோர் என்பதை சமூக ஒழுங்கினின்றும் புறம் தள்ளி தமது நடத்தைகள் பற்றிப் பெருமை கொள்கின்றனர். மேலும் குருக்கள் செய்தால் குற்றமில்லை எனவும் கூறப்படுவதுண்டு.

சமூக அங்கத்தவர்களிடையே நியாயமான மனித மேம்பாட்டை நோக்கிய ஒழுங்கைப் பேணி, தேசிய உற்பத்தியில் நிலைபேறான துரித அதிகரிப்புடன் வருமானத்தினை சமத்துவமான திசையில் பகிர்ந்து, சமூகப் பொருட்களின் மீதும், சமூக பொருளாதார அரசியல் முடிவுகளை தீர்மானங்களை முன்னெடுப்பதில் சகல மக்களும் முன்னின்று உழைத்து, தேசிய அடையாளங்களை, மரபுகளை மீள் உறுதிசெய்து, நாம் ஒரேமொழி பேசுபவர்கள் எனும் ஒருமைப்பாட்டுடன், தேசிய தனித்துவம் சார்ந்த சுய பிரதிமையைத் தோற்றுவித்து, "நாம் யார்க்கும் குடியல்லோம்" "இரண்டாம் தரப் பிரஜைகள் அல்ல" என்பதாக ஒன்றிணைந்த மனித மேம்பாட்டைக் கட்டி யெழுப்புவோம்.




ஊடகங்கள் வாயிலாக அரசியல்வாதிகளும் கலைஞர்களும் தமது புகழைப் பரப்புவது போன்று விளையாட்டு வீரர்களும் தமது சாதனைகளை ஊடகங்கள் மூலம் பரப்பி வருகின்றனர்.

அந்தவகையில் தனது புகழைப் பரப்புவோரில் உலகின் கால்பந்தாட்டத் துறையில் புகழ்பெற்றவரான டேவிட் பெக்காமும் அடங்குகிறார். கடந்த ஐந்து வருடங்களாக ஊடகங்கள் மூலம் அவரது பேச்சு இடம்பெறக் காரணம் அவரது திறமையாகும். இவர் உலகின் முதல்தர கால்பந்தாட்ட வீரர் என்பதை விட சிறந்த விளம்பர நடிகருமாவார்.



ஸ்பெயினின் றியல் மட்ரிக் கழகத்துக்காக ஆடிவரும் இவரது வருட வருமானம் பல மில்லியன் டொலர்களாகும். அதையொத்த அல்லது அதற்கும் அதிகமான தொகையை இவர் விளம்பர ஒப்பந்தங்கள் மூலம் பெறுகிறார்.

இவரது மனைவி சிறந்த பாடகியான விக்டோரியா ஆவார். பெக்காமுக்கு உலகில் பெரும் பேரும் புகழும் காணப்படுவதுபோல அவரிடம் பெரும் நிதியும் உள்ளது. இவர் பிரான்சில் வசித்தாலும் இவரது பிறப்பிடம் இங்கிலாந்து ஆகும். அங்கும் அவருக்கு விலைமதிக்கமுடியாத சொத்துக்களும் வீடும் உள்ளன.

# இருந்தாலும் மறைந்தாலும் பெயர்சொல்ல வேண்டும்

அந்த வீட்டுக்கு நொட்டிங்காம் அரண்மனை என்று பெயரிடப்பட்டுள்ளது. இவர் எங்கு விளையாடினாலும் இவரது ரசிகர்கள் வெள்ளம் போல திரண்டுவிடுவர். இதனால் அவரது அணி எவ்விதத்திலும் நட்டத்தை சந்திக்கவில்லை.

எனினும் தற்போது இவரது "காலம் முடிகிறது" என்ற தலைப்பில் செய்திகள் வெளியாகி வருவது அவரது திறமை குறைந்து வருவதினாலாகும். இவரைவிட சிறந்த வீரர்கள் தற்போது உருவாகிவருகின்றனர்.எனினும் பெக்காமின் புகழ் கரை புரண்டு ஓடுகிறது. அது அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் மட்டுமன்றி வறிய நாடான ஆபிரிக்க நாடுகளிலும் பரவிவருகிறது. அவர் கால்பந்தாட்டத்தில் இருந்து விரைவில் ஓய்வு பெற்றாலும் உலகில் பல பாகங்களிலும் கால்பந்தாட்ட பயிற்சிப் பள்ளிகளை உருவாக்கும் புதிய பணியை மேற்கொள்ளவிருக்கின்றார்.

ஏற்கனவே லோஸ் ஏஞ்சல்ஸில் இவ்வாறான பயிற்சிக்கல்லூரியை ஆரம்பித்துள்ள அவர் 2007 ஆம் ஆண்டு இரு ஆசிய நாடுகளில் பயிற்சிக்கல்லூரியை ஆரம்பிக்கவிருப்பதாகக் கூறப்படுகிறது. அதில் ஒன்று சீனாவாகும்.

இப்போது 30 வயதை அண்மித்துள்ள பெக்காம் இன்னும் ஓரிரு போட்டித்தொடர்களில் பங்கேற்கும் உடற் தகுதியில் இருக்கின்றார். எனினும் 2006 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெறும் உலகக்கிண்ணத் தொடருக்குப் பின்னரே அவர் ஓய்வு பெறுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# மாறுகிறது வியூகம்...

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் வீரர்களை சந்தர்ப்பத்துக்கு ஏற்றவகையில் அணி வீரர் மாற்றிக்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட்சபை உறுப்பினரான சுனில்கவாஸ்கர் கூறியுள்ளார்.

10 மாதங்களாக இது பற்றி ஆராயப்பட்டுவந்த நிலையில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின்போது இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி துடுப்பாட்ட வீரர் ஒருவர் ஓட்டம் பெறுவதில் தாமதம் காட்டுவாராயின் அவருக்குப்பதிலாக புதிய வீரரை அணித்தலைவர் களமிறக்கலாம். இது பந்து வீச்சாளர் களத்தடுப்பாளர் ஆகியோருக்கும் பொருந்தும். அதேபோன்று தற்போது நடைமுறையிலிருக்கும் 15 ஓவர்களுக்கு 30 மீற்றருக்குள் களத்தடுப்பு அமைய வேண்டும் என்ற கட்டுப்பாடு 20 ஓவர்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வீரர்கள் மாற்றப்பட்ட போதிலும், கள அணியில் 11 பேருக்கு மேல் இருக்க முடியாது. இந்த நடைமுறை தற்போது நடைபெறும் நட்வெஸ்ட் முக்கோணத் தொடருக்குப் பின்னர் நடைபெறும் அவுஸ்திரேலிய இங்கிலாந்து அணிகள் பங்கேற்கும் மூன்று போட்டிகளைக்கொண்ட வெஸ்ட் தொடரில் அறிமுகப் படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு இனிங்சில் களத்தடுப்பில் ஈடுபடுவோர் களத்தடுப்பு எல்லையை முதல் 10 ஓவருக்குப் பின்னர் ஐந்து ஐந்து ஓவர்களுக்கும் தேவையானவாறு அமைத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்படும்.

இது போட்டிகளில் பரபரப்பை ஏற்படுத்தும். இதைவிட தீர்ப்பு வழங்குதிலும் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படும். இந்தமுறைவரும் அக்டோபரில் நடைபெறும் ஜொனி வோக்கர்ஸ் சுப்பர் தொடரில் அறிமுகப்படுத்தப்படும். இந்தக் கூட்டத்தின் போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங்கின் துடுப்புப் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எம்.சி.சி ஐ.சி.சி அதிகாரிகள் தீர்ப்பு வழங்கவுள்ளனர்.


## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### சிட்டை ஆய்வாளர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் சிட்டை ஆய்வாளர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

தகைமைகள் :

01. கல்வித்தகைமை :- க.பொ.த உயர்தரம் (மூன்று பாடம் சாதாரண சித்தி)
02. அகவை :- 25 தொடக்கம் 40 வரை.
03. உயரம் :- 05 அடி 02 அங்குலம்.

குறிப்பு:-

01. விண்ணப்ப முடிவு நாள் :- 13.07.2005
02. சம்பளம் :-
$\frac{3,630-4,730}{10X110}$ + 2,700.00 = 6,330.00+சிறப்புக் கொடுப்பனவு 4,000.00 = 10,330.00
03. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு:- 15.07.2005 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.
04. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05. விண்ணப்பப்படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரக்கணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை, விசுவமடு.

(சி.12239)

## இன்னும் நீங்கள் தாமதிக்கின்றீர்களா!

A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபலபல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டுக்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதிசெய்கின்றது.



சி. றமணன்
யாழ்ப்பாணம்.

G.C.E உயர்தர பரீட்சையை முடித்ததும் அடுத்து என்ன செய்வதென்று அறியாது குழம்பிய நிலையில் இருந்த போது IIS நிறுவனம் Edexcel இன் HND கற்கைநெறியினை எமது சொந்த மண்ணிலேயே வழங்க முன்வந்திருந்தது இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி என்னையும் HND கற்கைநெறியில் இணைத்துக்கொண்டேன். சிறுபராயம் முதல் இருந்து வந்த கணனிக்கல்வி தொடர்பான எனது ஆவல் A/L கல்வியை முடித்த வேளையில் ஓர் பூரண கற்கைநெறியைத் தேர்ந்தெடுத்து கணனித்துறையில் ஓர் வல்லுனராக வர வேண்டும் என்ற நிலையில் வளர்ச்சி கண்டிருந்தது என் ஆவலையும் நான் கொண்டிருந்த இலக்கையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் Edexcel இன் HND கற்கை நெறி அமைந்திருந்தது இரண்டு வருடங்களிற்கு சமமான பல்கலைக்கழகக் கற்கைநெறியினை முடித்துத் தற்பொழுது மூன்றாம் வருடத்தினைத் தொடர்வதற்கு பிரித்தானியாவில் உள்ள Middlesex பல்கலைக் கழகத்தில் கல்வியினைத் தொடர்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த IIS நிறுவனத்திற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



வை.தர்மிந்
சங்கானை

2002ம் ஆண்டு A/L பரீட்சை எழுதிய எனக்குப் பல்கலைக்கழக அனுமதி கைநழுவிப்போன நிலையில் IIS நிறுவனத்தில் என் எதிர்காலத்தையிட்டு ஏங்கிய நிலையில், IIS நிறுவனத்தினால் நடாத்தப்படும் London Edexcel நிறுவனத்தின் HND கற்கை நெறியைப்பற்றி அறிந்தேன். இக்கற்கை நெறியானது குறுகிய காலத்தில் ஓர் கணனிப் பட்டதாரியாகக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகின்றது. ஆத்துடன் வெளிநாட்டு உயர்கல்வி ஒன்றிற்கான வாய்ப்பினை அளிப்பது சூடாநாட்டு மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். அத்துடன் 3rd வருடக்கல்வியை கொழும்பில் SLIIT நிறுவனத்தில் மேற்கொள்ளக் கூடியதாக இருப்பது இக்கற்கை நெறியின் ஓர் சிறப்பம்சமாகும். HND கற்கைநெறியை எமது சொந்தமண்ணிலேயே மேற்கொள்ள ஓர் வாய்ப்பு எமக்கு கிடைத்தது மிக மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

BTEC HND

World Class Qualifications

Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects

IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது

edexcel INTERNATIONAL
Approved Training Centre

IIS SUCCESS THROUGH KNOWLEDGE

IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201

# கலாலயா

பயிற்சியகம்
மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள்கோயிலுக்கு அண்மையில்)

## மகளிருக்கான துரித 3மோதகாலப்பயிற்சிகள்

**கேக் ஐஸிங் :** சகலவிதமான ஐஸிங் 22வகையான கேக் அமைப்புக்கள், மாச்சீனி மலர்கள் (Sugar crafting) என்பன வெகு சிக்கனமான முறையில் செய்தல்.
**கூந்தல் அலங்காரம் :** 20 இற்கும் மேற்பட்ட கொண்டைகள் (Hair Styles) போடுதல்.
**FABRIC PAINTING:** SAREE PAINTING, கைக்குட்டை, தலையணை, உறைகளில் வர்ணந்தீட்டல், EMBOSS PAINTING, POT PAINTING, மண் PAINTING
**உணவுகள் தயாரித்தல்:-** மேலைத்தேய, கீழைத்தேய மற்றும் சீனி உணவு வகைகள், சிற்றுண்டிகள் தயாரித்தல்.
**கைவேலை:-** கடதாசி அலங்காரம், கழிவுத்துணி வேலை, கிறிஸ்ரல்வேலை, முத்துமாலை கோர்த்தல், றிபன் வேலை.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

இத்துடன் அடிப்படை FACIAL அழகுக் கலையும், மணப்பெண் அலங்காரமும், வித்தியாசமான முறைகளில் சேலை அணியும் விதமும் 2 நாள் வகுப்புக்களாக நடைபெறும்.

**6 மாதகால தையல் பயிற்சி, பூவேலை வகுப்புகள்**

தையல் பயிற்சி: குழந்தைகள், சிறுவர்,மகளிருக்கான உடைகள் தைத்தல்
பூவேலை: கடதாசியாலும், துணிகளாலும், 20 வகையான மலர்கள் மற்றும் BOUQUET செய்தல்

**சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள்**
**ஆரம்பம்:-10-07-2005**
**கிழமை நாள் புதிய வகுப்புகள்**
**ஆரம்பம்:-11-07-2005**

**மேலும் விபரங்கட்கு,**
வியாழன்,வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப 2.00 மணிவரை அறிந்து கொள்ளலாம்.

சி-12148

**இயக்குநர்**



solidar | Swiss Labour Assistance SAH | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Norwegian People's Aid

## Transport Officer

The Solidar Group – ASB (Arbeiter Samariter Bund), NPA (Norwegian People's Aid) and SAH (Swiss Labour Assistance) – is now recruiting an experienced and qualified Transport Officer to work in our Kilinochchi office in support of Phase III Reconstruction activity in the tsunami affected districts of Jaffna (Vadamarachchi East) and Mulaitivu. Solidar is committed to building more than 1,000 permanent homes and a range of associated community infrastructure, including fishing communities, playgrounds, preschools, community centres, water & sanitation and road building.

The Transport Officer, reporting to the Logistics Manager, will be responsible for all transport coordination, dispatch and maintenance of the Solidar light and heavy vehicle and machinery fleet.

### REQUIRED COMPETENCIES

- Extensive experience in transport and transport systems as practiced in UN or international NGO agencies.
- Sound knowledge and experience of all transport issues including coordination to ensure maximum utilisation of assets, fleet maintenance requirements, supervision of drivers and mechanical staff, management of transport related resources, communication equipment and staff training.
- Experience in planning, record keeping and report writing.
- Experience in liaising with local authorities, commercial companies and donors.
- Staff management, communication, and organisational skills.
- Good leadership skills and a flexible and motivated approach.
- Proficient in computer skills (excel and word essential).
- Written and verbal fluency in both English and Tamil languages.

### PERSONAL SKILLS

- Capacity to prioritise and delegate.
- Analysis and coordination skills.
- Flexibility.
- Sense of responsibility and accountability
- Good interpersonal skills; Ready to listen to people and work as a member of a team.
- Open mindedness and common sense.
- Strong humanitarian motivation.

Interested candidates should submit a CV and Cover Letter by email to Mr. Kym Ryan at: kymr@npaid.org no later than Friday 8 July 2005

Alternatively, submissions may be sent by mail to:
Ms. Harshi Gunawardana
SOLIDAR Administration Coordinator
NPA/SOLIDAR Office
15/2 Tickell Road
Colombo 08

(சி-12267)


# 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



அன்னையின்
மடியில்
05-10-1937

ஆண்டவன்
அடியில்
05-06-2005

அமரர்

## திரு.அருணாசலம் இராமசேது

ஐயா!
எம்மைவிட்டு பிரிந்து போனதுவோ மாதம்
ஒன்று
ஒரு சுகம் கழிந்தாலும்
மறந்திடுமோ உங்கள்
நினைவு
நீங்கள் வைத்த பாசம் கண்டு
உறைந்து நிற்கிறோம்
மகிழ்வில் அன்று
நீங்கள் முடித்த வாழ்வை
கண்டு உறைந்துவிட்டோம்
துயரத்தில் இன்று
என்றோ ஒருநாள் வாழ்வில் வருவது முடிவிலி
அன்றி
முற்றுப்புள்ளி என்று
அனைவரும் அறியும் மன உணர்வு
ஒன்றுண்டு
ஆனால்
எதையும் அறியா மழலை மனம்
கொண்ட உங்கள் பிள்ளைக்கு பதில்
என்ன?
உலகில் எந்தச் சுகத்தையும் ஏற்கமுடியாத
உலகையே உங்களில் காணும் மழலை மனதிற்கு
பதில் என்ன?
அன்னை முகத்தையே ஐயாவில் கண்டு மகிழும்
அந்த மலருக்கு!
அழைக்கும் குரலுக்கு!
தேடும் கண்களுக்கு!
ஏங்கும் நெஞ்சத்திற்கு!
எதைக்கூறி மகிழ்வூட்டுவோம்-
எது நாள்வரை?

அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்டு எம்மோடு துயர்பகிர்ந்த அனைத்து உறவுகளுக்கும் நன்றி கூறுகின்றோம்.

பல வழிகளிலும் கைகொடுத்துதவி எம் துயரில் பங்குகொண்ட கிளிநொச்சி சர்வதேச தொலைத் தொடர்பு சேவை நிர்வாகத்தினர், பணியாளர்கள் அனைவருக்கும் என்றும் எங்கள் நன்றிகள்.

05.07.2005 அன்று கீழ்க்காணும் முகவரியில் நடைபெறுகின்ற 31ஆம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி பிரார்த்திப்பதோடு அந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

(இந்நாளில் ஈவிங் லண்டன் கனகதுர்க்கை ஆலயத்திலும் அன்னாரின் ஆத்ம சாந்தி அடைய பிரார்த்தனை நடைபெறுகின்றது.)

''நன்றி''

தகவல்:- இவரின் பிரிவால் துயர்கொள்ளும் குடும்பத்தினர்.

முகவரி:-
துணுக்காய்ச் சந்தி,
வெள்ளாங்குளம்,
மன்னார்.

(சி-12266)




**அத்தியாயம்- 12**

**பகுதி -53**




மிஸ் ஜேன் பள்ளிக்கூடத்தில செய்தது போல... டிப்ஸ் "வெறுமனே கேட்டுக்கொண்டிருந்த போது"..... ஜேக் பல முறை செய்திருக்கக் கூடியது போல அவரும் செய்திருக்கலாமா? எனினும் இப்போது அது பற்றி எனக்குத் தெரிவிக்கும் அளவுக்கு டிப்ஸ் வந்திருந்தான்.

"றோசாக் கிளையப் பற்றி அப்பா சொன்னதுக்கு நீங்கள் என்ன சொன்னனீங்கள்?" நிகழ்ந்திருக்கக் கூடிய புரிந்துணர்வின் இன்னுமொரு துண்டை பெற்றுக்கொள்ளும் நோக்கில் அப்படிக் கேட்டேன்.

"நான் ஒன்றும் சொல்லவில்லை. அவர் சொல்லுறத சும்மா கேட்டுக்கொண்டிருந்தேன்" என்றான் டிப்ஸ்.

தீந்தைகள் இருந்த சாடிகளை, மேசை மேலிருந்த ஆக்கப் பொருட்களைப் பார்த்த படி அறைக்குள் சுற்றி வந்தான். பிறகு மணல் பெட்டிக்குச் சென்றவன் இயல்பான, சுயாதீன மான முறையில் அதற்குள் பாய்ந்து ஏறினான். அப்படியே கைகால்களை எறிந்து படுத்துக் கொண்டான் "உன்ர சப்பாத்துகள கழட்டப் போறியா டிப்ஸ்?" தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

"இல்லை" பதில் சொல்வது போல் சொன்னான். "அப்ப என்ன செய்யப் போறாய்? கெதியா முடிவு செய்து கொள்!" என்று சொல்லிக் கொண்டவன் உருண்டு முகத்தை மண்ணோடு வைத்துக் கொண்டான். "எனக்கு ஒண்டும் அவசரமில்ல... இப்போதைக்கு இப்பிடியே இருக்கப் போறன்" என்றான். கையை மணலுக்குள் ஓட்டி அங்குமிங்குமாக இழுத்து வேறு பிள்ளைகள் மணலுக்குள் புதைத்து வைத்திருந்த சிறிய கட்டடங்களை வெளியே எடுத்தான்.

"ஓ! நான் மணலில சாமான்கள கண்டு பிடிக்கிறன் சின்னக் கட்டடங்கள்... அதுகும் இதுகுமெண்டு கன சாமான்கள கண்டு பிடிக்கிறன்."

பிறகு திடீரென்று மணல் பெட்டியின் எதிர்ப்பக்கத்துக்குச் சென்றவன் மணலை கிண்டத் தொடங்கினான். இறுதியாக அவனது சவ்ள் உலோகத்தாலான பெட்டியின் அடிப்பாகத்தில் கீறும் ஒலி கேட்டது. கீழே குழிக்குள் குனிந்து கையை நீட்டி, ஒரு பொம்மை வீரனை வெளியே இழுத்தெடுத்தான். அதை மேலே தூக்கிப் பிடித்தான்.

"ஓ! ஓ! இதுதான் ஆள்!" என்று வியப்புக் குரலெழுப்பினான். "இஞ்ச பாத்தீங்களா?.... இந்தச் சண்டை போடுற ஆளப் பார்த்தீங்களா? என்ர மலைக்குக் கீழ இவரத்தான் புதைச்சனான். இவ்வளவு வாரமும் இவர் இதுக்குள்ள புதைஞ்சு இருந்திருக்கிறார் என்கிறத காணுறது எனக்கு சந்தோசமா இருக்குது.... சரி இப்ப திரும்பிப் போங்கோ சேர்!... திரும்பிப் போங்கோ!... உங்கட கல்லறையுக்க திரும்பிப் போங்கோ!" என்றவன் அந்த சிறிய பொம்மை வீரனை மீண்டும் புதைத்தான். அப்படிச் செய்யும் போது பாடவும் தொடங்கினான்.

அப்பக்காறன்... அப்பக்காறன்
அப்பக்காறன தெரியுமா?
ட்றியறி ஒழுங்கைக்குள்ள
இருக்கிற
அப்பக்காறன தெரியுமா?

என்னை நிமிர்ந்து பார்த்து சிரித்து விட்டு, "நான் பள்ளிக்கூடத்தில இந்த பாட்ட படிச்சனான்... இப்ப புதைக்கப்பட்ட ஆளுக்காக பாடப்போறன்...."

அற்பமான மனிதனை தெரியுமா?
அற்பமான மனிதனை
அந்த அற்பமான மனிதனை
அந்த அற்பமான மனிதனை தெரியுமா?
பாழடைந்த கல்லறையில் அவன் வாழ்கிறான்.

டிப்ஸ் சிரித்தான். தான் சொன்னதை வலியுறுத்துவது போல் புதைகுழியின் மேல் சவளால் அடித்துக் காட்டினான்.

"இல்லை" என்று என்னைப் பார்த்து மிகச் சாதாரணமாகச் சொன்னான். ஏதோ நான் கேட்ட கேள்விக்கும் இந்தப் பதிலுக்குமிடையே நேர இடைவெளி எதுவும் இல்லாதது போல் சொன்னான்.

"நான் அப்பாவோட கனக்க கதைக்கிறயில்ல"

"கதைக்கிறயில்லயா?"

"இல்லை"

"ஏன் கதைக்கிறதில்ல?" நான் கேட்டேன்.

"எனக்கு தெரியேல்ல" என்றவன் "நான் கதைக்கிறதில்லையெண்டதால தான் அப்பிடியெண்டு நினைக்கிறன்." என்றான்.

இன்னுமொரு பாடல் இசையை வாயைத் திறவாமலே இசைத்துக் காட்டினான். "இதையும் பள்ளிக்கூடத்திலதான் பழகினனான்" என்றான்.

"பள்ளிக்கூடத்திலயும் இதப் பாடுறனீங்களா?"

என்று நான் கேட்டேன்.

"பள்ளிக்கூடத்திலதான் அதப் பழகினனான். இஞ்ச உங்களுக்காக பாடிக் காட்டுறன்"

"அப்பிடியோ" என்று நான் சொன்னேன்.

சிகிச்சையின் போது கேள்விகளைக் கேட்பது மிகவும் உதவியாக இருக் கும். ஆனால் அந்தக் கேள்விக ளுக்கு சரியாக பதில் சொன் னாலே அவை உதவியாக இருக்கும். ஆனால், யாரும் ஒரு போதும் அப்படிச் செய்வ தில்லை. பாடசாலையில் டிப்ஸ் சின் நடத்தையில் ஏதாவது மாறு தல் ஏற்பட்டிருக்குமா என்று எண்ணினேன். அப்படியான மாற்றங்கள் ஏற்பட்டது பற்றி ஆசிரியர்கள் எதுவும் அறிவிக் காத படியால் கவனிக்கத்தக்க மாற்றம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை என்றுதான் தோன்றியது. அப்படித்தான் எமது கணிப்பு இருந்தது. ஆனால் பாடசாலை யிலும் வீட்டிலும் அவன் போகுமிடங் களிலும் அவன் பல விடயங்களைக் கற்றுக் கொண்டிருந்தான். ஆனால் அவன் கற்றுக் கொண்டவை குறித்த மதிப்பீட்டை செய்யும் விதத்தில் அல்லது அவற்றைப் பரீட்சித்துப் பார்க்கும் விதத்தில் அவன் நடந்து கொள்ள வில்லை.

"உன்ர சப்பாத்துகள கழட்டு டிப்ஸ்" அவன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். தனது பாதணிகளை கழற்றிவிட்டான். மிகுந்த அக்கறையான நகர்வுகளில் சவளால் மண்ணை அள்ளி அவற்றுள் நிரப்பினான். ஒரு காலுறையைக் கழற்றி அதற்குள் மணலை நிரப்பினான். பின்பு, மற்றக் காலுறையை இழுத்துப் பிடித்துக் கொண்டு, காலுறைக்கும் காலுக்குமிடையே மணலை நிரப்பினான். பிறகு, காலுறையைக் கழற்றிவிட்டு, காலை மணலுக்குள் புதைத்துக் கொண்டான். பிறகு சவளை எடுத்து தனது பாதத்தின் மீது மணலைக் குவித்தான். அவனது பாதங்களையும் கால்களின் கீழ்ப் பகுதிகளையும் மூடிக் கொள்ளும் அளவுக்கு மணல் குவியும் வரை அப்படிச் செய்தான்.


திடீரென்று தன் கால்களை வெயியே இழுத்தெடுத்துவிட்டு எழுந்து நின்று, வெளியே குதித்து விளையாட்டறையின் கதவைத் திறந்தான். கையை நீட்டி கதவில் வைக்கப்பட்டிருந்த அட்டையை எடுத்தான். திரும்பவும் அறைக்குள் வந்து அந்த அட்டையை என்னிடம் நீட்டினான்.

சிகிச்சை எண்டா என்ன? என்று கேட்டான். எனக்கு திகைப்பாக இருந்தது.

"சிகிச்சையா....?" என்று விட்டு "ஒரு நிமிசம் யோசிச்சுப் போட்டு சொல்லுறன்" என்றேன். ஏன் இந்தக் கேள்வியை அவன் கேட்கிறான் என்று யோசித்தேன். எப்பிடியான விளக்கம் பொருளுள்ள பதிலாக இருக்கும்?

"இஞ்ச வாறதுக்கும் நீங்க விரும்புற எந்த விதத்திலையெண்டாலும் விளையாடுறதுக்கும் கதைக்கிறதுக்கும் கிடைக்கிற வாய்ப்பு எண்டு அதச் சொல்லலாம் எண்டு நினைக்கிறன்." என்றேன். "நீங்கள் என்னமாதிரி இருக்க விரும்புறீங்களோ அந்த மாதிரி இருக்கக் கூடிய நேரம். நீங்கள் என்னமாதிரி பயன்படுத்த விரும்புறீங்களோ அந்த மாதிரி பயன் படுத்தக் கூடிய நேரம். நீங்கள் நீங்களாக இருக்கக் கூடிய நேரம்." என்றேன். அந்த வேளையிலே என்னால் சொல்லக் கூடிய ஆகச் சிறப்பான விளக்கமாக அதுதான் இருந்தது.

அவன் எனது கையிலிருந்த அட்டையை எடுத்து, மற்றப் பக்கத்தைப் பார்த் தான்.



"இதுக்கு என்ன கருத்தெண்டு எனக்குத் தெரியும்.... குழப்ப வேண்டாம் என்றால் தயவு செய்து உள்ளே இருப்பவர்களை அவர்கள் பாட்டில் இருக்கவிடுங்கள் அவர்களுக்கு தொல்லை தர வேண்டாம். உள்ளே போக வேண்டாம். கதவில் தட்டவும் வேண்டாம். அவர்களை அவர்களாக இருக்க விடுங்கள் எண்டு சொல்லலாமா?" என்று கேட்டான்.

"ஓம் அப்பிடித்தான்"

யாரோ மண்டபம் நெடுக நடந்து வந்தார்கள் அவர்களது காலடிகள் டிப்ஸுக்கு கேட்டிருக்க வேண்டும். "யாரோ மண்டபத்துக்குள்ள நடந்து வருகினம். ஆனா இது எங்கட அறை. அவர்கள் உள்ளுக்கு வரமாட்டார்கள் அல்லவா?" என்றான்.

"அவர்கள் வருவார்கள் என்று நான் நினைக்கவில்லை" என்று நான் சொன்னேன்.

"இது எனக்கு மட்டும் தான்.... அல்லவா?" என்றவன் "இது எனக்குத்தான், வேறு யாருக்குமில்லை. அல்லவா?" என்றான்.

"ஒவ்வொரு கிழமையும் இந்த நேரத்தில இது உங்களுக்குத்தான் வேணும் எண்டு நீங்க நினைச்சா இது உங்களுக்குத்தான்"

"டிப்ஸுக்கும் மிஸ் ஏக்கும் எனக்கும் மட்டும் உங்களுக்கும் தான்" என்றான் டிப்ஸ்.

"சரி. அப்பிடியெண்டா இரண்டு பேருக்கும்..." என்றேன் நான்.

டிப்ஸ் கதவைத் திறந்தான் "அறிவிப்பு அட்டையை திரும்பவும் வைச்சு விடுறன்." என்றான். "எவரும் குழப்பக்கூடாது என்று மீண்டும் சொன்னவன் அட்டையை உரிய இடத்தில் வைத்து விட்டு, உள்ளே வந்து கதவைப் பூட்டினான்.

அவனது முகத்தில் மகிழ்ச்சியான புன்னகை பூத்திருந்தது. சித்திரம் வரையும் சட்டத்தை நோக்கிச் சென்றான்.

"டிப்ஸ்! இப்ப நீங்க மணல் பெட்டிக்கு வெளியால நிக்கிறபடியால உங்கட சப்பாத்துகளையும் காலுறைகளையும் போட்டுக் கொள்ள வேணும் எண்டு நீங்க நினைக்கவில்லையா?" என்று நான் கேட்டேன்.

(தொடரும்)

---

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)


அதையே இலட்சிய மூச்சாகக் கொண்டு செல்கின்றனர். அதனால்தான் தமிழீழ மக்களின் விடுதலைக் குரலாகத் தமிழீழ விடுதலைப்புலிகளும் அதன் தலைவர் தமிழீழத் தேசியத் தலைவராகவும் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

உலக நாடுகள் இதனை ஏற்றுக்கொண்டிருக்கும் நிலையில் அயலகத்தால் இதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. தமிழ் மக்கள் ஒற்றுமைப்பட வேண்டும். புலிகளின் குரல் தமிழ் மக்களின் குரலாகமாற வேண்டும். என்று சிலர் கூறுவதோ இதற்காகத்தான்.

அயலகத்தார் தங்களுக்கு விரும்பியவர்களை வேண்டப்பட்டவர்களை தமிழ் மக்களின் தலைவர்களாகக் காட்ட நியமிக்க ஆசை கொண்டனர். ஆனால் தமிழ் மக்கள் அவர்களை நிராகரித்துவிட்டனர். அவர்களில் ஒருவராகிய பெருமானை இன்றும் பாதுகாப்பாகத் தமது நாட்டில் வைத்திருக்கின்றனர். இன்னொருவகையில் ஆயுதக் குழு ஒன்றை உண்டாக்கி ஈ.என்.டி.எல்.எப் என்ற பெயரில் தமது விருப்பத்தை நிறைவேற்ற வைத்திருக்கின்றனர். கைகளில் வைத்திருக்க விரும்பினர். ஆனால் 'அரசியல் நிலைமை அதற்கு இடம் கொடுக்காத நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியை முடக்கி விட்டு ஆனந்தசங்கரியைத் தலைவராகத் திணிக்க முற்பட்டுள்ளனர். இதே நேரம் தென்தமிழீழத்தில் கருணாவையும் பலப்படுத்த விளைந்தனர். இத்தகையவர்களை விட்டால் மற்றைய சிலர் ஆளும் சிங்களக் கட்சிகளுடன் உறவு கொண்டவர்கள்.

இவர்கள் எல்லோரும் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள். இவர்களுக்குச் சொந்தக் கருத்துக்களோ இலட்சியங்களோ இல்லை. மக்களால் நிராகரிக்கப்பட்ட இலட்சியங்கள் இல்லாத இவர்களை ஒரு விடுதலைப பயணத்தில் இணைத்துச் செல்ல முடியுமா? இவர்கள் இந்தியாவின் விருப்புகளுக்கு ஏற்றவாறு அறிக்கைகளை விடுவதும் சிங்களப் பேரினவாதச் சிந்தனையுடையவர்களுடன் குசு குசு கூட்டங்கள் நடத்திக்கொண்டிருக்கவும் தகுதியானவர்களேயன்றி உரிமைகளுக்காகக் குரல் எழுப்பக் கூடியவர்கள் அல்லர்.

எனவே தமிழ் ஊடகங்கள் தமிழ் மக்களிடம் பணம் பெற்றுத் தமது தொழிலை நடத்துபவர்கள் யதார்த்தத்தை கூறவேண்டும். தமிழ் மக்களின் குரல்தான் விடுதலைப்புலிகளின் குரல். விடுதலைப்புலிகளின் குரல் தான் தமிழ் மக்களுடைய குரல் என்று அழுத்தமாகத் தெரிவிக்க வேண்டும். இதனை விடுத்து பலவீனப்படுத்தும் வகையில் கருத்துக்களை அயலகத்தவருக்கு ஏற்றவாறு கூறுவது தமிழினத்துக்குச் செய்யும் நன்மையாக இருக்கமாட்டாது.




சிங்கள அரசும் அதன் இராணுவமும் எம் மீது தொடுத்த போர் காரணமாக எமது மண்ணினதும் மக்களினதும் பெறுமதிமிக்க சொத்துக்கள் மாத்திரம் அழியவில்லை.

பெறுமதி மதிப்பிடமுடியாத எங்களது இயற்கை வளங்களும் அழிக்கப்பட்டன. இராணுவம் ஆக்கிரமித்து, யுத்தம் நடாத்திய இடங்களையும், இராணுவம் இப்போது ஆக்கிரமித்துள்ள

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

இடங்களையும் பார்வையிடும் ஒருவரால் இயற்கைக்கு ஏற்பட்ட கொடூர அழிவுகளை கண்டுகொள்ளமுடியும்.

தென்னை, பனை எனத்தொடரும் இந்த அழிவுகளில் பயன்தரும் பல்வேறு மரங்களும் அழிக்கப்பட்டன. இதுதவிர யுத்தமும், சமாதானமும் இல்லாத இந்தச் சமகாலச் சூழலில் கூட மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

அழிக்கப்படும் இயற்கை வளங்களான மரங்களுக்கு மாற்றீடு தேடாவிட்டால் கடைசியில் கஷ்டப்படப்போகின்றவர்கள் நாங்கள்தான்.

போர் மூலமோ, சமாதானம் மூலமோ நாம் மண்ணை மீட்கலாம். ஆனால் அதுவரை இயற்கை வளங்களை மரங்களை எப்படிக் காக்கப் போகின்றோம்.

இதனால் தான் தறிக்கப்படும் அல்லது அழிக்கப்படும் ஒவ்வொரு மரத்திற்கும் பதிலாக பத்து மரங்களையாவது நடவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்படவேண்டும்.

இல்லாவிட்டால் ஏற்கனவே பல்வேறு இயற்கைப் பாதிப்புகளால் பாதிப்புறும் நாங்கள் இயற்கை வளங்களான மரங்கள் இல்லாமல் போகும் சூழலில் அதன் பின் விளைவாக ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவேண்டி ஏற்படும்.

அதில் பிரதானமானது 'மழை' என்பது உங்களுக்கு புரிந்திருக்கும். எனவே இயற்கைவளமான மரங்களை பாதுகாத்தலும் மர மீள் நடுகையும் அவசியமானது.

யாழ் மாவட்டத்தில் இந்த வருட இறுதிக்குள் முப்பதினாயிரம் மரங்களை நடுகை செய்வதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

இது மட்டும் போதுமானதல்ல என நாம் ஒவ்வொருவரும் நினைத்துச் செயற்பட வேண்டும். எங்களால் நடமுடிந்த மரங்களை நட முனைவோம். அது எமது மண்ணுக்கு நாம் செய்யக் கூடிய கைமாறு ஆகும்.



# கத்தரிச் செய்கை

மேட்டு நிலப்பயிர்ச் செய்கையில் பயிரிடப்படும் பயிர்களில் கத்தரியும் ஒன்றாகும். கத்தரிச் செய்கையில் ஈடுபடுபவர்கள் சிறிய அளவில் உற்பத்தி செய்தபோதிலும் பராமரிப்பு சீரற்றதால் அதிக விளைவைப் பெற முடியாமல் தோட்டத்தைக் கைவிட வேண்டிய நிலைக்கும் ஆளாகின்றனர். இந்த நிலை மாற வேண்டுமானால் கத்தரிச் செய்கை பற்றிப் பார்ப்போம்.

கத்தரிச் செய்கையில் ஈடுபட முன்பு நடுகைக்கான தரை, காலம் என்பன முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். தரையை எடுத்துக் கொண்டால் நன்கு நீர் வழிந்தோடக் கூடிய நிலமாகவும், இலகுவான மண் அதாவது மணல் கலந்த இருவாட்டி மண்ணாக இருத்தல் வேண்டும். மண்ணின் P.H 5-7.5 வரை இருப்பின் கத்தரிச் செய்கைக்கு உகந்த நிலமாக எடுத்துக்கொள்ளலாம்.

*நிலம் பண்படுத்தல்.*

மண்ணை நன்கு உழுது பண்படுத்திய பின் நடுகைக் குழியைத் தயார் செய்யவும் நிலத்தை தயார் படுத்தலுக்கு முன்பு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பயிர்களை நாட்டிய இடமாகஇருத்தல் கூடாது. அதாவது கத்தரி, மிளகாய், தக்காளி, புகையிலை, உருளைக் கிழங்கு ஆகிய பயிர்கள் சொலனேசிய குடும்பத்தைச் சேர்ந்தது. எனவே ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பயிர்களை இரண்டு தடவைக்கு மேல் செய்கை பண்ணப்பட்ட நிலத்தை தெரிவு செய்யக்கூடாது. சொலனேசிய குடும்பப் பயிர்களைச் செய்கை பண்ணாத இடங்களில் கத்தரியை நடுவது சிறந்தது.

*கத்தரிச் செய்கைக்கு சிபாரிசு செய்யப்பட்ட இனங்கள்:-*

தின்னவேலி ஊதா,
எல்.எம்-164,

பாதா கொடை ஆகிய இனங்கள் விவசாயத்திணைக் களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட இனங்களாகும். இனி இவ் வினங்களின் சிறப்பியல்புகள் எதுவெனப் பார்ப்போம்.

*தின்னவேலி ஊதா:-*

இதன் காய்கள் மினுமினுப்பாக இருக்கும். கடும் ஊதா நிறமானவை. நீளமான காய்கள், பூக்கள், தண்டு, இலை, நரம்பு என்பன கடும் ஊதா நிறமாகக் காணப்படும். அதிக உலர் காலநிலை நிலவும் காலங்களில் கத்தரியைப் பயிரிட்டு அதிக பயன்பெறக்கூடிய வர்க்கமாகும்.

*எஸ்.எம்-164:-*

இந்த இனம் பக்றீரியா வாடல் நோயை எதிர்த்து வளரக் கூடிய வர்க்கமாகும். இதன் காய்கள் ஊதா நிறமுடையவை. காய்கள் மத்திய அளவான நீள் வட்ட வடிவானவை. பூக்கள் ஊதாநிறமானவை இது எல்லாப் பிரதேசங்களுக்கும் உகந்த இனமாகும். நீர்ப்பாசனத்தின் கீழ் செய்கை பண்ணும் போது 1 ஹெக்டேயருக்கு 15-18 தொன் விளைவைப் பெறலாம்.

*பாதா கொடை:-*

இந்த இனத்தின் காய்கள் ஊதா நிறமான கோடுகளைக் கொண்டிருக்கும். ஓரளவு உருண்டையான நீள் வட்ட வடிவானது. இதன் தண்டு, இலை, நரம்பு என்பன பச்சை நிறமாகக் காணப்படும். பூ இளம் ஊதா நிறமானது. பக்றீரியா வாடலைத் தாங்கி வளரும் வர்க்கமாகும். 1ஏக்கருக்கு தேவையான விதை அளவு 100-150 கிராம் போதுமானது.

*நடுகைக் காலம்:-*

சிறுபோகத்தில் மழையின் ஆரம்பத்துடனும் கால போகத்தில் கடும் மழையின் பின்னரும் நடலாம். நடும் போது வரிசைகளுக்கிடையே 90 ச.மீ இடை வெளியும் வரிசையில் இரு தாவரங்களுக்கிடையே 60 ச.மீ இடைவெளியிலும் நடுகைக் குழிகள் அமைக்க வேண்டும். ஒவ்வொரு நடுகைக்குழியும் 30 ச.மீ நீளxஅகலxஆழம் கொண்டவையாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழிக்கும் 1-2 கையளவு கூட்டெரு அல்லது வேறு ஏதாவது சேதனப் பசளை இடவும். 25-30 நாள் வயதுடைய நாற்றுக்களையே நடுகை செய்ய வேண்டும். நட்டவுடன் இலைகளைப் பயன் படுத்தி நிழல் வழங்கவும், மாலை நேரத்தில் நடுவது உகந்தது.

நாற்றுக்களை நடுவதற்கு முன்னர் ஒவ்வொரு குழிக்கும் கைபிடி அளவு 250-300 கிராம் சேதனப் பசளையை இடவும். நாற்றுக்கள் நடுவதற்கு 2 நாட்களுக்கு முன்னர் அடிக்கட்டுப் பசளையாக இட வேண்டிய இரசாயனப்பசளையை குழிகளில் இட்டு மண்ணுடன் கலந்து விடவும்.

உலர் வலயத்தில் நீர்ப்பாசனத்துடன் கத்தரியைச் செய்கை பண்ணலாம். சிறந்த விளைச்சலைப் பெறவும் இலாபகரமான பயிராகச் செய்கை பண்ணவும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். கோடைகாலம் அதாவது வரட்சியான காலங்களில் 5 நாட்களுக்கு ஒரு தடவை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். நாற்றுக்களை நட்டு 2,4,7,9,12 ஆவது கிழமைகளில் களையைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

*நோய்த்தாக்கம்:-*

கத்தரியைத் தாக்கும் நோய்களில் முக்கியமான நோய் பக்றீரியா வாடல் நோயாகும். பக்றீரியாவின் மூலம் ஏற்படும் இந் நோயினால் ஆரம்பத்தில் தாவரம் வாடும். இதன் பின் தாவரம் இறந்து விடும். இந்நோயைத் தாங்கி வளரும் வர்க்கங்களைச் செய்கை பண்ணுவது நல்லது. சுழற்சி முறைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல் என்பன இந்நோயைக் கட்டுப்படுத்தக் கூடிய முக்கியமான அம்சமாகும்.

*தண்டு, காய், துளைப்பான்:-*

இந்நோய் ஒரே இடத்தில் தொடர்ச்சியாகக் கத்தரியைச் செய்கை பண்ணுதல் அல்லது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பயிர்களை மாறி மாறி நாட்டுதல், அறுவடை செய்த பின் தாவர மீதிகளை தோட்டத்திலேயே விடுவதாலும் இப்பீடையின் தாக்கம் அடுத்த போகத்திலும் ஏற்படும்.

*கட்டுப்படுத்தல்:-*

வாடத் தொடங்கும் கிளைகளையும் பாதிக்கப்பட்ட கால்களையும் எரியும் நெருப்பில் இட்டு அழித்து விடவும். இதன் தாக்கம் முன்னர் அதிகளவில் ஏற்பட்ட தோட்டமாயின் நாற்றுக்களை நடும் போது ஒவ்வொரு நடுகைக் குழிக்கும் கார்போபியுரான் என்னும் பூச்சி நாசினிக் குறுணலை சிபாரிசு செய்யப்பட்ட அளவில் இடவும். பூக்கும் போது சிபாரிசு செய்யப்பட்ட நாசினிகளின் ஏதாவதொன்றை சிபாரிசு செய்யப்பட்ட அளவில் விசிறவும். இந்நாசினிகளை விசிறி 7-10 நாட்களின் பின்னர் அறுவடை செய்யவும். இவற்றைத் தவிர செந்நிற செதிற் பூச்சி சிற்றுண்ணி என்பனவற்றாலும் கத்தரி பாதிக்கப்படும்.

*அறுவடை:-*

பிரதேசத்தின் கால நிலை வர்க்கம் என்பவற்றைப் பொறுத்து நாற்றுக்களை நட்டு 10-12 கிழமைகளின் பின் முதலாவது விளைச்சலைப் பெறலாம். இதன் பின் ஏழு நாட்களுக்கொரு முறை அறுவடை செய்யலாம். கூரான கத்தியொன்றால் காய்களை வெட்டி எடுக்கவும்.


## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

**ஓட்டுநர்(பயிலுநர்) பணிக்கான விண்ணப்பம்கோரல்**

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள் :-**

01. கல்வித்தகைமை :- ஆண்டு 08.
02. அகவை :- 23 தொடக்கம் 35 வரை
03. உயரம் :- 05 அடி 05 அங்குலம்.
04. நிறை :- 55 Kg

**குறிப்பு:-**

01. விண்ணப்ப முடிவு நாள் :- 15.07.2005
02. விண்ணப்பதாரருக்கான நேர்முகத்தேர்வு 17.07.2005 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக் கழக நடுவப்பணிமனையில் நடைபெறும்.
03. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
04. விண்ணப்பப் படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை, புளியங்குளம் ஆகிய இடங்களில் உள்ள நேரக்கணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.


**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.12240)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




*பாவலரே!*

*கிரிகெட் தர வரிசையில் கடசி இடத்தில் இருக்கும் பங்காளதேஷ் அணியிடம் தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் அவுஸ்திரேலிய அணி கண்ட தோல்வி பற்றி?*

*யாழினி,*
*கிளிநொச்சி.*

ஆமையும் முயலும் நடத்திய ஓட்டப்பந்தயம் போன்றது என்று கூறலாமா? அல்லது ஆனைக்கும் அடிசறுக்கும் என்ற பழமொழி போன்றது என்று கூறலாமா?

*பாவலா!*

*மீண்டும் ஒரு தேர்தல் வந்தால் இலங்கையின் அரசியல் தளம் எப்படியிருக்கும்.*

*சர்மிளா,*
*வவுனியா.*

பேரினவாதிகளின் போர்க்களமாக இருக்கும்.

*பாவலரே!*

*கதாநாயகிகள் கனவில் வருவதை தடுக்க வழி ஒன்று சொல்லும்?*

*சிவா,*
*கிளிநொச்சி.*

தூங்குவதை நிறுத்தும்.

*பாவலா!*

*தற்போதைய குரு சிஷ்யன் உறவு பற்றி?*

*பிரியன்,*
*யாழ்ப்பாணம்.*

குருவை மிஞ்சிய சிஷ்யனாக இருந்தால் பறவாயில்லை. குருவை அஞ்சவைக்கும் சிஷ்யனாகவல்லா இருக்கிறார்கள்.

*பாவலரே!*

*சின்னத் திரையின் மோகம், நம்மவர் பக்கமும் பற்றி விட்டதால் வயிற்றிலடிக்கத் தொடங்கிவிட்டதே? எப்படி முடியப் போகிறதோ? உமது வீட்டில் அல்லது பக்கத்து வீட்டு அன்ரி வீட்டில் தொலைக் காட்சிப் பெட்டி இருக்கிறதா?*

*மதன்,*
*விசுவமடு.*

அவை தொலைக்காட்சி பெட்டிகளல்ல தொல்லைக் காட்சிப் பெட்டிகளே... சின்னத்திரை பென்னம் பெரிய தாக்கத்தை சமூகத்தில் உருவாக்கிவருகிறது. தாக்கம் ஆக்க பூர்வமானதாக இல்லை என்பதே கவலை.

*பாவலா வணக்கம்!*

*சந்திக்கு சந்தி புத்தர் சிலை அமைக்கும் இராணுவம் பற்றி உமது கருத்து என்ன?*

*ஜெ.ஜசோதினி,*
*உடையார்கட்டு ம.வி.*

புத்தர் சிலைகளை சந்திகளில் வைத்தால் மட்டும் போதுமா? புத்தரின் போதனைகளை சிந்தனையுள் ஏற்ற வேண்டாமா?

*அன்பின் பாவலா!*

*நான் விரும்பும் ஆணைத் திருமணம் செய்வதா அல்லது என்னை விரும்பும் ஆணை திருமணம் செய்வதா.*

*ஆ.லூசியாமேரி,*
*முழங்காவில்.*

இருவரில் எவர் திருமணத்தின் பின்னரும் உங்களை விரும்புவார்களாக இருப்பார் என நம்புகிறீர்களோ அவரையே திருமணம் செய்து கொள்ளுங்கள்.

*பாவலா!*

*மனித வாழ்க்கை பணத்திலா பிணத்திலா முடிவு பெறும்?*

*ஆ.ஆனந்தி,*
*புளியங்குளம்.*

பிணத்தை புதைக்கவும் பணம் வேண்டுமே...!

*பாவலரே!*

*கிரிக்கெட்டில் ராஜாவான அவுஸ்திரேலியாவை டெஸ்ட் கிரிக்கெட்டில் அந்தஸ்து பெறாத தரவரிசையில் கடைசி நாடானதும் பங்களாதேஷ் இலகுவாக அவுஸ்திரேலியாவை வென்று விட்டதே இதிலிருந்து உமக்கு என்ன புரிகின்றது தயவு செய்து பதில் கூறவும்.*

*சாந்தன்,*
*இலுப்பைக்கடவை.*

அவுஸ்திரேலியாவின் கர்வம் குறைந்திருக்குபும்- பங்களாதேஷின் தன்னம்பிக்கை அதிகரித்திருக்கும் அவளவுதான்.... என்ன பெரிய அவுஸ்திரேலியா முன்னர் சின்னஞ் சிறு சிறிலங்காவிடம் உலகக் கிண்ணத் தைப்பரிதாபமாக பறி கொடுத்த நாடு தானே...!

*பாவலனே!*

*பிரச்சினை வரப்போகின்றது என்று பயமுறுத்துகின்றார்கள் சிலர். இதைப் பற்றி உமது கருத்து?*

*ப.நாகேஸ்வரி,*
*அச்சுவேலி.*

பிரச்சினைக்குரிய பேர்வழிகளின் பிரச்சினைக்குரிய மிரட்டல்களை பெரும் பிரச்சினைகள் ஏற்படுத்துகின்றன.

*பாவலனே!*

*நீர் தற்போது வெளிநாட்டிலிருந்தால் மிகவும் அழகான பெண்ணையா? நல்ல குணமான பெண்ணையா? உமது துணைவியாக தேர்ந்தெடுப்பீர்.*

*நாகேஸ்வரி,*
*யாழ்ப்பாணம்.*

எனக்கு மனைவியாகத் தகுதியான பெண்ணை....!

ஏன் உள்நாட்டில் இருந்தாலும் இதே நிலை தான்...

*பாவலரே!*

*பிள்ளைகளின் பழக்க வழக்கங்களைக் கவனித்து சரி, பிழைகளைக் கண்டறிந்து திருத்தாமல் அசட்டையாக இருக்கும் பெற்றோரை-(குறிப்பாக தாய்மாரை) பற்றி உமது கருத்து?*

*அ.மதனகுமாரன்,*
*கொடிகாமம்.*

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக் கேட்க விரும்பாத தாய்...!




*கடைசியா நீ நினைச்சதை முடிச்சுப் போட்டாய் போல.*

*நான் நினைச்சதோ.... உது நல்லகதை. ஆரோ கொட்டை போட ஆரோ பழந் திண்ட மாரித்தான்.*

*"இல்ல, மச்சான் வந்தடத்தை காணிவாங்கித் தந்திட்டுப் போனவனாம்..."*

*சும்மா விடு வந்த நாளயிலயிருந்து வாகனம் பிடிச்சு உள்ள நாட்டு சொந்தக்காற வீடுகளெல்லாஞ் சுத்தித் திரிஞ்சதில என்ர வேலையும் பட்டார்.*

*அது சரி பத்துப்பயினைஞ்சு வரியங் கழிச்சு வாறான் செய்யத்தானே வேணும்.... மச்சான் கொண்டு வந்திருப்பார் தானே...*

*கொண்டு வந்தாப்போல அந்தநாளயில வரியந் தீபாவளி வந்தா அப்பு ஆச்சி இந்தா உனக்கு ஒருருவா உனக்கு ஒருருவாண்டு தந்தமாதிரி போறபோக்கில பிள்ளையளின்ர கையில ஏதுங் கிள்ளித் தெளிச் சிற்றுப் போவினம். வேற யென்ன?*

*அப்ப காணி வாங்கித் தந்ததாம் எண்டு கேள்விப்பட்டன் பொய்யே....*

*வாங்கித் தந்தது தான் உடனயே நானும் அதை அவருக்கு எழுதி திகதி போடாமக் குடுத்திட்டன்.*

*ஏன்ராப்பா....?*

*அவர் வெளியிலயிருந்து வருமட்டும் மரஞ் செடியள்ள வாற வருமானத்தை என்னை எடுக்கட்டாம். வந்த பிறகு காணி அவருக்கு.*

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 126



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நிலையுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 126

........................................................................
........................................................................
........................................................................
........................................................................

பெயர் : ..................................................
முகவரி : ..................................................
..................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 125



**அ.மதனகுமாரன்,**
**காளிகோயிலடி,**
**சந்தைவீதி,**
**கொடிகாமம்.**

### பரிசுக்குரிய வரிகள்

*தளராது தந்து நிற்கும் செய்தி வினோதமல்ல-இது*
*நாளைய இலட்சியப் பயணத்திற்கான இன்றைய ஒத்திகை*
*சின்ன விழிகளில் வெளிப்பது உறுதியின் வெளிப்பாடு-இன்று*
*இவள் கனவு நனவாகி நாளை ஈழவிடிவிற்காய் உழைப்பாள்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*சின்னவள் துணிந்து செய்திடும் மருத்துவம் மகத்துவம்*
*எம் மனம் பதைத்திட [illegible]சவள் துடித்திடும் நிலை அந்தரம்*
*தமிழீழப் பெண்களின் [illegible]துவம் இங்கு தனித்துவம்*
*எல்லாம் அரச படை செ[illegible]கிடும் அட்டூழியம்.*

ம.கிறிஸ்துகனிதா,
விசுவமடு.

*சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் சிட்டுக்களே-நீவிர்*
*விளையாட்டாக அல்லாமல் விருப்புடனே*
*ஏற்றமான கல்வி கற்று*
*ஆற்றிடுவீர் மகத்தான சேவைதனை ஈழதேசத்திற்கு.*

எஸ்.ராஜி,
வட்டக்கச்சி.

*மருத்துவமற்று அம்மா இறந்தது*
*மழலை மனதில் புண்ணாய் உள்ளது*
*மருத்துவம் கற்று மகத்தான சேவை செய்ய*
*மனதினில் வைராக்கியம் உள்ளது*

திருமதி ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*பள்ளிப்பருவமதில் சிறகடித்து பறக்கும்*
*இளந்தளிர்களே கல்வியிலே வைத்தியரான*
*உமது பள்ளித் தோழியின் இலட்சியக் கனவு*
*நனவாகி சிகிச்சைகள் பல பெற்றிடுவீர்.*

மு.கங்கா,
வன்னேரிக்குளம்.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்
அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு

## கவனியுங்கள்...




420இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற மன்னார் சாந்திபுரக்கிராமத்தில் மக்கள் குடிநீரை பெற்றுக்கொள்வதற்கு பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இங்கு நான்கு நீர்ப்பொருத்திகள் மாத்திரமே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மக்களுக்கு குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்டவர்களுக்கு இம்மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 1940.04.07 | 30-06-2005 | உதிர்வு 2005.05.31

### திருமதி இராசரத்தினம் நாகேஸ்வரி

வைகாசி 17ஆம் நாள் (31.05.2005) அமரத்துவம் எய்திய எமது அன்புத் தாயின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அம்மாவின் சிவபதம் அடைந்த செய்தி அறிந்து தொலைபேசி மூலமும், கடிதம் மூலமும் நேரடியாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு உதவியவர்களுக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நவாலிவடக்கு, மானிப்பாய்.

தகவல்:- மகன் இ.பத்மசிறீதரன் (சிறீ) EAST - HAM (LONDON)

(சி-12264)


வவுனியா நகரின் சிறந்த வைத்தியசேவைக்கு

அபிஷா தனியார் வைத்தியசாலை

(தமிழ் மகாவித்தியாலயம் அருகாமை, வவுனியா)

குறைந்த கட்டண
பொதுவிடுதி வசதியுடன்
தனியான அறை வசதிகளும் உண்டு.

ஸ்கானிங்
அம்புலன்ஸ் சேவை
புதிய ஆய்வு கூடம்
எக்ஸ் கதிர் சேவை

அபிஷா தனியார் வைத்தியசாலை

தொ.பே.இல: 024-222 1474, 0777 237143

(சி-12145)



அழகிய புடைவைத்தினுசுகளின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்

நிறைந்த ரகங்கள்

கிறீன் பலஸ் எம்போறியம்

நிகரில்லாத தரங்கள்

பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி, திருநெல்வேலி.

(சி-12144)



உங்கள் இன்றைய தெரிவுக்கு...

குமரகுரு

புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி

(சி-12143)

KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.

SM Graphics



EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ எயாரில் பயணியுங்கள்...
யாழ்ப்பாணத்தைக்கண்டுகளியுங்கள்...
அனுபவம் வாய்ந்த நட்புறவு...
நம்பகத்திற்கு எக்ஸ்போ எயார்...

EXPO AVIATION(PVT)LTD.
1E,Stanly Road, Jaffna.
Tel: 021-222 3891/6297 077-2349999/8888
email:Jaffna@expoavi.com/reservations@expoavi.com

(C-11725)



இப்பத்திரிகை கிளிநொச்சி சுழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது